16-31 ஆகஸ்டு 2000 www.padippakam.com ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்



சமூக விரோதியா? தமிழினப் போராளியா?




## புதிய "தடா" சட்டம் மீண்டும் பாசிச பயங்கரம்

படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## கரிசனமா? வக்கிரமா?

ஜப்பான் நாட்டிலுள்ள ஒகினாவா தீவில் உலகின் மிகப் பெரும் பணக்கார நாடுகளின் (ஜி 8) அதிபர்கள் கலந்து கொண்ட மாநாடு சமீபத்தில் நடந்து முடிந்தது. ஏழை நாடுகளைப் பிடித்தாட்டும் வறுமை - கடன் சுமை பற்றிப் பேசி முடிவெடுப்பதுதான் இம்மா நாட்டின் நோக்கமாக அறிவிக்கப்பட்டிருந்தது. மிகவும் வறிய நிலையில் உள்ள சில நாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ள மொத்தக் கடனில், 10,000 கோடி ரூபாய் கடனை ரத்து செய்யப் போவதாகத் தம்பட்டம் அடித்துக் கொண்ட ஏகாதிபத்திய நாட்டின் அதிபர்கள், கடைசியில் 1,500 கோடி ரூபாய் கடனைத்தான் தள்ளுபடி செய்தனர். அதுவும் பலவித நிபந்தனைகளோடு; அதே சமயம், இந்த மாநாட்டை நடத்துவதற்காகச் செலவழிக்கப்பட்ட தொகையோ 3,400 கோடி ரூபாய். அமெரிக்க அதிபர் கிளிண்டன் தங்குவதற்காக வெள்ளை மாளிகையைப் போலக் கட்டப்பட்ட பங்களா மட்டும் 27 கோடி ரூபாயை விழுங்கியிருக்கிறது!

## பெண்களும் யூத மதமும்

யூத மதக் கோட்பாடுகளின்படி பெண்கள் தங்களின் தலைகளில் மதக் குல்லாய் அணிந்து கொண்டு தொழுவதும், பொது இடங்களில் பாடுவதும் மதத்திற்கு எதிரானது. ஆனால், இசுரேல் நாட்டு உச்சநீதி மன்றம் யூதப் பெண்களுக்கும் இந்த உரிமையை வழங்கி சமீபத்தில் தீர்ப்பளித்தது. இதையடுத்து, 100 யூதப் பெண்கள் தங்கள் தலைகளில் மதக் குல்லாய் அணிந்து கொண்டு, யூத மதத்தினர் புனிதமாகக் கருதி வழிபடும் ஜெருசலேம் நகரிலுள்ள அழும் சுவற்றின் அருகே ஒன்று கூடி, இறைவனைத் துதித்துப் பாடல்களைப் பாடித் தொழுகை நடத்தினர். இது யூத மத வெறியர்களை எரிச்சல்படுத்தவே, அவர்களைச் சாந்தப்படுத்துவதற்காக இசுரேல் அரசு, யூதப் பெண்கள் மதக் குல்லாய் போன்ற யூத மத வழிபாட்டுச் சின்னங்களை அணிந்து கொண்டு அழும் சுவற்றின் அருகே சென்று தொழுகை நடத்தினால் ஏழு ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்படும் எனச் சட்டம் போட்டுவிட்டது.

## எது வீண்செலவு?

மகாராட்டிரா மாநில அரசு குறைந்த விலையில் உணவு வழங்கும் நோக்கத்தில் "ஜுங்கா பகார்" என்ற சிறு உணவு விடுதிகளை அம்மாநிலமெங்கும் நடத்தி வந்தது. இவ்வுணவு விடுதிகளில் ஒரு ரூபாய்க்கு காய்கறிக் கூட்டும், பஜ்ரா ரொட்டியும் வழங்கப்பட்டன. இதற்காக வருடமொன்றுக்கு 60 கோடி ரூபாய் அம்மாநில அரசு செலவு செய்தது. இப்படி செலவு செய்வது கட்டுப்படியாக வில்லை என்று கூறி, இப்பொழுது இந்தத் திட்டத்தை இழுத்து மூடிவிட்டது காங்கிரசு கூட்டணி அரசு. அதே சமயம், சிவசேனா கட்சியைச் சேர்ந்த 393 இந்துமத வெறியர்களின் பாதுகாப்பிற்காக, வருடமொன்றுக்குகிட்டதட்ட 12 கோடி ரூபாயை அள்ளி வீசி வருகிறது அம்மாநில அரசு. சமூக நலத் திட்டங்களுக்குச் செலவழிப்பது தண்டச் செலவு எனும் பொழுது, இச்சமூக விரோதிகளின் பாதுகாப்பிற்காகச் செலவழிக்கப்படுவதை என்னவென்பது?

## மீண்டும் மான்சாண்டோ அபாயம்

இரண்டாண்டுகளுக்கு முன்பு, அமெரிக்க விதை நிறுவனமான மான்சான்டோ மலட்டுப் பருத்தி விதைகளை இந்திய விவசாயிகளின் தலையில் கட்ட முயன்றபொழுது, நாடெங்கும் எழுந்த எதிர்ப்பின் காரணமாக அத்திட்டம் தோல்வியடைந்தது. இப்பொழுது விவசாயிகளின் எதிர்ப்பு தணிந்து உள்ளதாகக் கருதி, மரபியல் அறிவியல்படி தயாரிக்கப்பட்ட பருத்தி விதைகளைக் கொண்டு களப் பரிசோதனை நடத்த மான்சான்டோவிற்கு நெருக்கமான மாஹிகோ நிறுவனத்திற்கு மைய அரசு அனுமதி அளித்துள்ளது. சென்ற முறை போல களப் பரிசோதனை தடைப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக, "இந்தப் பருத்தி விதைகள் மறுமுளைப்புத் திறனற்றவை அல்ல" என்று விளம்பரமும் செய்து வருகிறது.

## உண்டியல் கொள்ளைக்கு நிரந்தர அனுமதி

தெருவுக்குத் தெரு கோயில்களைக் கட்டி வைத்துக் கொண்டு பக்தி வியாபாரம் செய்து வரும் கும்பல்கள், இந்தியாவிலேயே உத்திரப் பிரதேச மாநிலத்தில்தான் அதிகமுள்ளன. இந்தக் கோயில்கள் பார்ப்பன மேல் சாதியினர், இந்து மத சாமியார்களின் ஆதிக்கத்தின் கீழ்தான் இருந்து வருகின்றன. ஆண்டவன் பெயரால் இக்கும்பல் அடித்த் கொள்ளை நாறிப் போனதால், 1976-இல் இந்தக் கோயில்களைக் கட்டுப்படுத்தும் நிரந்தரமான சட்டம் இயற்றப்பட்டது. 50,000 ரூபாய் சொத்து மதிப்பு கொண்ட அல்லது ஆண்டு உண்டியல் வருமானம் 1200 ரூபாய் வரை பெறும் கோயில்கள் அனைத்தும் இச்சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு, கோயில் சொத்துக்களை அரசின் அனுமதியின்றிக் கைமாற்றுவதும் தடை செய்யப்பட்டது. இச்சட்டத்தை நீக்கக் கோரி கடந்த இருபது வருடங்களாக பார்ப்பன மேல்சாதியினரும், இந்துமதச் சாமியார்களும் ஊளையிட்டு வந்ததை உ.பி. மாநில பா.ஜ.க. அரசாங்கம் தற்பொழுது நிறைவேற்றி வைத்துவிட்டது. சட்டம் ரத்து செய்யப்பட்டு, கோயில் உண்டியல் கொள்ளைக்கு அரசின் ஆசி வழங்கப்பட்டது.

## வரிப் பணத்தைத் தின்று கொழுப்பதே தனியாரின் திறமை

ஒரிசா மாநில அரசு மின்துறையைத் தனியார்மயமாக்க முடிவெடுத்த பொழுது, "அதற்கு ஆலோசனை வழங்குவதற்கு இந்திய நாட்டு நிறுவனங்களை வைத்துக் கொள்ளக் கூடாது; அமெரிக்காவையும், இங்கிலாந்தையும் சேர்ந்த இரு நிறுவனங்களைத் தான் வைத்துக் கொள்ள வேண்டும்" என உலகவங்கி கட்டளையிட்டது. இதற்கு உடன் பட்ட ஒரிசா மாநில அரசு, உலக வங்கி குறிப்பிட்டு இரு நிறுவனங்களோடு, "44 மாதங்களில் வேலையை முடிக்க வேண்டும்; அதற்குரிய கட்டணம் 41.97 கோடி ரூபாய்" என ஒப்பந்தம் போட்டுக் கொண்டது. குறிப்பிட்ட காலக் கெடுவும் முடிந்து விட்டது; கட்டணத் தொகையும் பட்ஜெட்டை மீறி 73 கோடி வரை கொடுக்கப்பட்டுள்ளது. ஆனாலும், வேலை முழுமையாக முடிந்த பாட்டைக் காணோம். மைய அரசின் தணிக்கை அதிகாரியே இதனைத் தண்டச்செலவு எனக் குறிப்பிட்டுள்ளார்.

●●●

ஒகினாவா மாநாட்டில் கலந்து கொண்ட ஏகாதிபத்திய நாடுகளின் அதிபர்கள்: ஏழை நாடுகளின் பெயரில் நடந்த ஆடம்பரக் கூத்து.



www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 15

## இதழ் 18 - 19

1 ஆக. 2000 - 31 ஆக. 2000

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 120.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.


# கிரிமினலிடம் பணிவு! மக்கள் மீது ஒடுக்குமுறை!!

பிரபல கன்னட நடிகர் ராஜ்குமார் உட்பட நான்கு பேரைப் பணயக் கைதிகளாகச் சந்தன மரக் கடத்தல் வீரப்பன் பிடித்து வைத்த விவகாரத்தை தமிழ்நாடு, கர்நாடக மாநில அரசுகள் கையாண்ட முறை மக்களுக்குப் பல உண்மைகளையும், படிப்பினைகளையும் கொடுத்திருக்கிறது. பணயக் கைதிகளை விடுவிப்பதற்கு ஈடாக வீரப்பன் கும்பல் பணயத் தொகையோ, பொது மன்னிப்போ கேட்கவில்லை. அரசியல் தன்மையுடைய 10 கோரிக்கைகளை முன் வைத்திருக்கிறது. 1. காவிரிப் பிரச்சனைக்கு விரைவாகத் தீர்வு காண வேண்டும், 2. இடைக்காலத் தீர்ப்பின்படி 205 டி.எம்.சி. நீரைத் தமிழ்நாட்டுக்கு உடனடியாகத் தர வேண்டும், 3. கர்நாடகாவில் 1991-இல் நடந்த கலவரத்தில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நட்ட ஈடு தர வேண்டும், 4. பெங்களூரில் திருவள்ளுவர் சிலை திறக்கப்பட வேண்டும், 5. கர்நாடகாவில் தமிழ் இரண்டாவது ஆட்சி மொழியாக்கப்பட வேண்டும், 6. மைசூரில் விசாரணையின்றி "தடா" கைதிகளாகச் சிறையிலடைக்கப்பட்டிருக்கும் 51 தமிழர்களை விடுதலை செய்ய வேண்டும், 7. தமிழ்நாட்டுச் சிறையிலிருக்கும் தமிழின இயக்கத்தவர்கள் 5 பேரை விடுதலை செய்ய வேண்டும், 8. கர்நாடக மாநில கோலார் அருகில் உயிரோடு எரித்துக் கொல்லப்பட்ட 9 தாழ்த்தப்பட்ட குடும்பங்களுக்கு நட்டஈடு தர வேண்டும், 9. வீரப்பனைத் தேடுகிறோம் என்ற பெயரால் தமிழ்நாடு, கர்நாடகா அதிரடிப் போலீசு நடத்திய மனித உரிமை மீறல் அக்கிரமங்களை விசாரிக்கும் சதாசிவம் கமிசனுக்குள்ள தடையை நீக்கி, விரைந்து விசாரணை நடத்தி, குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும், 10. மாஞ்சோலை தொழிலாளர் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காண வேண்டும்; தேயிலைத் தோட்டத் தொழிலாளருக்கு தினக்கூலியாக குறைந்தபட்சம் 150 ரூபாயும்; தேயிலை விலை 15 ரூபாயுமாக நிர்ணயிக்க வேண்டும். இவைதான் வீரப்பனின் கோரிக்கைகள்.

இந்தக் கோரிக்கைகள் அனைத்தும் நியாயமானவை. இவற்றுக்காக யாரையும் பணயக் கைதிகளாகப் பிடித்து வைக்க வேண்டிய தேவையே இல்லை. எந்தவொரு நேர்மையான, ஜனநாயக அரசும் தானாகவே இவற்றை நிறைவேற்றியிருக்க வேண்டும். ஆனால், ராஜ்குமார் போன்ற யாராவது ஒரு பிரபலத்தைப் பிடித்து வைத்துக் கொண்டு மிரட்டினால்தான் இந்த நியாயமான கோரிக்கைகளைப் பரிசீலிப்போம் என்கிறது எருமை மாட்டுத்தனமான அரசு. இதை மறைத்துவிட்டு, **வீரப்பனின்** கோரிக்கைகளில் "தமிழ் - தமிழர் - தமிழ்நாடு" என்கிற அரசியல் வாடை வீசுவதால் கர்நாடகா வாழ் தமிழர்களுக்கு ஆபத்தாக முடியும் என்று மிரட்டும் **பாணியில் கர்நாடகா முதல்வரின் குரலை** எதிரொலிக்கின்றன, பார்ப்பன ஏடுகள்.

குடிநீர், பேருந்து வசதி போன்ற அடிப்படை உரிமைகளுக்காகச் சட்டபூர்வமாக, அமைதியாக, ஜனநாயக வழிகளில் போராடும் மக்கள் மீது போலீசை ஏவி மிருகத்தனமாகத் தாக்குவதே அரசுக்கு வழக்கமாக உள்ளது. குறிப்பாக, வீரப்பன் கோரிக்கைகளில் ஒன்றான மாஞ்சோலை பிரச்சினைக்கு ஊர்வலம்போன தொழிலாளர்களைத் தாக்கி, தாமிருபரணி ஆற்றில் தள்ளி 17 பேரைக் கொன்றது. தேயிலைக்கு நியாய விலை கேட்டுப் போராடிய நீலகிரி விவசாயிகளை உள்ளாடையோடு ஊர்வலமாக இழுத்துக் கொண்டு போய், நிர்வாணமாக்கி அடித்துத் துன்புறுத்தியிருக்கிறது. ஆனால், கன்னட நடிகர் ராஜ்குமார் தன் வர்க்கத்தைச் சேர்ந்த மேட்டுக்குடி, பிரபலம், கருப்புப் பண முதலை பணயக் கைதியாகச் சிக்கிக் கொண்டார் என்பதற்காகத் துடிதுடித்துப் போகின்றன மைய, மாநில அரசுகள். எந்தெந்தக் கோரிக்கைகள் இந்த ஆட்சியாளர்களுக்கு எட்டிக்காயாகக் கசந்தனவோ, அவற்றையே பரிவுடன் பரிசீலிப்பதாக ஒப்புக் கொள்கின்றன. பரந்துபட்ட மக்களின் உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் விவகாரங்களில் இவ்வளவு அக்கறையும் அவசரமும் காட்டுவதுண்டா?

இந்த ராஜ்குமார் கடத்தல் சம்பவம் காட்டும் இன்னொரு உண்மை என்னவென்றால், மக்கள் தமது நியாயமான கோரிக்கைகளுக்கு அமைதியான, சட்டபூர்வமான, ஜனநாயக வழிகளில் போராடினால் தீர்வுகாண முடியாது; எதிரிகளின், அவர்களுடைய அரசு அமைப்பின் உயர்நிலையையே பாதிக்கும் வகையிலான போர்க்குணமிக்க போராட்டங்களால் மட்டுமே தீர்வுகாண முடியும். அதேசமயம், இப்போது வீரப்பன் கும்பல் செய்திருப்பதைப் போன்ற குழு சாகச நடவடிக்கைகளால் மக்கள் தமது கோரிக்கைகளைச் சாதித்துக் கொள்ள முடியாது. பரந்துபட்ட மக்கள் பங்கேற்பு இல்லாத, குழு சாகசங்கள் எல்லாமே மக்களுக்குப் பொறுப்பானவையாக இருக்க மாட்டா; துரோகங்களுக்கும், சமரசங்களுக்கும், சுய அழிவுகளுக்கும்தான் வழி வகுக்கும். குழு சாகச நடவடிக்கைகளே தமிழின விடுதலைக்கான வழி என்று செயல்படும் தமிழினவாதக் குழுக்கள், சமூக விரோதச் செயல்களிலும், குழுச் சண்டையிலும் மூழ்கிச் சீரழிவதைக் காண்கிறோம். உண்மையான புரட்சிகர மக்கள் இயக்கங்கள் மீது கூடத் தீவிரவாத முத்திரை குத்தி ஒடுக்குவதற்கு, இந்தக் குழு சாகச நடவடிக்கைகள் எதிரிகளுக்கு வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருகின்றன. மேலும், வீரப்பன், ஜெயலலிதா போன்ற அம்பலப்பட்டுப் போன கிரிமினல் குற்றவாளிகள் மக்களின் நியாய்மான கோரிக்கைகளின் பின்னே ஒளிந்து கொள்வது, தண்டனைகளில் இருந்து தப்புவதற்குத்தானே தவிர, மக்கள் மீதுள்ள கரிசனையினால் அல்ல; இப்படிச் செய்வதினால் மக்களின் நியாயமான கோரிக்கைகள் - உரிமைகளையும் கூடக் களங்கப்படுத்துகிறார்களே தவிர, அவற்றுக்கு வலுச் சேர்ப்பதில்லை.

படிப்பகம்

www.padippakam.com

# "தமிழினப் புரட்சிக்காரன்"
## -சமூக விரோதி வீரப்பனின் புது அவதாரம்

கடந்த சில வாரங்களுக்கு முன்புதான், "சந்தனமரக் கடத்தல் வீரப்பனால், இப்போது பிரச்சினை எதுவும் இல்லை என்பதால் 'மகிழ்ச்சி அடைகிறேன்", என்று கர்நாடக முதலமைச்சர் சொன்னார். ஆனால், இப்போது பிரபல கன்னட நடிகர் ராஜ்குமாரைப் பணயக் கைதியாகப் பிடித்துக் கொண்டு போனதைத் தொடர்ந்து, வீரப்பன் விவகாரம் மீண்டும் சூடுபிடித்துள்ளது. பரபரப்புச் செய்திகளையும் வதந்திகளையும் பரப்பும் பத்திரிக்கைகளுக்கு நல்ல வியாபாரந்தான்!

கன்னட எம்.ஜி.ஆர். என்றழைக்கப்படும் ராஜ்குமார் மட்டுமல்ல, அவரது இரண்டு மகன்களும், மருமகன்களும் கூட பிரபல கன்னட நடிகர்கள். கர்நாடகாவின் முன்னாள் முதல்வர் பங்காரப்பாவின் சம்பந்தி. ராஜ்குமாரின் பூர்வீகம் கர்நாடகா எல்லை அருகே தமிழ்நாட்டுக்குள் இருக்கும் தொட்ட காஜனூர் என்னும் குக்கிராமம். சத்தியமங்கலம் மலை மீதுள்ள அக்கிராமத்தில் 4 ஏக்கர் விவசாய நிலமே அவரது பூர்வீக சொத்து. இன்று 75 ஏக்கர் நிலமும் 80 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட பளிங்கு பண்ணை மாளிகையும் அங்குண்டு. கோடி கோடியாகக் கருப்புப் பணமும் குவித்திருக்கிறார். எம்.ஜி.ஆர்., என்.டி.ஆரின் சமகாலத்தவர்; அவர்களைப் போல அரசியலில் ஈடுபடவில்லை என்றாலும், ஏராளமான கன்னட வெறி ரசிகர்களைப் பெற்றிருப்பதால் அரசியல் செல்வாக்குடையவர்.

இந்தக் காரணங்களால், கர்நாடகா, தமிழக அரசுகளும் மட்டுமல்ல, மத்திய அரசும் கடத்தப்பட்ட ராஜ்குமாரை விடுவிப்பதில் அதீத அக்கறை காட்டுகின்றன. இந்த வகையில் இதுவரை வீரப்பனால் கடத்திச் சென்று பணயக் கைதியாக வைக்கப்பட்டவர்களிலேயே மிகப்பெரிய கை, நடிகர் ராஜ்குமார்!

நள்ளிரவுக்கு மேல் தகவல் அறிந்த கர்நாடகா முதல்வர், ராஜ்குமார் குடும்பத்தோடும், அம்மாநிலப் போலீசு மந்திரியோடும் தமிழக முதல்வரைச் சந்தித்தார்; அதிரடிப் படை நடவடிக்கைகளை நிறுத்துவது, இரு மாநில அரசுகள் சார்பாக "நக்கீரன்" கோபாலை தூதராக அனுப்புவது என்றும் முடிவு செய்யப்பட்டன.

அதற்குள்ளாகவே பெங்களூரில் கன்னட ரசிகர்க்ளின் கலவரம் தொடங்கி விட்டது. இரண்டு நாட்கள் கடையடைப்பு, தமிழர் கடைகள், தமிழ்ப் பத்திரிக்கைகள் தாக்கி சூறையாடப்பட்டன. ஒரு தமிழர் குத்திக் கொல்லப்பட்டார். தமிழ்நாட்டுப் பதிவு பெற்ற வாகனங்கள் தாக்கப்பட்டன. இத்தனைக்கும் மத்திய, மாநிலப் போலீசு காவலிருந்தது. இதற்கிடையே வீரப்பன் தமிழ்த் தீவிரவாதிகளுடன் கூட்டுச் சேர்ந்திருப்பதாகவும், பொது மன்னிப்பும், 50 கோடி ரூபாய் பணயத் தொகை கேட்பதாகவும் பத்திரிக்கைகள் பலவும் வதந்திகளைப் பரப்பின.

* * *

காட்டு விலங்குகளை வேட்டையாடுவதைத் தொழிலாகத் துவங்கிய வீரப்பன், ஆரம்பத்தில் யானைகளைக் கொன்று, தந்தங்களைக் கடத்தி விற்று வந்தான். யானைத் தந்தங்கள் ஏற்றுமதிக்குத் தடைவிதிக்கப்பட்ட பின், சந்தன மரங்களை வெட்டிக் கடத்துவதைத் தொடர்ந்தான். இதற்குக் கூட்டாளிகளாக தமிழக, கர்நாடகா காட்டிலாகா அதிகாரிகளும், அ.தி.மு.க. - காங்கிரசு எம்.எல்.ஏ.க்களும் இருந்திருக்கின்றனர். இரண்டுமுறை பிடிபட்ட வீரப்பன் இவர்களின் உதவியுடன் தப்பியிருக்கிறான். கொள்ளையில் பங்கு போட்டுக் கொள்வதில் ஏற்பட்ட தகராறு காரணமாக அரசியல்வாதிகளுக்கும் காட்டிலாகா அதிகாரிகளுக்கும் வீரப்பனுக்கும் உறவு முறிந்தது.

1990-லிருந்து வீரப்பனைப் பிடிப்பதற்காக 10 ஆண்டுகளாக 1000 பேர் கொண்ட அதிரடிப்படை; இதுவரை 180 கோடி ரூபாய் செலவு செய்தும் வீரப்பனைப் பிடிக்கமுடியவில்லை. கொலைவெறியன் தேவாரமும், அவனது வாரிசு கோபாலகிருஷ்ணனும் வெற்று சவடால் அடித்து வந்தனர்.

சித்தரவதை, கொலை, பாலியல் வன்முறையில் ஈடுபட்ட தேவாரம் கும்பலின் மக்கள் விரோத அதிரடி அக்கிரமங்கள் பெருகின. அவர்கள் வீரப்பனைப் பிடிப்பதற்குப் பதில் கோழி, ஆடுகளையும் பெண்களையும் வேட்டையாடுவதிலேயே அக்கறை காட்டினர். அதிரடிப்படையின் அட்டூழியங்களைவிட வீரப்பன் எவ்வளவோ மேல் என்ற முடிவுக்கு வந்த அக்கிராம மக்களில் பலர் வீரப்பனுக்கு தகவல், உணவு மற்றும் பிற தேவைகளைக் கொண்டு சேர்ப்பதற்கு உதவுகின்றனர்.

அதிரடிப்படையின் தேடுதல் நடவடிக்கை காரணமாக சந்தனமரக் கடத்தல் தொழிலைத் தொடர முடியாது போன வீரப்பன், உள்ளூர் அளவில் ஆட்களைக் கடத்திப் பணயத்தொகை பெறுவதில் இறங்கி, கணிசமான அளவு பணமும் பெற்றான். 1994-இல் முதன்முறையாக இரண்டு பேரோடு ஒரு உயர் போலீசு அதிகாரியைக் கடத்தினான். 1000 கோடி ரூபாய் பணயத் தொகையும், கருப்புப் பூனைப் படைப் பாதுகாப்பும், பொது மன்னிப்பும் கோரினான். அந்த முயற்சி தோல்வி அடையவே, பணயக் கைதிகளைத் தானே விடுவித்தான். 1995 அந்தியூர் காடுகளில் இருந்து 3 காட்டிலாகா ஊழியர்களைக் கடத்தி, மூன்று கோடி ரூபாயும் தனது தம்பி போலீசால் கொல்லப்பட்டதற்கு விசாரணையும் கோரினான். 3 கோடி ரூபாய் கொடுத்து பணயக் கைதிகளை ஜெயலலிதா அரசு மீட்டது. ஆனால் கர்நாடகா அதிரடிப் படை அதிகாரி சங்கர் பத்ரியும், தேவாரமும் அது தனது சாதனை எனப் பீற்றிக் கொண்டனர்.

1997-இல்



**ராஜ்குமாரின் மனைவி பர்வதம்மாளுக்கு ஆறுதல் கூறும் தமிழக, கர்நாடக மாநில முதல்வர்கள்: இந்த அக்கறை மனித நேயமா? வர்க்கப் பாசமா?**



படிப்பகம்

www.padippakam.com

ஜூலையில் 10 கர்நாடகா காட்டிலாகா ஊழியர்களையும், அதே ஆண்டு அக்டோபரில் ஆறு சுற்றுலாப் பயணிகளையும் பணயக் கைதிகளாகப் பிடித்தான், வீரப்பன். இரண்டு முறையும் பல கோடி ரூபாய் பணயத் தொகையாகவும், பொது மன்னிப்பும் கோரினான் வீரப்பன். ஒரு முறை கர்நாடகா அரசு எதிர்த்தது; மறுமுறை, முதலில் வீரப்பன் சரணடைந்து, கணிசமான காலம் காவலில் இருக்க வேண்டும் என இருமாநில அரசுகளும் நிபந்தனை விதித்தன. அதை ஏற்கும் பட்சத்தில் வீரப்பனை காவலில் வைப்பதற்கு மதுராந்தகம் அருகே ஒரு சுற்றுலா இல்லத்தையும் தமிழ்நாடு அரசு தயார் செய்தது. அப்படிச் சரணடைந்தால் தான் கொல்லப்படலாம் என்கிற பயத்தால் பின்வாங்கிக் கொண்டான், வீரப்பன்.

அதன்பிறகு, வீரப்பனின் போக்கில் ஒரு மாற்றம் இருப்பதாகத் தெரிகிறது. திருச்சி, பெரம்பலூர், கடலூர் மாவட்டங்களின் சந்திப்புப் பிரதேசங்களை மையமாகக் கொண்டு, கடந்த 15 ஆண்டுகளாக செயல்பட்டுவரும் தமிழினவாதக் குழுவுடன் கூட்டுச் சேர்ந்து, அக்குழுவின் வழிகாட்டுதலில் வீரப்பன் இயங்கி வருவதாக சில பத்திரிக்கைகள் எழுதி வருகின்றன. இது இன்னமும் அதிகாரபூர்வமாக உறுதி செய்யப்படாமலேயே இருந்து வருகிறது.

இதனால்தான் அனாவசியமான, சில்லறை ஆட்கடத்தல்களில் வீரப்பன் ஈடுபடுவதை நிறுத்திக் கொண்டு, இதுவரை ஆயுதங்கள் மற்றும் பிற பொருட்களைத் திரட்டுவதில் ஈடுபட்டிருந்தான். இதன் ஒரு பகுதியாக 20 மாதங்களுக்கு முன்பு வெள்ளித் திருப்பூர் போலீசு நிலையத்துக்குள் புகுந்து சில ஆயுதங்களைக் கைப்பற்றிச் சென்றான், வீரப்பன். அந்த நடவடிக்கையில் தமிழினவாதக் குழுவினர் சிலர் சம்பந்தப்பட்டிருப்பதாக அப்போதே செய்திகள் வந்தன.

சந்தனமரக் கடத்தல் வீரப்பன், தமிழினவாதக் குழுவினரோடு வெறுமனே கூட்டுச் சேர்ந்து விட்டானா அல்லது அதன் அரசியலை ஏற்றுக் கொண்டு, அந்த அமைப்பிலேயே சேர்ந்து விட்டானா என்பது தெரியவில்லை. முன்பெல்லாம் ஆட்களைக் கடத்திக் கொண்டு போகும் வீரப்பன் பல கோடி ரூபாய் பணயத் தொகையும், பொது மன்னிப்பும் மட்டுமே கோருவான். பத்திரிக்கைகள், குறிப்பாக வட இந்தியப் பத்திரிக்கைகள் அவ்வாறுதான் வீரப்பன் கேட்பதாகத் தலைப்புச் செய்தியே எழுதிவிட்டன. ஆனால் வீரப்பனோ, இந்த முறை அது மாதிரியான கோரிக்கைகள் எதுவும் வைக்கவில்லை. தமிழினவாதக் குழுவால் இயக்கப்படுவதைப் போன்று தெளிவாகவும் நெறிப்படுத்தப்பட்டதாகவும் அவனது கோரிக்கைகள் உள்ளன.

* * *

வீரப்பனுடைய கோரிக்கை வழக்கம் போல பணயத் தொகையும் பொது மன்னிப்புமாக இருந்தால் தமிழ்நாடு, கர்நாடக மாநில அரசுகள் எளிதில் சமாளித்திருக்க முடியும். ஆனால் கர்நாடகா அரசின் தமிழர் விரோத, ஜனநாயக விரோதத் தன்மைகளையும், தமிழக அரசின் தமிழினத் துரோக, ஜனநாயக விரோதத் தன்மைகளையும் அம்பலப்படுத்தி நிர்பந்திக்கும் வகையில் வீரப்பன் கும்பலின் கோரிக்கைகள் அமைந்துவிட்டன. எனவே, இரண்டு மாநில அரசுகளுக்குமே அவை தர்ம சங்கடமான பிரச்சினையைத் தோற்றுவித்தன. இருந்தாலும் பணயக் கைதியாக சிக்கியிருப்பவரின் பிரபலம், செல்வாக்கு காரணமாக, வீரப்பனின் கோரிக்கைகள் அனைத்துக்கும் சாதகமாக இருப்பதைப் போல தோன்றும் பதிலளித்திருக்கின்றன.



வீரப்பனுடன் பேச்சு நடத்த அரசின் தூதராகச் சென்ற "நக்கீரன்" ஆசிரியர் கோபால் மற்றும் கடத்தப்பட்ட ராஜ்குமார். (இடமிருந்து மூன்றாவது)

கைதிகளை விடுதலை செய்வது, வள்ளுவருக்கு சிலை வைப்பது போன்ற ஓரிரு கோரிக்கைகள் மட்டுமே திட்டவட்டமாக ஏற்கப்பட்டிருக்கின்றன. மற்ற பிரச்சினைகளை ஒதுக்கவும் முடியாமல், ஏற்கவும் முடியாமல் இரு அரசுகளுமே சிக்கியிருக்கின்றன. காவிரி நீர் பிரச்சினையிலும், தமிழை கர்நாடகாவில் இரண்டாவது ஆட்சிமொழி ஆக்குவதிலும் கன்னட மக்களின் கடும் எதிர்ப்பு இருக்கும்; மாஞ்சோலை, தேயிலைத் தோட்டத் தொழிலாளர் கோரிக்கைகள் கருணாநிதிக்கு ஏற்புடையன அல்ல. மனித உரிமை மீறல்கள், அதனால் பாதிக்கப்பட்டவருக்கு நிவாரணம் வழங்குவது ஆகியவை இருமாநில அரசுகளுக்கும் நெருக்கடி தருவன. எனவே, இந்தப் பிரச்சினைகளில் எல்லாம் அதிகார வர்க்கத் தோரணையில் மழுப்பலான பதில்களே அளிக்கப்பட்டுள்ளன.

இருமாநில அரசுகளின் பதில் நடவடிக்கைகளை ஏற்று வீரப்பன் பணயக் கைதிகளை விடுத்தாலும் சரி, திட்டவட்டமான பதில் இல்லை என்று கூறி நிராகரித்து, மேலும் சிக்கல் அதிகமானாலும் சரி; தமிழினவாதிகளின் பின்னணி இருந்தபோதும், பணயக் கைதிகளின் உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் எதையும் வீரப்பன் செய்யப் போவதில்லை. ஏனென்றால் வீரப்பன் இனிமேலும் பழைய கிரிமினல் குற்றவாளியாக தோற்றம் தர விரும்பவில்லை. அநீதி இழைக்கப்பட்ட தமிழினத்துக் காகப் போராடும் "புரட்சித் தலைவ"னாக உருமாறவே விரும்புகிறான். கர்நாடகாவில் வாழும் தமிழர்களுக்கு எதிரான பெருமளவிலான கலவரம் ஏற்பட்டு இனப்பிரச்சனை கூர்மையாக வேண்டும் என்று விரும்பினால் கடத்தல் காட்சி நீடிக்கும்.

எவ்வாறாயினும், தான் பொது மன்னிப்புக் கோரி, இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதைவிட, நேரடியாக அரசியலில் குதித்து, பிரபலமடைந்து, தமிழினத் தலைவனாக மதிக்கப்பட்டு காட்டை விட்டு நாட்டுக்குத் திரும்புவதுதான் பாதுகாப்பானது என்று வீரப்பன் இப்போது நம்புகிறான்.

* * *

வீரப்பனுக்குப் பொது மன்னிப்பு வழங்குவதும், அரசியலில் அனுமதிப்பதும் சரியா, தவறா என்பது பற்றி அரசியல் கட்சிகள், செய்தி ஊடகங்கள் முதல் பொது மக்கள் வரை எல்லா மட்டங்களிலும் வாதப் பிரதிவாதங்கள் நடக்கின்றன.

வீரப்பனைத் தேடுவதற்காக இதுவரை 180 கோடி ரூபாய் விரயமாகி இருக்கிறது. 10 ஆயிரம் போலீசார் வேலை வீணடிக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் வீரப்பனைப் பிடிக்க முடியும் என்ற நம்பிக்கையும்

www.padippakam.com

இல்லை. எனவே, இந்தப் பிரச்சினை தீர வீரப்பனுக்குப் பொது மன்னிப்பு வழங்கு வதைத் தவிர வேறு வழியில்லை — இது நடைமுறை வசதியை வைத்து எதையும் பார்க்கும் காரியவாத அணுகுமுறையாளர் களின் நிலை. இப்படிப்பட்டவர்கள்தாம், இலஞ்ச ஊழல் - அதிகார முறைகேடுகள் இருந்தாலும், ஜெயலலிதா - எம்.ஜி.ஆர். ஆட்சியில் பணப்புழக்கமும், தொழில் முன்னேற்றமும், செல்வச் செழிப்பும் இருந் தது, அதுவே மேலானது என்று வாதிடும், சமூக விரோத - கிரிமினல்கள் - அரசியல்வா திகளின் சமூக ஆதரவாளர்கள்.

கொலைகள், கடத்தல் முதலிய குற்றங்கள் புரிந்த வீரப்பன், ஆட்கடத்தல் என்ற இன்னொரு கிரிமினல் குற்றத்துக்கு ஈடாக அரசியல் கோரிக்கையும் பொது மன்னிப்பும் கேட்பதை எப்படி ஏற்க முடியும், அதற்குரிய அருகதை வீரப்ப னுக்குக் கிடையாது என்று பார்ப்பன - பனியா அறிவுஜீவிகள் வாதிடுகின்றனர். இப்படிப் பேசுவதற்கு அவர்களுக்குத் துளியும் யோக்கியதை கிடையாது.

கிரிமினல் மாஃபியாத் தலைவர்கள் எம்.எல்.ஏ.. எம்.பி.க்கள்., மந்திரிகள் ஆவதும், எம்.எல்.ஏ., எம்.பி.க்கள், கிரிமினல்கள் ஆவதும் பார்ப்பன - பனியா ஆளும் வர்க்கக் கட்சிகளில் சர்வ சாதாரண மாக உள்ளது. இவர்களில் பலர் கிரிமினல் குற்றங்களுக்காகத் தேடப்பட்டு, தலைமறைவானவர்கள் என்று போலீசு - வழக்கு மன்றங்களால் அறிவிக்கப் பட்டும் போலீசு பாதுகாப்புடன் வெளிப்ப டையாக உலவி, அரசுப் பதவிகளில் நீடிக்கி றவர்கள். கொலை, கொள்ளை, கடத்தல், கற்பழிப்பு குற்றங்கள் செய்வதையே தொழி லாகக் கொண்ட கிரிமினல் கும்பலான சிவ சேனா தலைவன் பால்தாக்கரே சட்டத்திற்கு அப்பாற்பட்ட அரசியல் தலைவனாக பவனி வருகிறான். இதையெல்லாம் சகித்துக் கொள்ளும் பார்ப்பன - பனியா அறிவு ஜீவிகளுக்கு இன்னொரு கிரிமினல் வீரப்பனுக்கு மட்டும் பொது மன்னிப்பு கூடாது என்று கூறும் யோக்கியதை கிடை யாது.

வீரப்பனின் பொது மன்னிப்பை பல்வேறு சமூக நீதிப் பிழைப்புவாதக் கட்சி களும் ஆதரிக்கின்றன. இவர்கள் "பூனை இடது பக்கம் போனால் என்ன, வலது பக்கம் போனால் என்ன, எலியைப் பிடித்தால் சரி" என்ற கொள்கைக்காரர்கள். பால்தாக்கரே சாதி, மத, இனவெறியனாகவோ, கிரிமினல் மாஃபியாத் தலைவனாகவோ எப்படியா னால் என்ன, விடுதலைப் புலிகளை ஆதரிப் பதாலேயே ஏற்போம்; பார்ப்பன - சனாதன இந்துமத வெறிக் கும்பலின் தலைவர்களில் ஒருவரான இல. கனேசன் தமிழ்வழிக் கல்வியை ஆதரிப்பதாலேயே ஏற்போம்; ஜெயலலிதா பார்ப்பன - பாசிச கொள்ளைக் காரியானாலும் காவிரிப் பிரச்சினைக்கு உண்ணாவிரதமிருந்தால் ஆதரிப்போம்; - என்று பலவாறு கடைந்தெடுத்த சந்தர்ப்ப வாத அரசியல் நடத்துபவர்கள்தாம் இந்த சமூகநீதிப் பிழைப்புவாதிகள்.

ஏற்கனவே, பூலான்தேவி, மல்கான்சிங் போன்ற சம்பல் கொள்ளைக்காரர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கப்பட்டு, அரசி யலில் குதித்து, பிரபலங்கள் ஆகியிருப் பதை எடுத்துக் காட்டாகக் காட்டுகிறார்கள், சமூகநீதிப் பிழைப்புவாதிகள். கிரிமினல் குற்றங்கள் புரிந்து ஏராளமாகக் கொள்ளைய டிப்பது, அதன்மூலம் அடையும் பிரப லத்தைப் பயன்படுத்தி அரசியல் தலை மைக்கு உயர்வதும் ஏற்கனவே நடைமு றையில் உள்ளதுதான்; எனவே இதையே ஏற்கக்கூடிய பொதுவழிகளில் ஒன்றாக அங்கீகரிக்க வேண்டும் என்பதுதான் சமூக நீதிப் பிழைப்புவாதிகளின் அணுகுமுறை.

பூலான் தேவியையும், வீரப்பனையும் ஒப்பிடுவது முதலில் அயோக்கியத்தன மாகும். தாழ்த்தப்பட்ட பெண்ணான பூலான் தேவி முதலில் கணவனது கொடுமை காரண மாக வாழ்விழந்தவள். பின்னர் மேல்சாதிக் கொள்ளையர்களால் கும்பல் பாலியல் வன்முறைக்குப் பலியானவள். மேல்சாதிக் கொள்ளையர்களிடமிருந்து அவளுக்குப் போலீசுப் பாதுகாப்பு மறுக்கப்படவே, இன்னொரு கொள்ளைக் கூட்டத்துடன் சேர வேண்டி நிர்ப்பந்திக்கப்பட்டாள். அவளது இரண்டாவது கணவனான கொள்ளைக் கூட்ட தலைவனும் நயவஞ்சகமாகக் கொல்லப்பட்ட பிறகு, தானே ஒரு கொள்ளைக் கூட்டத்தை உருவாக்கி, மேல்சாதிக் கொள்ளையர்களைப் பழி வாங்கியவள். சந்தர்ப்ப சூழ்நிலையாலும் தனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்குப் பழி வாங்கவும் கொள்ளைக்காரியானாள்.

ஆனால், வீரப்பன் எதற்காக யானை களைக் கொன்று தந்தங்களையும், சந்தன மரங்களை வெட்டியும் கடத்தினான்? தன் சொந்த நலனுக்காக! பூலான் தேவி, மல்கான்சிங் போன்றவர்கள் மேல்சாதி செல்வந்தர்களிடம் கொள்ளையிட்டனர். ஆனால், வீரப்பனோ நாட்டின் இயற்கைச் செல்வத்தை அழித்து, கடத்தி அந்நியருக்கு விற்றுக் கொள்ளையிட்டான். வீரப்பனைத் தேடுவது என்ற பெயரில் அனுப்பப்பட்ட அதிரடிப்படை அப்பாவி மக்களுக்கு எதி ராக அட்டூழியங்கள் புரிந்தது; அதற்கான வாய்ப்பை ஏற்ப டுத்திக் கொடுத்தவன் என்கிற முறையில் அதற்கு வீரப்பனும் ஒரு காரணமாக அமைகிறான்.



நக்கீரன் ஆசிரியர் கோபாலுடன் தமிழ்நாடு விடுதலைப் படையைச் சேர்ந்த 'போராளி'.

கொள்ளையில் ஒரு பகுதியைத் 'தான தர்மம்' செய்வதன் மூலம் மலைப்பகுதி வாழ் மக்களில் ஒரு பிரிவினரிடம் நற்பெயர் எடுத்துள்ள வீரப்பன், போலீசு - அதிரடிப்படையின் அட்டூழியங்களுக்குப் பழிவாங்கும் வீரதீரனாகவும், மக்கள் நேசனாகவும் காட்டிக் கொள்கிறான். போலீசு - அதிரடிப்படையின் வரவுக்குக் காரணமாக இருந்துவிட்டு, மக்களுக்கு எதிராக அவர்கள் புரியும் அட்டூழியங்கள் எல்லாம் தனக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதி என்பது போல காட்டிக் கொள்கிறான்.

"நான் மட்டுமா கொலை, கொள்ளையில் ஈடுபட்டேன்; அரசியல்வாதி களும் போலீசும் யோக்கியர்களா? என்னு டைய, என் கூட்டாளிகளுடைய உறவினர் களை கொடுமைப்படுத்திக் கொன்று விட்டார்கள், இது நியாயமா?" என்று கேட்கிறான் வீரப்பன்.

"என் மீது லஞ்ச - ஊழல் அதிகார முறை கேடு குற்றஞ்சாட்டி, வழக்குப் போடும், கரு ணாநிதி மட்டும் யோக்கியரா?" என்று ஜெய லலிதா வாதிடுவதைப் போன்றதுதான் இது வும். ஒருவரின் குற்றங்கள் இன்னொ ருவரின் குற்றங்களை நியாயப்படுத்திவிட முடியாது. இரண்டு பேருமே தண்டிக்கப்பட

www.padippakam.com

வேண்டியவர்கள். மற்றவரைத் தண்டிக்காத போது என்னை மட்டும் தண்டிக்கலாமா, விட்டு விடுங்கள் என்பதுதான் இந்த வாதங் களின் உட்கரு.

வீரப்பன் கும்பல் கொலை, கொள்ளை, கடத்தல் ஆகிய கிரிமினல் குற்றங்களில் ஈடு பட்டதால், போலீசு - அதிரடிப் படையின் கொலை, கற்பழிப்பு, சித்திரவதை ஆகிய கிரிமினல் குற்றங்கள் நியாயமாகிவிட மாட்டா. அதேபோலத்தான் போலீசு - அதிர டிப்படை கொலை, கொள்ளை, சித்திரவ தைகள் ஆகிய கிரிமினல் குற்றங்களில் ஈடு பட்டதால் வீரப்பன் கும்பலின் கிரிமினல் குற்றங்கள் நியாயமாகிவிட மாட்டா. இரண் டுமே தண்டிக்கப்பட வேண்டியவை. இரண்டில் யாருடைய குற்றம் சிறியது, மன்னிக்கத் தக்கது; யாருடைய குற்றம் பெரி யது, தண்டிக்கத் தக்கது என்று வகை பிரித்து அணுகவும் முடியாது. இரண்டு தரப்பின் ஊற்று மூலமும் ஒன்றுதான்.

தற்போதைய சமூதாய - பொருளாதார - அரசியல் அமைப்பில் சட்டபூர்வமான ஒடுக்குமுறை, சுரண்டலில் ஈடுபட்டுள்ள பார்ப்பன — பனியா ஆளும் வர்க்கங்கள் பெற்றெடுத்த கள்ளக் குழந்தைகள்தான் வீரப்பன் கும்பல் போன்ற கிரிமினல் (மஃபியா) குற்றக் கும்பல்கள். சட்டபூர்வமான ஒடுக்குமுறை, சுரண்டலைப் பாதுகாப்பதற் காகவே உருவாக்கப்பட்ட போலீசு - அதிர டிப்படை போன்ற இயந்திரங்களின் அட்டூ ழியங்களை ஆளும் வர்க்கங்கள் தடுப்ப தில்லை. அதுமட்டுமல்ல, சட்டவிரோத கிரி மினல் (மஃபியா) குற்றக் கும்பல்கள் வளர்ந்து பலம் பெற்றுவிட்ட பிறகு, அவற் றையே மறைமுகமாக அங்கீகரித்து ஏற்கவும் செய்கின்றனர்.

இவர்கள் அனைவருமே நாட்டுக்கும் மக்களுக்கும் எதிரிகள்தாம் என்பதை மக்கள் தமது அன்றாட வாழ்க்கையில் காணு கின்றனர். சில கிரிமினல் (மஃபியா) குற்றக் கும்பல்கள், தன் சக்தி மீது கொண்ட மிகை மதிப்பீடு காரணமாக, போட்டி அதிகார மையமாகி, அரசு எந்திரத்துடனான அவற்றின் முரண்பாடு பகையாகிப் போவதால், அவை மக்கள் நண்பனாக நடிக் கின்றனவே தவிர, உண்மையில் எப்போதும் மக்கள் எதிரிகள்தாம்!

இராமதாஸ் போன்ற பிழைப்புவாத அர சியல் தலைவர்களைப் பயன்படுத்தி தமது சக்தியைப் பெருக்கிக் கொள்ள முடியும் என்று நம்பி சில போலிப் புரட்சியாளர்கள் ஏமாந்தனர். அதைப் போலவே வீரப்பன் கும்பலைப் பயன்படுத்திக் கொண்டு தமது நோக்கங்களை ஈடேற்றிக் கொள்ளலாம் என்று தமிழினவாதிகள் நம்புகின்றனர் என்று தெரிகிறது. ஆனால் ஒன்று, ஏறிவந்த ஏணியை எட்டி உதைப்பதைப்போல வீரப்பன் இவர்களை உதறி எறிவான்; அல்லது, தமிழினவாதிகளின் குழு சாகசசுய அழிவுப் பாதை வீரப்பன் கும்பலுக்குமுடிவு கட்டுவதாக அமையும் என்பது மட்டும் நிச்சயம்!

● பச்சையப்பன்

# கந்தலானது பிவாண்டி நெசவாளர் வாழ்வு

இந்திய நிதியமைச்சர், நிதி அமைச்சக அதிகாரிகள், பொருளாதார நிபுணர்கள், தொழில் அதிபர்கள் - இவர்கள் அனைவ ருமே நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சி இந்த ஆண்டில் 6 சதவீதமாக இருக்கும் என்று அடித்துக் கூறி வருகிறார்கள். இந்தப் பொருளாதார வளர்ச்சிக் கணக்கைக் கொஞ்சம் புரிந்து கொள்ளும்படிச் சொன்னால், கடந்த ஆண்டு நமது நாட்டு மொத்த உற்பத்தியின் மதிப்பு ரூ. 100/- எனக் கொண்டால், அது இந்த ஆண்டு ரூ. 106/- ஆக உயரும் என்பதுதான்.

தாராளமயம் நடைமுறைக்கு வந்த பிறகு, கடந்த பத்தாண்டுகளாகவே இந்தியப் பொருளாதாரம் 5 சதவீதம், 6 சதவீதம் என வளர்ந்து கொண்டே செல்வதாகத்தான் ஆட் சியாளர்கள் புள்ளி விவரங்களை எடுத்துப் போட்டுக் காட்டுகிறார்கள். இந்தியக் குடிய ரசு, மக்களுக்கானது எனும் பொழுது, அந்த அரசால் நடைமுறைப்படுத்தப்படும் பொரு ளாதாரக் கொள்கையும் மக்களுக்கானதா கவே இருக்க வேண்டும். எனவே, அரசின் புள்ளி விவரக் கணக்குப்படி பார்த்தால், இந்தியக் குடிமகனின் தனிநபர் வருமா னமும், வாழ்க்கைத் தரமும் கடந்த பத்தாண் டுகளில் முப்பது, நாற்பது சதவீமாவது முன்னேறியிருக்க வேண்டும். ஆனால், நடப்பு எப்படியிருக்கிறது?


முகம்மது இஸ்மாயில், மகாராஷ்டிரா மாநிலத் தலைநகர் மும்பய்க்கு அருகில் உள்ள பிவாண்டி நகரைச்சேர்ந்த விசைத்தறி தொழிலாளி. இவரின் ஜூன் மாத வரு மானம் 1500 ரூபாய். இஸ்மாயில் மூன்றாண்டுகளுக்கு முன்பு மாதமொன் றுக்கு நாலாயிரம் ரூபாய் வரை சம்பாதித்துக் கொண்டிருந்தார். ஆனால், இப்பொழுதோ, "இந்த ஆயிரத்து ஐநூறு ரூபாய் கூலி குறை யாமல் கிடைத்தாலே நான் அதிர்ஷ்டசா லிதான்" என்கிறார்.

நாட்டின் பொருளாதாரமோ 5 சதவீதம், 6 சதவீதம் எனப் பாய்ந்து கொண்டு முன்னே றுகிறது. ஆனால், முகம்மது இஸ்மாயிலின் வாழ்க்கையோ ஒவ்வொரு நாளும் சரிந்து கொண்டு செல்கிறது. ஏன் இந்த வேறுபாடு?

முகம்மது இஸ்மாயில் என்ற தனிந பரின் வாழ்க்கையை வைத்துக் கொண்டு, நாட்டின் பொருளாதார வளர்ச்சியைச் சந்தே கப்பட முடியாது எனச் சிலர் வாதாடலாம். பிவாண்டி நகரில் மட்டும் முகம்மது இஸ்மா யிலைப் போல, 3 இலட்சம் விசைத்தறி தொழிலாளர்களை நாம் காணலாம். இவர்கள் அனைவரின் பிரச்சினை ஒன்று தான்: "தொடர்ந்து வேலை கிடைக்குமா? இன்றைக்குக் கிடைக்கும் இந்த அரை

தொடர்ச்சி 23-ஆம் பக்கம்

தாராளமயத்துக்குப் பலியான பிவாண்டி விசைத்தறி தொழில்:
இதுதான் பொருளாதார முன்னேற்றமா?





படிப்பகம்

www.padippakam.com

# புதிய "தடா" சட்டம்:
# மீண்டும் பாசிச பயங்கரம்

**பயங்கரவாத அபாயம் என்ற பூச்சாண்டி காட்டிக் கொண்டுவரப்படும் இச்சட்டம், பெயரளவிலான ஜனநாயக உரிமைகளையும் பறித்துவிடும்.**



அப்துல் சுக்கூர்-மும்பயைச் சேர்ந்த 60 வயதான கைத்தறி நெசவுத் தொழிலாளி 1993-ஆம் ஆண்டு மும்பையில் நடந்த தொடர் குண்டு வெடிப்புகளையடுத்து இசுலாமிய பயங்கரவாதிகளைத் தேடி அழிக்கும் போலீசு அடக்குமுறை நடவடிக்கையில் சிக்கினார், அப்பாவி அப்துல் சுக்கூர். அவரும் அவரது மகனும் நூற்புக் கதிரையும் தறி ஊசியும் வைத்திருந்ததை - கொடிய ஆயுதங்களைக் கொண்டு சதி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு "தடா" சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர். சுக்கூர், அவரது மனைவி, மகன், மருமகள், ஒன்றரை வயதான பேத்தி உட்பட அவரது குடும்பமே போலீசு கொட்டடியில் மிருகத்தனமாக வதைக்கப்பட்டனர். பிறப்பால் முசுலீம்கள் என்பதைத் தவிர அவர்கள் வேறெந்தக் குற்றமும் செய்யவில்லை. நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, குற்றம் இழைத்ததற்கான போதுமான ஆதாரங்கள் இல்லை என்று சுக்கூரின் குடும்பம் பிணையில் விடுதலை செய்யப்பட்டது.

பயங்கரவாதத்தை ஒழிப்பது என்ற பெயரில் நாடெங்கும் கட்டவிழ்த்து விடப்பட்ட கொடிய "தடா" சட்டத்தினால் வதைக்கப்பட்ட அப்பாவிகளுக்கு ஒரு சாட்சிதான் அப்துல் சுக்கூரும் அவரது குடும்பமும். அவரைப் போலவே, 1985-லிருந்து நாடு முழுவதும் 76,000-க்கும் மேற்பட்டோர் இத்தடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, கொடூரமான சித்திரவதைக்கு ஆளாயினர்.

சீக்கிய - காலிஸ்தான் தீவிரவாதிகளை ஒடுக்க தற்காலிக அவசர நடவடிக்கையாக 1985-இல் பயங்கரவாதத் தடுப்பு நடவடிக்கைகள் சட்டம் எனும் தடா சட்டம் கொண்டு வரப்பட்டது. இதன் மூலம் விரைவாக விசாரணை நடத்தி, பயங்கரவாதிகளை உடனடியாகத் தண்டித்து, பயங்கரவாதக் குற்றங்களைத் தடுப்பது என்ற பெயரில் வரைமுறையற்ற அதிகாரங்களுடன் இச்சட்டம் ஏவிவிடப்பட்டது. இத்தடா சட்டத்தின் மூலம் ஒருவரைக் காலவரையின்றிச் சிறையிட முடியும். இரகசிய சாட்சிகளைக் கொண்டு இரகசிய விசாரணை நடத்தி வழக்கை முடித்துத் தண்டனை அளிக்க முடியும். ஈராண்டுகள் மட்டுமே இக்கொடிய சட்டம் நீடிக்கும் என்று காங்கிரசு ஆட்சியாளர்களால் அறிவிக்கப்பட்டது. ஆனால், 4 முறை தொடர்ந்து நீட்டிக்கப்பட்டு, ஏறத்தாழ 9 ஆண்டுகளுக்கு இச்சட்டம் கோரத் தாண்டவமாடியது. எதிர்த்தரப்பு அரசியல் இயக்கங்கள், மனித உரிமை அமைப்புகள், தொழிற்சங்கவாதிகள், கல்வியாளர்கள், மாணவர்கள், தொழிலாளிகள், விவசாயிகள், பெண்கள், குழந்தைகள் கூடப் பயங்கரவாதிகளாகக் குற்றம் சாட்டப்பட்டுச் சிறையில் சித்திரவதைக்கு ஆளாயினர். மிகச் சாதாரண குடியுரிமை - சனநாயக உரிமைகளைக்கூடக் காலில் போட்டு மிதித்து இக்கொடிய சட்டம் நாடெங்கும் வெறியாட்டம் போட்டது. பயங்கரவாத அச்சுறுத்தலே இல்லாத குஜராத் மாநிலத்தில்தான்

## "தடா"வின் கொடூரம்

1994 ஜூன் 30-ந் தேதி வரை "தடா" சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 76,000 பேரைத் தாண்டியது. இவர்களில் 25% பேர் எவ்விதக் குற்றச்சாட்டுமின்றி பின்னர் போலீசாரால் விடுவிக்கப்பட்டனர். விசாரணைக்குக் கொண்டு வரப்பட்ட தடா வழக்குகளில் 35% வழக்குகள் மட்டுமே முடிக்கப்பட்டிருந்தன. இவ்விசாரணையில், 95% வழக்குகளில் குற்றம் நிருபிக்கப்படவில்லை என்று கைதானவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். இறுதியில், மொத்தம் கைது செய்யப்பட்டவர்களில் ஒரு சதவீதத்துக்கும் குறைவானவர்களே குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்கப்பட்டனர்.

தடா சட்டம் காலாவதியான ஈராண்டுகளுக்குப் பிறகு, அதாவது 1997-இல் கைது செய்யப்பட்டோரின் எண்ணிக்கை 4,528. இவர்களில் 6% மீதான குற்றச்சாட்டுகள் விலக்கிக் கொள்ளப்பட்டு, விடுதலை செய்யப்பட்டனர். 1997-ஆம் ஆண்டின் இறுதியில், கைதானவர்களில் 5% பேர் மீதே குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. மொத்தத்தில் 90% பேரின் மீதான வழக்குகளுக்கு இன்னமும் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை. அதே ஆண்டில் தடா சட்டத்தின் கீழ் 6,709 பேர் விசாரணைக் கைதிகளாக வாடிக் கொண்டிருந்தனர். இவர்களில் 6% பேரின் மீதான வழக்குகள் மட்டுமே விசாரிக்கப்பட்டிருந்தன. இவற்றில் 65% வழக்குகளில், கைது செய்யப்பட்டவர்கள் குற்றம் நிருபிக்கப்படாமல் விடுதலை செய்யப்பட்டனர். மொத்தத்தில் 2.5% பேர் மட்டுமே விசாரணைக்குப் பின்னர் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

கடந்த பிப்ரவரி 21-ந் தேதியன்று உள்துறை அமைச்சகம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையின்படி, ஜம்மு-காசுமீர் மாநிலத்தில் தடா சட்டத்தின் கீழ் 20,000 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. ஆனால், எந்த வழக்கிலும் குற்றம் நிருபிக்கப்படவில்லை. 11,000 வழக்குகள் ஆரம்ப விசாரணைக்குப் பிறகு விலக்கிக் கொள்ளப்பட்டன. ஆதாரமில்லை என்று 2000 வழக்குகள் கைவிடப்பட்டன. கடைசியில் 778 வழக்குகள் மட்டுமே விசாரணை முடியாமல் நீடிக்கின்றன.


1994-இல் அன்றைய உள்துறை ராஜாங்க அமைச்சராக இருந்த ராஜேஷ் பைலட் நாடாளுமன்றத்தில் கூறிய தகவலின்படி, 1985-ஆம் ஆண்டிலிருந்து தடா சட்டத்தின் கீழ் 67,000 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 8000 மீது மட்டுமே குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. விசாரணையில் இவுர்களில் 725 பேர் மீது மட்டுமே குற்றம் சாட்டப்பட்டது. மொத்தத்தில் 59,000 பேர் மீது எந்த வழக்கும் விசாரணையுமின்றி ஆண்டுக் கணக்கில் சிறையிடப்பட்டனர். ஏறத்தாழ ஒரு சதவீதம் பேர் மீது மட்டுமே குற்றம் சாட்டப்பட்டது.

— இவையனைத்தும் காட்டுவதென்ன? பயங்கரவாதிகள் என்ற பெயரில் தொழிற்சங்க முன்னோடிகள், மனித உரிமை அமைப்பினர், பத்திரிகையாளர்கள், அப்பாவி விவசாயிகள், பெண்கள் - குழந்தைகள் என அனைவரையும் பிடித்து வதைக்கவும், எதிர்த்தரப்பு அரசியல்வாதிகளைப் பழிவாங்கி அச்சுறுத்திப் பணிய வைக்கவும் தடா சட்டம் கேடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. எல்லையற்ற அதிகாரங்களுடன் போலீசும் இராணுவமும் அக்கிரமங்களில் ஈடுபடவும், வழக்கு போட்டு விடுவதாக அப்பாவிகளை மிரட்டி இலஞ்ச ஊழலில் ஈடுபடவும்தான் தடா சட்டம் பயன்பட்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com



இக்கொடிய சட்டத்தின் கீழ் பல்லாயிரக்கணக்கானோர் வதைக்கப்பட்டனர்.

போலீசும் நீதித்துறையும் இயற்கை நீதி அனைத்தையும் காலில் போட்டு மிதித்து, குறுக்கு வழியில் விசாரணை நடத்தி, கேள்விமுறையின்றி அப்பாவிகளைத் தண்டித்தன. தடா சட்டத்தின் அடிப்படையிலான பயங்கரவாதக் குற்றம் இழைத்துள்ளனரா என்று பரிசீலனைக் கூடச் செய்யாமல், எதிர்த்தரப்பினரையும், உரிமைக்காகப் போராடியவர்களையும் கைது செய்து வதைத்தன. நிரபராதிகள் தண்டிக்கப்படக்கூடாது என்பது இயற்கை நீதி. ஆனால், ஆயிரக்கணக்கான அப்பாவிகள் தடாவின் கீழ் வதைக்கப்பட்டனர். பின்னர் அவர்கள் விடுதலை செய்யப்பட்டாலும், இந்த அநியாயத்துக்காக அவர்களுக்கு நிவாரணமோ - நட்ட ஈடோ வழங்கப்படவில்லை. கொட்டமடித்த போலீசு வெறியர்கள் தண்டிக்கப்படவும் இல்லை.

இப்பாசிச சட்டத்தின் கொடுமையால், அனைத்துத் தரப்பு மக்களிடமிருந்தும் மனித உரிமை - ஜனநாயக உரிமைக்கான அமைப்புகளிடமிருந்தும் எதிர்ப்புகள் பெருகியதாலும், தேர்தல் நெருங்கியதால் முசுலீம் ஓட்டு வங்கியைக் கைப்பற்றும் நோக்கத்தோடும் மீண்டும் இச்சட்டத்தை நீட்டிக்காமல் 1995 மே - 22ந் தேதியன்று நாடாளுமன்றம் தடா சட்டத்தைக் காலாவதியாக்கியது. இந்துவெறி பாரதீய ஜனதாவும் அ.தி.மு.க.வும் மட்டுமே தடா சட்டத்தை தொடர்ந்து நீட்டிக்குமாறு கோரின. எனினும், தடா சட்டம் காலவழக்கொழிவதை அனுமதித்த காங்கிரசு அரசு, அதே தடா சட்டத்தை புதிய வடிவில் தொடர, குற்றவியல் சட்டத் திருத்த மசோதா, 1995 என்ற மசோதாவை மாநிலங்களவையில் அவசர அவசரமாகக் கொண்டு வந்தது. ஆனால், இடதுசாரி, ஜனதாக் கட்சிகளின் எதிர்ப்பு காரணமாகவும் போதிய ஆதரவின்மையினாலும் அம்மசோதா நிறைவேற்றப்படவில்லை.

இம்மசோதா புதிய தடா சட்டமாக உருவெடுக்காமல் இருந்த போதிலும், தமிழகம், ஆந்திரா, மகாராஷ்டிரா ஆகிய மாநில அரசுகள் இதே தடா சட்டத்தை புதிய பெயரில் சட்டமாக்க முனைந்தன. கருணாநிதி அரசு, தமிழ்நாடு பயங்கரவாத நடவடிக்கைகள் தடுப்பு மசோதாவை (பொடா) சட்டப் பேரவையில் நிறைவேற்றி, அரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பியது. இக்கொடிய சட்டத்திற்கு தமிழகமெங்கும் கடும் எதிர்ப்பு உருவானதால், அன்றைய பா.ஜ.க. அரசு சில விளக்கங்களைக் கேட்டுள்ளதாகக் கூறி, பின்னர் இம்மசோதாவைத் திரும்பப் பெற்றுக் கொள்வதாக கருணாநிதி அறிவித்தார்.

ஆனால், கருணாநிதியின் பொடா சட்டம், காங்கிரசின் தடா சட்டம் ஆகியவற்றை உள்ளடக்கி, இன்னும் பல கொடிய விதிகளுடன் கிரிமினல் சட்டத் திருத்த மசோதாவை மாற்றியமைத்து, புதிய தடா சட்டத்தைக் கொண்டுவர, இப்போது பா.ஜ.க. அரசு தீர்மானித்துள்ளது. ''மனித முகம் கொண்ட தடா'' சட்டமாக இது அமையும் என்று மைய உள்துறை அமைச்சர் கூறியுள்ளார். குற்றவியல் சட்டத் திருத்த மசோதாவில் புதிய விதிகளைச் சேர்த்து, சட்ட ஆணையத்திற்கு அனுப்பி, ஆழமான பரிசீலனைக்குப் பின் இம்மசோதா இறுதியாக்கப்பட்டுள்ளது என்றும் எல்லைக்கு அப்பாலிருந்தும் உள்நாட்டிலும் பெருகிவரும் பயங்கரவாதத்தைத் தடுப்பதையும் குடிமக்களின் மனித உரிமைகளைக் காப்பதையும் நோக்கமாகக் கொண்டு இச்சட்டம் கொண்டு வரப்படுவதாக உள்துறை அமைச்சகம் கூறுகிறது.

''தடா''வை விடக் கொடிய இப்புதிய தடா சட்டம் ஏன் கொண்டு வரப்பட வேண்டும் என்பதற்கு சட்ட ஆணையம் ஒருதலைப்பட்சமான நியாயவாதங்களை அடுக்குகிறது. காசுமீர், வடகிழக்கு மாநிலங்கள், ஆந்திரா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் பயங்கரவாத நடவடிக்கைகள் பெருகிவிட்டது என்றும் இதற்குக் காரணம் தடா போன்ற கடுமையான சட்டங்கள் இல்லாததுதான் என்றும் கூறுகிறது. ஆனால், தேசியப் பாதுகாப்புச் சட்டம், கலவரப் பகுதி சட்டம், ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டம், குண்டர் தடுப்புச் சட்டம், ஆயுதத் தடைச் சட்டம் எனக் கணக்கற்ற பல கடுமையான சட்டங்கள் கடந்த பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைமுறையில் இருப்பதைப் பற்றிச் சட்ட ஆணையம் வாய்திறக்க மறுக்கிறது. இப்புதிய தடா சட்டத்தின் முதலாவது விதியே, இந்தியா முழுவதுமே பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட அல்லது அச்சுறுத்தல் நிலவும் பகுதியாகவே கருதுகிறது.

## ''தடா'' எதிர்ப்பு: போலி கம்யூனிஸ்டுகளின் இரட்டை வேடம்

- பயங்கரவாத ''தடா'' சட்டத்தை உறுதியாக எதிர்த்த மாவீரர்களாக கூறிக் கொள்ளும் 'மார்க்சிஸ்டு' கட்சியினர், ''தடா''வுக்குப் பதிலாகக் கொண்டு வரப்படும் புதிய ''தடா'' சட்டத்தையும் உறுதியாக எதிர்ப்பதாக அதிகார பூர்வமாக அறிவித்துள்ளனர். தீவிரவாதத்தை ஒடுக்கப் புதிய சட்டம் தேவையில்லை; தற்போது நடைமுறையிலுள்ள கடுமையான சட்டங்களைக் கொண்டே அதனைக் கட்டுப்படுத்திவிட முடியும் என்பதே போலி கம்யூனிஸ்டுகளின் நிலைப்பாடு.

ஆனால், கடந்த ஜூலை 17-ந் தேதியன்று நடந்த உள்துறை அமைச்சக கலந்தாலோசனைக் குழுவின் கூட்டத்தில் பங்கேற்ற 'மார்க்சிஸ்டு' தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சோமநாத் சட்டர்ஜி, ''நாடெங்கும் பயங்கரவாத நடவடிக்கைகள் பெருகி வருவதால், இவற்றை ஒடுக்கத் தனிச்சிறப்பான, கடுமையான புதிய சட்டம் தேவை'' என்று புதிய ''தடா''வை ஆதரித்துப் பேசியுள்ளனர்.

கட்சியின் முடிவுக்கு எதிராகப் பேசி, புதிய ''தடா'' சட்டத்தை நியாயப்படுத்திய சோமநாத் சட்டர்ஜியை விமர்சிக்கவோ, கண்டிக்கவோ, அவரது செயலுக்குப் பகிரங்கமாக மன்னிப்பு கேட்கவோ 'மார்க்சிஸ்ட்' கட்சித் தலைமை இன்று வரை முன்வரவில்லை. தெரிந்தே மவுனம் சாதித்து வருகிறது.


கட்சியின் இரண்டாம் மட்டத் தலைவர்களோ, அவர் இப்படி பேசியிருக்கவே மாட்டார் என்று ஒருபுறம் மறுக்கிறார்கள். மறுபுறம், திரிபுராவில் 'இடதுசாரி' அரசாங்கத்துக்கு எதிராக நடந்துவரும் பயங்கரவாத வன்முறைகளைக் கருத்தில் கொண்டு ஒருவேளை இப்படி பேசியிருக்கலாம் என்கின்றனர்.

இன்னும் சிலர் புதிய ''தடா''வுக்கான சட்ட ஆணையத்தின் இறுதியாக்கப்பட்ட மசோதாவை அவர் உறுதியாக எதிர்த்தார் என்கின்றனர். உண்மைதான்; சோமநாத் சட்டர்ஜி அதை எதிர்த்தார்; புதிய தடா சட்டம் கொடியது, ஜனநாயக விரோதமானது என்பதற்காக அவர் எதிர்ப்பு காட்டவில்லை; மாறாக, அனைத்துக் கட்சியினருடனும் கலந்தாலோசித்து பொதுக் கருத்தின் அடிப்படையில் இச்சட்டத்தை உருவாக்கவில்லை; சட்ட வல்லுனர்கள், மனித உரிமை அமைப்பினருடன் பொது விவாதம் நடத்தவில்லை; நாடாளுமன்றக் கமிட்டி பரிசீலனை செய்யவில்லை - என்று விதிமுறைகள் பின்பற்றப்படாததற்குத்தான் எதிர்ப்பு காட்டினார்.

எல்லாவற்றுக்கும் மேலாக, உள்துறை அமைச்சக கலந்தாலோசனை குழு கூட்டத்தில் பங்கேற்ற பார்வார்டு பிளாக் கட்சித் தலைவரான தேவபிரதா பிஸ்வாஸ், ''இக்கூட்டத்தில் சோமநாத் சட்டர்ஜியின் புதிய தடா சட்டத்துக்கான ஏற்பிசைவான எண்ணத்தைக் கண்டு நான் அதிர்ச்சி அடைந்தேன்'' என்று உண்மையைப் போட்டு உடைத்து விட்டார்.

நாட்டு மக்களின் முன் புதிய ''தடா''வுக்கு எதிராக வீர வசனம்! அத்வானியின் முன் புதிய ''தடா''வுக்குச் சரணம்! புரிந்து கொள்ளுங்கள், புரட்சி பேசும் போலி கம்யூனிஸ்டுகளின் யோக்கியதையை!


படிப்பகம்



இந்தியாவில் மதவெறி பயங்கரவாதம் 1993-இல் நடந்த மும்பை தொடர் குண்டு வெடிப்பிலிருந்து வளர்ந்து வருவதாகப் பட்டியலிடுகிறது சட்ட ஆணையம். ஆனால், அக்குண்டு வெடிப்புக்குச் சில மாதங்களுக்கு முன்பாக, இந்துவெறி பாரதீய ஜனதாவும் சிவசேனாவும், போலீசும் மும்பையில் முசுலீம்களுக்கு எதிராக நடத்திய கொலை வெறியாட்டத்தைப் பற்றியோ, இந்த உண்மையை நிரூபித்த சிறீகிருஷ்ணா கமிசனின் அறிக்கை பற்றியோ சட்ட ஆணையம் மௌனம் சாதிக்கிறது. இதற்கு முன்பாக, அயோத்தியில் இந்துவெறி பயங்கரவாதிகள் பாபர் மசூதியை இடித்த கொடுஞ்செயலைச் சட்ட ஆணையம் பெயரளவுக்குக்கூடக் கண்டிக்கவில்லை. இதே போல, தென்னிந்தியாவில் மிகக் கொடூரமான மதவெறி பயங்கரவாத அமைப்பாக, அல்-உம்மா இயக்கத்தைச் சட்ட ஆணையம் குறிப்பிடுகிறது. ஆனால், 1998 கோவை குண்டு வெடிப்புக்கு முன்னர், இந்து முன்னணியும் போலீசாரும் கூட்டுச்சேர்ந்து முசுலீம்கள் மீது நடத்திய மதவெறி பயங்கரவாத அட்டூழியங்களைப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. காசுமீரில் தீவிரவாதிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளைப் பட்டியலிடும் சட்ட ஆணையம், காசுமீரில் இந்திய இராணுவம் நடத்திவரும் அரசு பயங்கரவாதப் படுகொலை வெறியாட்டங்களைப் பற்றி மூடிமறைக்கிறது.

அடுத்து, பயங்கரவாதம் என்பது அமைப்பு ரீதியிலான கண்மூடித்தனமான வன்முறை என்று சட்ட ஆணையம் வரையறை செய்துள்ளது. இப்படி பொத்தாம் பொதுவான வரையறையின் மூலம், மதவெறி தீவிரவாதிகளையும் புரட்சியாளர்கள் - போராளிகளையும் ஒரேவகையான பயங்கரவாதிக்ள் என்று முத்திரை குத்துகிறது.

பயங்கரவாத நடவடிக்கைகள் என்று பலவற்றைப் பட்டியலிட்டுள்ள அரசின் சட்ட ஆணையம், இப்போது ஒரு புதிய விதியை அதில் சேர்த்துள்ளது. இதன்படி, இந்திய அரசுக்கும் இதர நாட்டு அரசுகளுக்குமிடையிலான தொழில் - வர்த்தகத்துக்கு இடையூறு செய்பவர்களும், இந்தியாவில் செயல்படும் அந்நிய நிறுவனத்தின் தொழில் - வர்த்தகத்துக்கு இடையூறு செய்து சீர்குலைப்பவர்களும் பயங்கரவாதிகளாவர்! கர்நாடகாவில் நஞ்சுண்டசாமி தலைமையிலான விவசாயிகள் சங்கம் அமெரிக்காவின் கார்கில் விதை நிறுவனத்துக்கும், கெண்டகி கோழி இறைச்சி வறுவல் கடைகளுக்கும் எதிராகப் போராட்டம் நடத்தி, அவற்றைச் சூறையாடியது.

பன்னாட்டு நிறுவனங்களின் ஆக்கிரமிப்பை எதிர்த்து சென்னையில் நடந்த போராட்டம். புதிய "தடா" சட்டத்தின்படி இப்போராட்டம் பயங்கரவாதக் குற்றமாகும்.



# பாசிச சட்டத்தின் கொடிய விதிகள்

**த**டா சட்டத்துக்கு மாற்றாக புதிய வடிவில் கொண்டு வரப்படவுள்ள "கிரிலா" (Criminal Law Amendment) எனும் பயங்கரவாதச் சட்டம் மிகக் கொடூரமானது. அதன் சட்ட விதிகளே அரசு பயங்கரவாத பாசிசத் தன்மையை நிரூபித்துக் காட்டுகின்றன.

சட்டவிதி 1(3): இச்சட்டம் 5 ஆண்டுகளுக்கு நீடிக்கும்.

*— இதன் விளைவாக, இக்கொடிய சட்டத்தினால் ஏற்படும் பாதிப்புகளை உடனடியாகக் களையவோ, மறுபரிசீலனை செய்யவோ முடியாமல், பாதிப்புகள் 5 ஆண்டுகளுக்குத் தொடரவே செய்யும்.*

சட்டவிதி 1(3): இச்சட்டம் காலாவதியான பின்னரும் குற்றம் சாட்டப்பட்டவர் மீதான வழக்கு விசாரணை தொடர்ந்து நடக்கும்.

*— இதன் விளைவாக, இச்சட்டத்தின் கீழ் கைதாகிச் சிறைபிடிக்கப்படும் அப்பாவிகளுக்கு, இச்சட்டம் காலாவதியான பின்னரும் விடுதலை கிடைக்காது.*

சட்டவிதி 3(5): ஒரு பயங்கரவாதக் கும்பல் அல்லது அமைப்பைச் சேர்ந்த எவரும் குற்றவாளியாவர்.

*— எது பயங்கரவாதக் கும்பல் அல்லது அமைப்பு என்று சட்டத்தில் தெளிவாக வரையறுக்கப்படாததால், திரைப்பட நடிகரின் இரசிகர் மன்றத்தினர்கூடப் பயங்கரவாதிகளாகக் குற்றம் சாட்டப்படலாம்.*

சட்டவிதி 3(4): ஒரு பயங்கரவாதிக்கு அடைக்கலம் கொடுத்தாலோ, அல்லது அப்பயங்கரவாதியைப் பற்றிய தகவல்களை மூடி மறைத்தாலோ, அல்லது அவ்வாறு செய்ய முயற்சித்தாலோ அவரும் குற்றவாளியாவர்.

*— இதன்மூலம் பயங்கரவாதி என்று குற்றம் சாட்டப்பட்டவரின் நண்பர்கள், உறவினர்களைப் போலீசார் பிடித்துச் சென்று உருட்டி மிரட்டலாம்; அப்பாவி ஒருவர் மீது பயங்கரவாதிக்கு அடைக்கலம் கொடுத்ததாகப் பொய்க் குற்றம் சாட்டலாம்; வழக்குப் போட்டு விடுவதாக மிரட்டிப் பணிய வைத்து, அப்பாவிகளிடமிருந்து போலீசார் பணம் பறிக்கலாம். பயங்கரவாதியின் இருப்பிடம் பற்றிய தகவல்களை மூடிமறைத்தார், அப்பயங்கரவாதியின் நடவடிக்கைகளைப் பற்றிய தகவல்களை மூடிமறைத்தார் என்று யாரையும் போலீசார் கைது செய்யலாம்.*

சட்டவிதி 4: குற்றம் சாட்டப்பட்ட பயங்கரவாத அமைப்பை ஆதரித்துப் பேசுபவர்கள், எழுதுபவர்கள் அல்லது எந்தச் செய்தி ஊடக நடவடிக்கையில் ஈடுபடுபவர்களும் குற்றவாளிகளாவர்.

*— இதன் விளைவாகப் பெயரளவில் உள்ள பேச்சு - எழுத்துச் சுதந்திரமும் முற்றாகப் பறிக்கப்படும். சந்தன வீரப்பன் பயங்கரவாதி என்று குற்றம் சாட்டப்பட்டால், நக்கீரன் பத்திரிகை ஆசிரியர் அவனை பேட்டி கண்டு செய்தி வெளியிட்டால், அவரும் குற்றவாளியாவார். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை இந்திய அரசு ஏற்கனவே பயங்கரவாத அமைப்பாகக் குற்றம் சாட்டியுள்ள நிலையில், புலிகளைப் பற்றியோ, ஈழ விடுதலையைப் பற்றியோ பேசுவோரும் எழுதுவோரும் ஆதரிப்போரும் குற்றவாளிகளாவர்.*

சட்டவிதி 4(1C): இந்தியாவின் ஐக்கியம் - ஒருமைப்பாட்டைச் சந்தேகிக்கும் அல்லது எதிர்க்கும் அல்லது பிரிவினையை ஆதரிக்கும் எந்தவொரு தொழிற்சங்க - மக்கள்திரள் அமைப்பினரும் குற்றவாளிகளாவர்.

www.padippakam.com



தமிழகத்தில், மறுமுளைப்புத் திறனற்ற அமெரிக்காவின் மான்சான்டோ விதை நிறுவனத்திற்கு எதிராக விவசாயிகள் விடுதலை முன்னணி தொடர் பிரச்சார - ஆர்ப்பாட்ட இயக்கத்தை நடத்தியது. நாளை இத்தகைய இயக்கங்களையோ - போராட்டத்தையோ நடத்த முடியாது. ஏனெனில், அது அந்நிய நிறுவனத்தின் தொழிலைச் சீர்குலைக்கும் பயங்கரவாதச் செயலாகும். "அந்நிய நாடுகளிலிருந்து தேயிலை இறக்குமதி செய்வதை நிறுத்து!" என்று நீலகிரி மாவட்டத் தேயிலை விவசாயிகள் போராடினால், அதுவும் பயங்கரவாதக் குற்றம். துறைமுகத் தொழிலாளர்கள் கூலி உயர்வுக்காக வேலை நிறுத்தம் செய்தால், அதனால் அரசுகளுக்கிடையிலான ஏற்றுமதி - இறக்குமதி வணிகம் தடைப்பட்டால், தொழிலாளர் போராட்டமும் பயங்கரவாதக் குற்றமாகும். ஒரு விவசாய சங்கமோ, தொழிற்சங்கமோ கையில் வெடிகுண்டுகளுடனும் துப்பாக்கியுடனும் இல்லாத போதிலும், இத்தகைய போராட்டங்களை நடத்தினால் அது பயங்கரவாத அமைப்பாக்க் குற்றம் சாட்டப்பட்டு, தடை செய்யப்பட்டுத் தண்டிக்கப்படும்.

அந்நிய ஏகாதிபத்திய நிறுவனங்களின் கொள்ளையையும் ஆதிக்கத்தையும் பாதுகாக்கும் இந்த விதியானது, பழைய "தடா" சட்டத்தில் இல்லை; குற்றவியல் மசோதாவிலும் இல்லை. தாராளமயம் என்ற பெயரில் நாடு மறுகாலனியாக்கப்படுவதைக் கவனத்தில் கொண்டு அரசின் சட்ட ஆணையம் உருவாக்கியுள்ள புதிய விதியே இது.

மொத்தத்தில் எஞ்சிய ஜனநாயக உரிமைகள் அனைத்தையும் பறித்து, ஆளும் வர்க்கங்களையும் இன்றைய அரசியலமைப்பு முறையையும் கட்டிக் காக்கும் வகையில் உருவாகியுள்ள கொடிய பாசிச சட்டம்தான் புதிய தடா. காஷ்மீர் போராளிகள், நக்சல்பாரி புரட்சியாளர்கள் மட்டுமல்ல; உரிமைக்காகப் போராடும் நாட்டு மக்கள் அனைவரையுமே பயங்கரவாதிகள் என்று குற்றம் சாட்டி ஒடுக்கக் கிளம்பியுள்ளது இக்கொடூர சட்டம். இச்சட்டத்தின்படி, குடிமக்கள் அனைவரும் ஒன்று, பயங்கரவாதிகளாக இருக்க வேண்டும்; அல்லது, போலீசுக்கு உளவாளிகளாக - ஆள்காட்டிகளாக இருக்க வேண்டும். பழிவாங்கும் நோக்கத்தில், யாரையும் பயங்கரவாதியாகக் குற்றம் சாட்டலாம்; யாரையும் கைது செய்து விசாரணையின்றி வதைக்கலாம்; ஆள்காட்டியாகச் செயல்படாத எவரையும் கைது செய்யலாம்; சொத்துக்களைப் பறிமுதல் செய்யலாம் என்கிற இச்சட்டத்தின் பாசிச பயங்கரத்திலிருந்து யாருமே தப்ப முடியாது.

பாசிச இருள் சூழ்ந்து வரும் வேளையில், எதிர்த்தரப்பு ஓட்டுக் கட்சிகள் இந்த அடக்குமுறைச் சட்டத்தைத் தடுத்து நிறுத்தி விடும் என்று இனி நம்பி ஏமாறவும் முடியாது. ஏனெனில், தடா சட்டத்தை ஏவி ஆட்டம் போட்ட கட்சிதான் பாசிச காங்கிரசு. ஜனநாயக நாடகமாடும் போலி கம்யூனிஸ்டுகளும் ஜனதா தளமும் தாங்கள் ஆளும் - ஆண்ட மாநிலங்களில் எதிர்த்தரப்பினரைப் பழிவாங்க இத்தடா சட்டத்தை ஏவியவர்கள்தான். தனியார்மயம் - தாராளமயத்தை ஆதரித்து ஆளும் வர்க்கங்களுடன் சேர்ந்திசைக்கும் இத்தகைய துரோகிகள், இப்புதிய பொருளாதாரக் கொள்கையைக் கட்டிக்காக்க உருவாகியுள்ள புதிய தடா சட்டத்தை உறுதியாக எதிர்த்துப் போராடுவார்கள் என்பதற்கு எந்த அடிப்படையும் இல்லை. நாடாளுமன்ற ஓட்டுக்கட்சி அரசியலுக்கு வெளியே, கம்யூனிசப் புரட்சியாளர்கள் தலைமையில் அனைத்து உழைக்கும் மக்களும் ஐக்கியப்பட்டு படர்ந்துவரும் பாசிச அபாயத்துக்கு எதிராகப் போராடுவதைத் தவிர இனி வேறு வழி கிடையாது.

● குமார்

---

— இதன் விளைவாக காஷ்மீர், நாகாலாந்து, மணிப்பூர், அசாம் உள்ளிட்டு எந்தவொரு தேசிய இனத்தின் உரிமைப் போராட்டத்தையும் யாரும் ஆதரிக்க முடியாது. அவ்வாறு ஆதரிப்பவர்கள் பயங்கரவாதக் குற்றம் இழைத்தவர்களாவர். மேலும், கூலி உயர்வுக்கான தொழிலாளர் போராட்டத்தைப் பிரிவினையைத் தூண்டியதாக போலீசார் பொய்க் குற்றம் சாட்டி, போராட்டத்தில் ஈடுபட்டோரைப் பயங்கரவாதிகள் என்று சிறையிலடைக்கலாம்; அல்லது பிரிவினையைத் தூண்டும் வகையில், நாட்டின் ஐக்கியத்தைச் சீர்குலைக்கும் வகையில் இரகசிய சதியில் ஈடுபட்டதாக அல்லது அதற்கு முயற்சித்ததாக அல்லது சதிக்கு உடந்தையாக இருந்ததாக எந்தவொரு மக்கள்திரள் அமைப்பின் மீதும் உறுப்பினர்கள் - ஆதரவாளர்கள் மீதும் போலீசார் குற்றம் சாட்டி பயங்கரவாதிகள் என்று சிறையிடலாம்.

சட்டவிதி 6: குற்றம் சாட்டப்பட்டவரின் சொத்துக்களை போலீசார் கைப்பற்றலாம் அல்லது முடக்கி வைக்கலாம். அதை அரசு தரப்பு அதிகாரி அங்கீகரித்தால் போதுமானது. மேலும், சட்டவிதி 3(6)-ன்படி, ஒரு பயங்கரவாதச் செயலுக்கு கமிஷன் பெற்றவர்கள், அல்லது பயங்கரவாதியிடமிருந்து இரகசியமாக நன்கொடை பெற்றவர்களின் சொத்துக்களையும் பறிமுதல் செய்யலாம்; அத்தகையோருக்கு குறைந்தது 5 ஆண்டுகள் முதல் ஆயுட்காலம் வரை தண்டனை விதிக்கலாம்.

*— இதன்மூலம் போலீசாருக்கு வரம்பற்ற அதிகாரம் அளிக்கப்படுகிறது. யாரையும் பயங்கரவாதியுடன் தொடர்புடையவராகக் குற்றம் சாட்டி, அவரது சொத்துக்களைப் பறிக்கப் போவதாக அச்சுறுத்தி, போலீசார் இலஞ்ச ஊழலில் திளைக்கலாம். பொது மக்களிடம் பிரச்சாரம் செய்து நன்கொடை திரட்டும் ஒரு புரட்சிகர அமைப்பினர், தீவிரவாதிகளிடமிருந்து நன்கொடை பெற்றபோது கையும் களவுமாகப் பிடிபட்டதாக போலீசார் பொய்க் குற்றம் சாட்டலாம்; சொத்துக்களை - அந்த அமைப்பின் அலுவலகம் - வாகனம் முதலான அனைத்தையும் பறிமுதல் செய்து, அவ்வமைப்பினரைச் சிறையிடலாம்.*

சட்டவிதி 13(5): குற்றம் சாட்டப்பட்டவரோ, அவரது வழக்கறிஞரோ இல்லாமலேயே விசாரணையை நடத்தி முடிக்கலாம். சட்டவிதி 14(3C): விசாரணையின் போது அல்லது குறுக்கு விசாரணையின் போது அரசு தரப்பில் சாட்சியமளிப்பவரின் விபரம் தெரிவிக்கப்பட வேண்டியதில்லை. சட்டவிதி 15A: போலீசாரிடம் குற்றம் சாட்டப்பட்டவர் அளித்த வாக்குமூலமே விசாரணைக்குப் போதுமானது.

*— இதன்மூலம் இயற்கை நீதி அனைத்தும் மறுக்கப்பட்டு, ஒரு தரப்பான அநீதியே நிலைநாட்டப்படுகிறது. பொய் சாட்சிகளை வைத்தே எவரையும் குற்றவாளியாக்கி போலீசார் தண்டிக்க முடியும். கொட்டடியில் சித்திரவதை செய்து நிர்பந்தமாகப் பெறப்பட்ட வாக்குமூலமே உண்மையானதாகி விடும். போலீசாருக்கு எல்லையற்ற அதிகாரமளித்து, அரசு பயங்கரவாதமே நியாயமாக்கப்படும்.*

சட்டவிதி 18(2a): எந்தக் குற்றச்சாட்டுமின்றி எவரையும் போலீசார் இச்சட்ட விதிகளின்படி சிறையிலடைக்கலாம்; பயங்கரவாதத் தடுப்புக்காக சந்தேகத்தின் பேரில் எவரையும் கைது செய்யலாம். குறைந்தபட்சம் 6 மாதங்கள் வரை இவ்வாறு சிறையிலடைக்கலாம். நீதிமன்றம் ஒருவரைக் குற்றமற்றவர் என்று கருதினால் பிணையில் விடுவிக்கலாம். உச்சநீதி மன்றத்தில் மட்டுமே குற்றம் சாட்டப்பட்டவர் மேல் முறையீடு செய்ய முடியும்.

— இதன் விளைவாக போலீசார் யாரை வேண்டுமானாலும் இச்சட்டத்தைக் கொண்டு சிறையிடலாம்; பழிவாங்கலாம்; வரம்பற்ற அதிகாரத்துடன் ஆட்டம் போடலாம். அதை யாரும் கேள்வி கேட்க முடியாது. உச்சநீதி மன்றத்தில் முறையீடு செய்வதை ஏழைகளால் நினைத்துக்கூட பார்க்க முடியாது.

மொத்தத்தில் நாட்டையே சிறைச்சாலையாக்கி, குடிமக்கள் அனைவரையுமே குற்றவாளிகளாக்கி, அதிகார வர்க்கம் - போலீசு, இராணுவம் - சிறைச்சாலை அடங்கிய அரசு எந்திரத்தின் கையில் எல்லையில்லா அதிகாரங்களைக் கொடுத்து, பெயரளவிலான குடியுரிமை - ஜனநாயக உரிமைகளையும் காலில் போட்டு மிதிக்கும் மிகக் கொடூரமான பாசிச சட்டமாகவே புதிய தடா சட்டம் உருவெடுத்துள்ளது.

www.padippakam.com

# கொத்தடிமைக் கொடூரத்தில் தாழ்த்தப்பட்டோர்

**சமூக நீதிக் காவலர்களின் ஆட்சியோ, இல்லை இந்துமதவெறியர்களின் ஆட்சியோ, நாடெங்கிலும் தாழ்த்தப்பட்டோர் மீது ஏவிவிடப்படும் தாக்குதல்களும், திணிக்கப்படும் கொத்தடிமைத்தனமும் கேள்விமுறையின்றித் தொடரவே செய்கிறது.**

இந்த நாட்டில் பசு, நாய் போன்ற வீட்டு விலங்குகள் மீது காட்டப்படும் கருணை, புலி, மான் போன்ற காட்டு விலங்குகள் மீது செலுத்தப்படும் அக்கறை சக மனிதர்களான தாழ்த்தப்பட்ட மக்களிடம் காட்டப்படுவதில்லை. இதற்காக இந்த நாடே வெட்கித் தலைகுனிய வேண்டும்.

ஒரிசாவின் நந்தன் கண்ணன் வனவிலங்குகள் காப்பகத்தில் 12 வெள்ளைப் புலிகள் மர்மமாக மாண்டு போகின்றன. மத்திய - மாநில அரசுகள் பதறிப் போகின்றன. மைய சமூக நீதித்துறை அமைச்சர் மேனகா காந்தி துடிதுடித்துப் போகிறார். உடனடியாக இலண்டனில் இருந்து மருத்துவ நிபுணர்கள் பறந்து வருகின்றனர். புலிகளுக்குத் தரப்பட்ட நோய்த் தடுப்பு மருந்துகள் தாம் நஞ்சாகிக் கொன்றுவிட்டனவா என்று ஆழமான பரிசோதனைகள் நடக்கின்றன. எஞ்சிய புலிகளின் பாதுகாப்பிற்குத் தீவிர ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

காஞ்சிமடம் சங்கராச்சாரிகளும், பசுபரிபாலன சங்கமும் இணைந்து காஞ்சியில் அகில இந்திய பசுவதை தடுப்பு மாநாடு கூட்டுகிறார்கள். மடாதிபதிகளும் ஆதீன கர்த்தாக்களும் கலந்து கொள்ளுகின்றனர். சமூக நீதித்துறை மந்திரியாக இருந்து கொண்டு பிராணிகள் நீதிக்காகப் பாடுபடும் மேனகா காந்தி தில்லியில் இருந்து ஓடோடி வருகிறார். சங்கராச்சாரிகளின் ஆசிர்வாதம் பெற்றுக் கொண்டு, பசுக்களுக்காகச் சரஞ்சரமாகக் கண்ணீர் வடிக்கிறார். "கிழட்டு மாடுகளானாலும் வெட்டக் கூடாது; புனிதமான பசுக்களின் இரத்தம் இந்த பூமியில் இனியும் சிந்தக் கூடாது; சகல மரியாதைகளுடனும் பாதுகாத்து, பூஜித்து, இறந்தால் பூசைகள் நடத்திப் புதைக்க வேண்டும்" என்கிறார் சங்கராச்சாரி.

ஆனால், தாழ்த்தப்பட்ட சாதிக்காரனின் இரத்தம் இந்த மண்ணில் சிந்தாமல் எந்த நாளும் முடிவதில்லை. தாழ்த்தப்பட்ட பெண் பாலியல் வன்முறைக்குப் பலியாகாமல் எந்த நாளும் விடிவதில்லை.

பசு வதையால் தமது பார்ப்பன - சனாதன இந்து மதத்தின் புனிதம் பாதிக்கப்படுவதாகப் பதறித் துடிக்கிறார்கள். அதே பார்ப்பன - சனாதன இந்து மதம் உருவாக்கிக் காத்துவரும் சாதி வெறியால் தலித்வதை நாளும் பெருகி வருகிறது!

பசு வதை என்று சொல்லப்படுவது கூட ஒருமுறை கொல்லப்படுவதோடு முடிந்து போகிறது. ஆனால், தாழ்த்தப்பட்ட மக்களோ, உயிரோடு வைத்து வக்கிரமான பலவழிகளிலும் சித்திரவதை செய்யப்படுகின்றனர்.

***

தீனானாத் பைதா, 55 வயது லாரி டிரைவர் - ஓட்டுநர். காரு ராம் அந்த லாரியின் கிளீனர் - உதவியாளர். இருவரும் தாழ்த்தப்பட்டவர்கள். இவர்கள் இருவரையும் பிடித்துக் கொண்டு போய் தனது பாட்னா மாளிகையின் புறக்கடை வீட்டில் 33 நாட்கள் அடைத்து வைத்துக் கொண்டார், பீகார் கூட்டுறவுத் துறை துணை அமைச்சர் லலித் குமார் யாதவ். தினந்தோறும் மூங்கில் கம்பினால் அடித்து நகர முடியாமல் கிடத்தப்பட்டனர். அவர்களது வாயில் மூத்திரமடித்திருக்கிறார் மந்திரி; அடித்த அடியில் கட்டை விரல் நகத்தைச் சிதைத்துப் பிய்த்துப் போட்டார். பல நாட்கள் பட்டினி போடப்பட்டு, மூத்திரத்தையும் அழுக்குத் தண்ணியுமே குடித்து உயிர் பிழைத்திருந்தனர்.

அவ்விரு தாழ்த்தப்பட்ட தொழிலாளர்களும் அப்படி என்ன குற்றம் புரிந்துவிட்டனர்?

பாட்னா அருகே உள்ள போஜ்பூர் மாவட்டம் நகரி கிராமத்துக்காரர் இந்த தீனானாத் பைதா. இவர் ஏழாண்டுகளாக மந்திரி லலித் யாதவின் அண்ணன் கரேந்திர யாதவிடம் லாரி ஓட்டுநராக வேலை செய்தார். அவரும் கரோ ராமும் சாசரம் நகரில் இருந்து பாட்னாவுக்கு கருங்கல் ஜல்லி ஏற்றிக் கொண்டு வந்தனர். பாட்னா - ஹாஜிபூர் கங்கை பாலத்தைக் கடக்கும் முன் லாரியை ஒரு பெட்ரோல் பங்கில் நிறுத்திவிட்டு தேநீர் குடிக்கப் போயினர். திரும்பி வந்த போது லாரி திருடு போயிருந்தது. முதலாளியிடம் சொல்லுவதற்கு அஞ்சி இரண்டு நாட்கள் வீணாகத் தேடிவிட்டுப் பலனின்றி முதலாளியிடமே முறையிட்டனர்.

**நிரபராதிகள் என ஊரறியத் தெரிந்த பின்னரும், லாரி திருடியதாகப் பொய் வழக்கு போட்டுச் சிறையில் அடைக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட தொழிலாளர்கள் தீனாநாத் பைதா (இடமிருந்து இரண்டாவது) மற்றும் காருராம்: மேல்சாதி அடக்குமுறைக்கு அரசு இயந்திரத்தின் சேவகம்.**



www.padippakam.com

அப்புறம்தான் ஆரம்பித்தது நரக வேதனை. லாரி திருடு போனதில் ஓட்டுநரும் - உதவியாளரும் உடந்தையாக இருந்தனர் என்று சந்தேகித்துப் பூட்டி வைத்துச் சித்திரவதை செய்தனர், மந்திரியும் சகோதரரும். 9 நாட்களுக்குப் பிறகு லாரித் திருட்டுக்கு உடந்தையாக இருந்ததாக இருவர் மீதும் ஹாஜிபூர் போலீசு நிலையத்தில் புகார் கொடுத்தனர். நாளாம் நாளே, அங்கிருந்து 100 கி.மீ. தள்ளியிருக்கும் முஜாபர்பூர் நகரில் லாரி திருடுவதையே தொழிலாகக் கொண்ட இரண்டு சகோதரர்கள் வீட்டுமுன் நின்றிருந்த லாரி பிடிபட்டது. அவர்களைக் கைது செய்து வழக்குமன்றம் வரும்வழியில் ஒருவன் தப்பிவிட்டான்.

லாரிதான் கிடைத்துவிட்டது, குற்றவாளிகள் தெரிந்து விட்டனர் என்பதோடு அத்தொழிலாளர்களின் சித்திரவதை முடிந்துவிடவில்லை. தொடர்ந்தது. ஒரு போலீசுக்காரன் மூலம் தகவலறிந்த வானொலி நிருபர் வெளி உலகுக்கு அறிவித்தார். அத்தொழிலாளர்கள் "விடுவிக்கப்பட்டு", உடனடியாக விலங்கு பூட்டி லாரி திருடர்கள் என்று வழக்குப் போட்டுச் சிறையிலடைக்கப்பட்டனர். பீகாரின் ஆளும் கட்சித் தலைவரும் சமூக நீதிக் காவலருமான லல்லு பிரசாத் யாதவும் மாநிலத் தலைமைப் போலீசு ஜேகப்பும் போட்ட உத்தரவின் பேரிலேயே இது நடந்தது.

அரசியல் ஆதாயம் கருதி எதிர்க்கட்சிகளும், கூட்டணிக் கட்சிகளும் பிரச்சினையைக் கிளப்பி நிர்பந்திக்கவே, வேறு வழியின்றி அத்தாழ்த்தப்பட்ட தொழிலாளர்கள் விடுவிக்கப்பட்டனர். மந்திரி மீதும் அவரது சகோதரர் மீதும் வழக்குப் போட்டாலும் கைது செய்யப்படவில்லை. மந்திரியைப் பதவி நீக்கம் செய்வதற்குப் பதில் தாமே பதவி விலக அனுமதிக்கப் பட்டார். குற்றஞ்சாட்டப்பட்ட மந்திரி, முதல் மந்திரி வீட்டிலேயே விருந்துண்டு தங்கி இருந்த போதும் தலைமறைவாகி விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒன்று, இரண்டு அல்ல. ஏழாண்டுகள் அந்தக் குடும்பத்துக்காக உழைத்து ஓடாகிப் போனார்கள் அந்த லாரித் தொழிலாளர்கள். அப்படியும் தனது ஒரு உடமை பறிபோய் விட்டதும் ஆத்திரம் தலைக்கேறி, மிருகமாக மாறி சித்திரவதை செய்திருக்கிறார்கள், கிரிமினலாக இருந்து அரசியல்வாதியாக உயர்ந்துள்ள, சாராய வியாபாரியின் குடும்பத்தினர்.

இதேபோல, தனது கார் விபத்துக்குள்ளானதற்குக் காரணமானவர்கள் என்று கருதிய தாழ்த்தப்பட்ட தொழிலாளர்கள் இருவரை தனக்குச் சொந்தமான வீட்டில் இரண்டு நாட்கள் பூட்டி வைத்து சித்திரவதை செய்தார் உத்திரப்பிரதேச மந்திரி ஒருவர். இச்செய்தியும் அம்பலமாகி பத்திரிக்கையில் வெளிவந்த பிறகே அவ்விருவரை விடுதலை செய்திருக்கிறார்.

பீகாரில் அந்த இரண்டு லாரித் தொழிலாளர்கள் வதைக்கப்பட்ட செய்தியைப் படித்த ஒரு வாசகர் எழுதுகிறார், "பீகார் இந்தியாவின் ஒரு பகுதியா? இந்தியாவின் அரசியல் சட்டம் பீகாருக்குப் பொருந்துமா? அங்கு ஜனநாயகம் நடைமுறையில் இருக்கிறதா? இந்தியத் தண்டனைச் சட்டம் அங்கே செல்லுபடியாகுமா? அங்கே ஆட்சி நடத்துபவர்கள் மனிதர்கள் தானா? லலித் யரதவ் என்பது ஒரு மிருகத்தின் பெயரா? அந்த மிருகம் என்ன தின்னுகிறது? அதை நான் தொட்டால் கடிக்குமா? - இம்மாதிரியான கேள்விகள் கேட்கவும் முடியாத அளவு எனது மகன் சிறுவனாக இருக்கிறான். ஒருநாள் அவன் நிச்சயம் கேட்பான். அவனுக்கு நான் என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை. தயவு செய்து யாராவது எனக்கு வழி காட்டுவார்களா?" என்று ஆத்திரம் பொங்க எழுதுகிறார், பெங்களூரில் இருந்து.

அந்த வாசகருக்குத் தெரியாது, பீகார் மட்டுமல்ல; அவர் வாழும் கர்நாடகா உட்பட இந்தியாவின் எல்லா மாநிலங்களிலும் இப்படித்தான் நடக்கின்றன. ஏழைகள் என்றால் இந்த நாட்டில் எங்கேயும் சட்டமும் - ஜனநாயகமும் கிடையாது. அதுவும் தாழ்த்தப்பட்டவர் என்றால் பெயருக்குக் கூட கிடையாது. இந்த நாட்டில் ஆட்சி நடத்துபவர்கள் எதுவாகவும் இருக்கலாம், ஆனால் நிச்சயம் மனிதர்கள், இதயமுள்ள மனிதர்கள் அல்ல. லலித் யாதவ் போன்ற மனித மாமிசம் உண்டு, மனித இரத்தம் குடிக்கும் மிருகங்கள் தான் மந்திரிகளாக உள்ளனர்.

**ஆயிரம் ரூபாய் கடனுக்காக காலில் விலங்கிடப்பட்டுக் கொத்தடிமையாக்கப் பட்ட தாழ்த்தப்பட்ட கல்லுடைக்கும் தொழிலாளி வெங்கடாசலா.**



அவ்வளவு தூரம் போய் பீகாரைப் பற்றி கேள்விகள் கேட்கும் பெங்களூர் வாசகருக்கு இதோ, அவர் வாழும் கர்நாடகாவிலேயே என்ன நடக்கிறது என்பதைக் காட்டுவோம்.

வெங்கடேசு, 58 வயது தாழ்த்தப்பட்டவர், நினைவு தெரிந்த நாள் முதல் கல்லுடைக்கும் தொழிலாளியாகவே பிழைப்பு நடத்துகிறார். அவருடைய தந்தை ஆந்திரப் பிரதேசத்தின் வறண்ட இராயலசீமா பகுதியில் இருந்து மைசூர் அருகே காவிரியில் கிருஷ்ணராஜ சாகர் அணையின் கட்டுமானத் தொழிலாளியாகக் குடியேறினார். அப்போதிலிருந்து வெங்கடேசின் குடும்பம் மாண்டியா மாவட்டத்தில் கல்லுடைத்து வாழ்ந்து வருகிறது.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு சிறீரங்கபட்டினம் அருகே அரகீரே குன்றில் கல்லுடைக்கும் வேலையில் சேர்ந்தார். விடிந்தது முதல் இரவு வரை அரை லாரி கல்லுடைத்தால் 55 ரூபாய் கூலி கிடைக்கும். அவரது முதலாளி புட்டாசாமி ஜனதா தளத்தைச் சேர்ந்த மைசூர் நகரவையின் முன்னாள் உறுப்பினர். லாரி ஓட்டுநராக இருந்து முதலாளியானவன். வேலைக்குச் சேர்ந்தபோது வெங்கடேசு கேட்டவுடன் 4,250 ரூபாய் கடனாகக் கொடுத்தார் புட்டாசாமி. இரண்டாண்டுகளில் 10,500 ரூபாய் வட்டியாகவும் முதலாகவும் செலுத்தி விட்டார். கூடுதலாகக் கூலி கொடுக்கும் வேறு இடத்துக்கு வேலைக்குப் போக முயன்றார்.

அவ்வளவுதான்; தனக்குள் உள்ள மிருகத்தை உசுப்பிவிட்டான் புட்டாசாமி. இன்னும் 7,000 ரூபாய் திருப்பித் தர வேண்டும் என்று சொல்லி, அடியாட்களை ஏவி, வெங்கடேசுவைத் தனது ஜீப்பில் தூக்கிப் போட்டுக் கொண்டு நகருக்கு போனான். ஒரு மூன்றடிச் சங்கிலியால் இரண்டு கால்களையும் பிணைத்து, கழட்ட முடியாத அளவு பற்ற வைத்தான்.

வெங்கடேசுவைப் போலவே அவர் மகன் கோபால், உறவினர்கள் வெங்கடாச்சலா, நாகராஜு, கிருஷ்ணா ஆகியோரும் 500 ரூபாய், 1000 ரூபாய் வரை கடன் வாங்கியிருந்தனர். அதுவே புட்டாசாமியின் கணக்குப் புத்தகத்தில் 5,000 ரூபாய், 10,000 ரூபாய் என்று பெருகி விட்டது. அவர்களும் சங்கிலியால் பிணைக்கப்பட்டனர். சங்கி

www.padippakam.com

லியின் விலை, அதைப் பற்ற வைக்கும் செலவு, போக்குவரத்து செலவு கூட அந்தத் தொழிலாளர்களின் கணக்கில்தான் ஏறியது.

15 கிலோ எடையுள்ள அந்த இரும்புச் சங்கிலியைத் தூக்கி வைத்து இரண்டு அடிக்கு மேல் எடுத்து வைத்து நடக்கவும் முடியாது. உள்ளாடை கூட அணிய முடியாது. லுங்கி — வேட்டியை சுற்றிக் கொண்டு வேலை செய்கின்றனர். இரும்பு கம்பி காலை அறுத்து விடக் கூடாது என்று கிழிந்த துணியைச் சுற்றிக் கொண்டு இருக்கிறார்கள். "என் மகன் தன் மனைவியுடன் படுத்து இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. எங்கள் வலியை மற்றவர்களுக்கு எப்படித்தான் விவரிக்க முடியும்" என்கிறார் வெங்கடேசு.

ஒருநாள் கிருஷ்ணா என்ற தொழிலாளி தனது லுங்கியைத் துவைப்பதற்காக ஒரு கால்சட்டையைச் சுற்றிக் கொண்டிருந்தார். அதை ஒரு கங்காணி பார்த்து விட்டான். அந்தக் "குற்றத்துக்காக" கிருஷ்ணாவை ஒரு மரத்தில் கட்டித் தொங்க விட்டு அடித்த அடியில் இரத்தம் பீறிட அவர் நகங்கள் பிய்ந்து போயின.

பெண்களோ பாலியல் வன்முறை உட்பட சொல்ல முடியாத பல கொடுமைகளுக்கும் ஆளாகின்றனர். சமீபத்தில் கமலாம்மா என்ற பெண் தொழிலாளி இத்தகைய அக்கிரமங்களில் இருந்து விடுபடும் ஒரே வழியாகத் தீக்குளித்து மாண்டு போனாள். முதலாளிக்கெதிராக மூச்சு விட்டால் பெண்கள், குழந்தைகள் எவரானாலும் குண்டர்களால் அடித்து நொறுக்கப்படுகின்றனர். வெங்கடாசலம்மா என்ற பெண் தொழிலாளி, முதலாளியின் அடியாட்களை ஏதோ சொன்னாள் என்பதற்காக அடித்து கையை முறித்து விட்டார்கள். பெண்கள் உணவு தானியம் வாங்குவதற்கு வெளியே போனாலும் அடியாட்கள் கண்காணிக்கின்றனர். லாரித் தொழிலாளர்களிடம் கூட பேச முடியாது.

மொத்தம் 23 குடும்பங்கள் (25 ஆண்கள், 30 பெண்கள், 30 குழந்தைகள்) இவ்வாறு நிரந்தர பயபீதியில் அடிமைப் படுத்தப்பட்டிருந்தனர்.



**வறுமையின் காரணமாக கொத்தடிமைகளாக்கி, மகாராஷ்டிராவுக்குக் கொண்டு செல்லப்பட்ட தூத்துக்குடியைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட சிறுவர்கள்.**

ஒருநாள் இந்தக் கொடுமைகளில் இருந்து விடுதலை கிடைப்பதைப் போல ஒரு அதிசயம் நடந்தது. கடந்த ஜூனில், உள்ளாட்சித் தேர்தலுக்குத் துண்டறிக்கை கொடுக்கப் போனார் லோகேஷ் என்ற எதிர்க்கட்சித் தொண்டர். அவர் குடிசைக்குள் எட்டிப் பார்த்தபோது சங்கிலிகளில் பிணைக்கப்பட்ட வெங்கடேசுவைக் கண்டு அதிர்ச்சியுற்றார். எதிர்க்கட்சித் தலைவர் நஞ்சுண்டகௌடாவுக்கு விடயம் தெரிய வரவே, 60 கட்சித் தொண்டர்கள், வக்கீலுடன் கல்லுடைக்குமிடத்துக்குள் புகுந்து அங்கிருந்து கொத்தடிமைகளை மீட்டனர். குண்டுவீசி அவர்களைக் கொன்று விடுவதாக மிரட்டிய புட்டாசாமியின் மகன் மற்றும் அடியாட்களுடன் மோதிய பிறகே மீட்பு நடவடிக்கையைச் சாதிக்க முடிந்தது. இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த போலீசின் முன்னிலையிலேயே முதலாளியின் மகன், மீட்கப்பட்டவர்கள் போக பிற தொழிலாளர்களை வேறிடத்துக்குக் கொண்டு போய் விடும்படி தமது அடியாட்களுக்கு உத்திரவு போட்டான்.

மாவட்டத் தலைமை அதிகாரி உட்பட போலீசுக்காரர்கள், முதலாளி தப்பி ஓடித் தலைமறைவாகி விட அனுமதித்தனர்; தொழிலாளர்களைப் பிணைத்திருந்த சங்கிலியை அகற்றிவிட்ட பிறகே வழக்குமன்றத்துக்குக் கொண்டு வந்தனர். போலீசுக்கும் தெரிந்தேதான் இந்த அக்கிரமம் நடந்திருக்கிறது. தாழ்த்தப்பட்ட சாதிக்காரராக இருந்தும் போலீசு மந்திரி மல்லிகார்ஜுன சார்கோ இது குறித்து அக்கறைப்பட்டதாகவே தெரியவில்லை. அவர் மாண்டியாவிலேயே இருந்தும் மீட்கப்பட்ட தொழிலாளர்களின் தற்காலிகத் தங்குமிடத்துக்கு வரவில்லை; அதற்குப் பதில் தான் தங்கியிருந்த பயணியர் விடுதிக்கு வந்து தன்னைக் காணும்படி உத்திரவு போட்டார்.

கர்நாடகாவில் கண்டதைப் போல சங்கிலியால் பிணைக்கப்பட்ட கொத்தடிமைகள் அல்ல, மராட்டிய மாநிலம் இரத்தினகிரி மாவட்டம் சிப்லூன் நகரில் சிக்கிக் கொண்ட 34 தாழ்த்தப்பட்ட சிறுவர்கள்; என்றாலும், அதேஅளவு கொடூரமாகக் கசக்கிப் பிழியப்படுகிறார்கள்.

தமிழ்நாட்டின் தூத்துக்குடி மாவட்டம் சிறீமங்களம் கிராமத்தில் இருந்து ஆளுக்கு 10,000 ரூபாய் அடகு விலைக்கு 34 சிறுவர்களைப் பிடித்து வந்தான், ஜான்சன் சாலமன் நாடார். எல்லோரும் 10-லிருந்து 14 வயதுச் சிறுவர்கள். அவனும் அவனுடைய மைத்துனனுமாக சிப்லூனில் ஒரு கடலை மிட்டாய்த் தொழிலகம் வைத்திருக்கின்றனர். காலை மூன்று மணி முதல் இரவு ஒன்பது மணிவரை இடுப்பொடிய வேலை. இடையே உணவுக்காக இரண்டு 10 நிமிட இடைவெளி. நல்ல உணவு என்பதே அரிசி சாதத்தோடு எப்போதாவது தரப்படும் துவையல்தான். சிறு கொட்டகையில் வெந்து புழுங்கிய அந்தச்சிறார்களின் முட்டிகளும் விரல்களும் காப்புக் காய்த்துக் கிடக்கின்றன. இப்படி உழைத்தும் அந்தச் சிறுவர்களுக்குக் கூலி என்று எதுவுமே கிடையாது. ஆண்டுதோறும் கிறிஸ்துமசுக்கு 150 ரூபாய் மட்டுமே தரப்படும். மற்றபடி வாங்கிய அடகுத் தொகையைத் திருப்பித் தரும்வரை அந்தத் தாழ்த்தப்பட்ட சிறுவர்கள் கொத்தடிமைகளாகக் கிடக்க வேண்டியதுதான் என்பதே ஒப்பந்தம்.


படிப்பகம்

www.padippakam.com




தலித் வதையைப் பற்றி கண்டு கொள்ளாமல், பசு வதையைத் தடுத்து நிறுத்தக் கோரி காஞ்சி சங்கர மடம் நடத்திய கருத்தரங்கில் கலந்து கொண்ட சமூக நீதித்துறை அமைச்சர் மேனகா காந்தி: பார்ப்பன வக்கிரம்.

கொதிக்கும் எண்ணெயில் வெந்து புழுங்குவது மட்டுமல்ல; தொழிலக முதலாளியின் மனைவியிடம் அடி, உதைபட வேண்டும்; அந்தச் சிறுவர்கள் தப்பியோடி விடக்கூடாதென்று, அவர்களுடைய ஆடை உட்பட சிறு உடைமைகளைக் கூடப் பறித்து வைத்துக் கொண்டிருக்கிறாள். "சிரமதான்" என்ற அரசு சாரா நிறுவனத்தின் மூலமாக, அரிபுத்திரன் கடற்கரை பள்ளன் என்ற கொத்தடிமை இளைஞர் வழக்குப் போட்டதில் அவர்கள் மீட்கப்பட்டு தூத்துக்குடி அனுப்பப்பட்டனர். பட்டினியால் வாழும் அந்த ஊர் தாழ்த்தப்பட்ட மக்கள் மீண்டும் அவர்களை அடகு வைக்காமல் இருப்பதற்கு ஏற்பாடு ஏதுமிருக்கிறதா? இல்லை!

உத்திரப்பிரதேசத்தில் கன்ஷிராம், பீகாரில் ராம்விலாஸ் பாஸ்வான், மராட்டியத்தில் அவதாலே, கர்நாடகாவில் ராஜசேகர், தமிழ்நாட்டில் கிருஷ்ணசாமி - திருமாவளவன் என்று தலித் விடுதலை நாயகர்கள்தாம் எத்தனைபேர்! இருந்தாலும் "தலித் வதை" தடுத்து நிறுத்தப்படுகிறதா? "தலித் வதை" புதுப்புது வடிவங்களில் புதுப்பணக்கார அரசியல் ரௌடிகளால் அதிகரித்து வருகிறது.

தாழ்த்தப்பட்ட மக்கள் சுயமரியாதையுடன் வாழ்வதற்கான உரிமை மறுக்கப்படுவது ஒருபுறமிருக்கட்டும். அவர்கள் உயிரோடு வாழ்வதற்கான உரிமையே மறுக்கப்படுகிறது.

உ.பி.யில் மட்டும் இந்தப் புத்தாயிரம் ஆண்டுத் துவக்கத்தில் இருந்து ஏப்ரல் 15 வரை சுமார் நாளும் ஒருவர் வீதம் 99 தாழ்த்தப்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். பீகாரில் தாழ்த்தப்பட்ட மக்களை திரளாகக் கொலை செய்து, கற்பழிப்பது என்பதற்காகவே சில மேல் சாதிப் படைகள் உருவாகி உள்ளன. ரன்வீர் சேனா என்ற மேல்சாதி - நிலப்பிரபுக்களின் சொந்தப் படை 1995 ஏப்ரலில், போஜ்பூர் அருகே கோபிராவில் 3 தாழ்த்தப்பட்டவரைக் கொன்றது. அதன் பிறகு இதுவரை 228 தாழ்த்தப்பட்ட கூலி, ஏழை விவசாயிகளைக் கொன்றிருக்கிறது. இதில் பெண்களும், குழந்தைகளும் கூட அடங்குவர். இதுவரை ஒரேஒரு ரன்வீர் சேனை உறுப்பினரைக் கூட போலீசு பிடிக்கவில்லை. முக்கியமாக, அச்சேனையின் தலைவர் பரமேசுவர் சிங் பலமுறை நிருபர் கூட்டத்தை நடத்துகிறார்.

உ.பி. அளவுக்கு அமைப்பு ரீதியில் திரண்ட அரசியல் - கிரிமினல் கும்பலோ, பீகாரைப் போல ஆயுதந்தாங்கிய சேனைகளோ தமிழ்நாட்டில் இல்லை என்றாலும் "தலித் வதை"யும், படுகொலையும் தொடரவே செய்கின்றன.

இதுவரை, இந்தியாவில் எங்குமே "தலித் வதை", "தலித் படுகொலை"களுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் மா-லெ இயக்கங்கள் மட்டுமே தாழ்த்தப்பட்ட மக்களை ஆயுதமேந்தும் வழியில் திரட்டுகின்றன. இந்த வழிதான் அம்மக்களிடையே உண்மையான நம்பிக்கையையும், சுயமரியாதையையும், பாதுகாப்பையும் தருவதோடு எதிரிகளையும் அஞ்சி நடுநடுங்கச் செய்கின்றன. இதற்கு மாற்றாக, இடஒதுக்கீடு, அதன் மூலம் சமூக, பொருளாதார முன்னேற்றம் என்ற வழி தாழ்த்தப்பட்ட மக்களின் ஒரு பிரிவினரிடையே வீண் பிரமையையும் அரசியல் பிழைப்புவாதிகளையும் வளர்க்கவே உதவும்.

● பாலன்

## பிரேமானந்தா ஆசிரமத்தைக் கொளுத்தும் போராட்டம்: பொய்வழக்கு தூளானது!

ஏறத்தாழ ஆறாண்டுகளுக்கு முன்பு போலிச் சாமியார் பிரேமானந்தாவின் காம்வெறியாட்ட அட்டூழியங்கள் அம்பலமானபோது, திருச்சியில் மக்கள் கலை இலக்கிக் கழகம், புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகள் இணைந்து காமவெறியன் பிரேமானந்தாவைக் கைது செய்து தூக்கிலிடக் கோரி 19.11.94-இல் ஆர்ப்பாட்டத்தை நடத்தின. மருத்துவ பரிசோதனைக்காக அவன் புத்தூர் அரசு மருத்துவமனைக்குக் கொண்டுவரப்பட்டபோது, செருப்பு - துடைப்பக் கட்டைகளுடன் 21.11.94-இல் ஆர்ப்பாட்டம் செய்தன. அதன் தொடர்ச்சியாக 6.12.94 அன்று காமவெறியன் பிரேமானந்தா ஆசிரமத்தைக் கொளுத்தும் போராட்டத்தை அறிவித்தன.

1994 டிசம்பர் 6-ஆம் நாளன்று காலை 10 மணியளவில் திருச்சி தெப்பக்குளம் அஞ்சலகம் அருகே, தமிழகத்தின் அவமானச் சின்னமாக விளங்கிய காமவெறியன் பிரேமானந்தாவின் ஆசிரமத்தைக் கொளுத்த கையில் தீப்பந்தங்களுடன் ஆர்ப்பாட்ட ஊர்வலம் புறப்பட்டபோது, போலீசார் தடியடி நடத்தி கலைத்து, தோழர்களைக் கைது செய்தனர். முன்னணித் தோழர்கள் 55 பேர் மீது தடையை மீறிதாக வழக்கு சோடித்தனர். 'குற்ற'த்தை ஒப்புக் கொள்ள மறுத்து தோழர்கள் எதிர்வழக்காட, இந்த வழக்கு விசாரணை ஆறாண்டுகளாக நீடித்து, கடந்த ஜூன் முதல் நாளன்று இறுதி விசாரணைக்கு வந்தது.

இவ்வழக்கை விசாரித்த நீதிபதி கிருஷ்ணன், (நடுவர் எண்: 4 நீதிமன்றம்), "நகரக் காவல் சட்டப் பிரிவு 30(2)-ஐ மீறியதாக எதிரிகள் மீது குற்றம் சாட்டியுள்ள போலீசார், அச்சட்டப் பிரிவின் படியிலான குற்றச்சாட்டு எதையும் எதிரிகள் மீது குறிப்பிடவில்லை; குற்றம் சாட்டப்பட்டவர்கள் சம்பவ இடத்தில் இருந்தார்களா? சட்ட விரோதமாகக் கூடியவர்கள் யார், யார்? எத்தனை பேரிடம் தீப்பந்தம் இருந்தது? தீப்பந்தங்கள் எந்த வகையில், பொது மக்களில் யாருக்கு, என்ன தீங்கு விளைவித்தது என்பதற்கான சாட்சியங்கள் இல்லை" என்று கூறி கைது செய்யப்பட்ட 55 தோழர்களும் குற்றவாளிகள் அல்ல என்று 5-ந் தேதியன்று தீர்ப்பளித்து விடுதலை செய்துள்ளார். போராட்டத்தை ஒடுக்கி வழக்கு சோடித்த போலீசு கும்பல் மூக்குடைபட்டுப் போயுள்ளது. உறுதி குலையாமல் போராடிய தோழர்களுக்கும், காமவெறியன் பிரேமானந்தாவுக்கு எதிராக வெஞ்சினம் கொண்ட பொது மக்களுக்கும் கிடைத்துள்ள வெற்றியே இது!

www.padippakam.com



## தேவர்சாதிவெறியாட்டம்: ஊரைவிட்டு விரட்டப்பட்ட ''தலித்'' பஞ்சாயத்து தலைவர்

தாழ்த்தப்பட்டவன் அரசுத் தலைவராகலாம்; ஆனால் பஞ்சாயத்துத் தலைவராக முடியாது. மேலவளவில் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த பஞ்சாயத்துத் தலைவரை வெட்டிக் கொன்ற சாதி வெறியர்கள், மதுரை மாவட்டம் மருதன்குடி கிராமத்தின் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த பஞ்சாயத்து தலைவருக்குக் கொலை மிரட்டல் விடுத்து, ஊரைவிட்டு விரட்டியுள்ளனர்.

மருதன் குடி கிராமத்தில், 1996 வரை தேவர் சாதியினரே பஞ்சாயத்துத் தலைவராக இருந்து வந்தனர். அதன் பிறகு அரசு, இக்கிராமத்தை ''ரிசர்வ்'' தொகுதியாக அறிவித்தது. இதனால் தமது சாதிய ஆதிக்கமும் கௌரவமும் பறிபோகும் என்று தேவர் சாதிவெறியர்கள் கட்டைப் பஞ்சாயத்து நடத்தி, ஊர்க் கட்டுப்பாடு போட்டு அரசின் முடிவை எதிர்த்து தேர்தலைப் புறக்கணித்தனர். இதேபோல, மதுரை மாவட்டத்தின் கீரிப்பட்டி, பாப்பாகுடி பஞ்சாயத்துகளிலும் இதே காரணத்தால் உள்ளுராட்சித் தேர்தல் நடைபெறவில்லை. மருதன்குடி கிராமத்தில் ஒரு தாழ்த்தப்பட்ட இளைஞர், ஊர்க் கட்டுப்பாட்டை மீறி வேட்பு மனு தாக்கல் செய்ததும், தேவர் சாதி வெறியர்கள் வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டனர். இதனால் தேர்தல் தள்ளி வைக்கப்பட்டது. இச்சாதி வெறியாட்டத்தை ஒட்டி கைது செய்யப்பட்ட தேவர் சாதி வெறியர்களும் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.



சாதிவெறிக்கு அரசே உடந்தை. சாதி வெறியர்களால் தாழ்த்தப்பட்ட பஞ்சாயத்துத் தலைவர் ஊரைவிட்டு விரட்டப்பட்டதால், பூட்டிக் கிடக்கும் மருதன்குடி பஞ்சாயத்து அலுவலகம்.

அதன் பிறகு மாவட்ட நிர்வாகத்தின் வலியுறுத்தல் காரணமாக, கடந்த ஆண்டு மே 26-ந் தேதியன்று பஞ்சாயத்து தேர்தலுக்கு ஏற்பாடாகியது. இக்கிராமத்தில் உள்ள மொத்த வாக்காளர்கள் 808 பேரில் தேவர் மற்றும் பிற மேல்சாதியினர் 593 பேராவர். இம்மேல்சாதியினர் கட்டைப் பஞ்சாயத்து கூடி, ரிசர்வ் பஞ்சாயத்து என்பதால் நாகர் என்ற தாழ்த்தப்பட்ட கூலி விவசாயியைப் பிடித்து இழுத்து வந்து, அவரைத் தமது பொம்மை வேட்பாளராக அறிவித்து, அவரையே பஞ்சாயத்துத் தலைவராகத் தேர்ந்தெடுக்குமாறு ஊர்க்கட்டுப்பாடு விதித்தனர். ஊர்க்கட்டுப்பாட்டை மீறி தாழ்த்தப்பட்ட சாதியைச்சேர்ந்த மருது பாண்டி என்பவரும் போட்டியிட்டார். எனினும் மேல்சாதியினர் வாக்குகள் காரணமாக நாகர் அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றார்.

மே 27-ந் தேதியன்று தேர்தல் முடிவு அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. அடுத்த நான்காவது நாளில் — மே 31-ந் தேதியன்று நாகரைப் பதவி விலகுமாறு தேவர் சாதிவெறியர்கள் அச்சுறுத்தினர். கிராம கட்டைப் பஞ்சாயத்து கூட்டத்துக்கு இழுத்து வந்து, அவரைப் பதவி விலகல் கடிதத்தில் கட்டாயமாகக் கையெழுத்திட வைத்தனர். அக்கடிதமும், ரிசர்வ் பட்டியலிலிருந்து இக்கிராமப் பஞ்சாயத்தை நீக்குமாறு கோரிக்கை மனுவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் முதல்வருக்கும் அனுப்பப்பட்டது. பின்னர் நாகர் அன்றாடம் தனது கூலிவேலையைச் செய்து வந்தார்.

ஆறு மாதங்களுக்குப் பிறகு மீண்டும் பிரச்சினை ஆரம்பமானது. மாவட்ட நிர்வாகம் நாகரின் பதவி விலகலை அங்கீகரித்து அறிவிப்பு வெளியிடாத நிலையில். இதனால் இன்னும் அவர் பஞ்சாயத்துத் தலைவராகவே நீடிக்கும் நிலையில், தேர்தலுக்குப் பிறகு 6 மாதங்களாக பஞ்சாயத்து ஊழியர்களுக்கு வழங்கப்படாத சம்பளத்தைப் பட்டுவாடா செய்ய நாகர் ஏற்பாடுகள் செய்து உதவினார். இதனால் ஆத்திரமடைந்த சாதிவெறியர்கள், ''யாரைக் கேட்டு நீ பஞ்சாயத்துத் தலைவரைப் போல செயல்பட்டாய்?'' என்று கேட்டு, ஊர்க் கட்டுப்பாட்டை மீறிய துரோகி என்று குற்றம் சாட்டி கொலை செய்து விடுவோம் என்று எச்சரித்தனர். பீதியடைந்த நாகர் உயிருக்கு அஞ்சி தனது மனைவி மற்றும் இரு குழந்தைகளுடன் ஊரை விட்டே ஓடிவிட்டார். இப்போது அவர் சிவகங்கை அருகே ஒரு கிராமத்தில் இச்சாதிவெறியர்களுக்குத் தெரியாமல் தங்கியுள்ளார். மீண்டும் மருதன்குடி கிராமத்திற்குள் நுழையவே அஞ்சுகிறார்.

பஞ்சாயத்து தேர்தல் முடிந்து இத்தனை காலமும் கிராம பஞ்சாயத்து அவை கூட்டப்படவில்லை. பஞ்சாயத்து துணைத் தலைவர் தேர்தலும் நடைபெறவில்லை. ஆனாலும் மாவட்ட நிர்வாகமோ ஆட்சியாளர்களோ இச்சாதிய அடக்குமுறை - அச்சுறுத்தல் பற்றி இன்றுவரை வாய் திறக்கவில்லை. கேள்வி முறையின்றித் தொடரும் சாதிவெறியர்களின் ஆதிக்கம் - அடக்குமுறைக்கு எதிராக சிறு துரும்பைக் கூட அசைக்காமல் ஒட்டு மொத்த அரசியலமைப்பே உடந்தையாக நிற்கிறது. 'சமத்துவபுரம் கண்ட சரித்திர நாயக'னோ, சாதிய சங்கங்களுக்கு எதிராக வீரவசனம் பேசிக் கொண்டிருக்கிறார்.

## அகழ்வாராய்ச்சி கண்டுபிடிப்பும் இந்துவெறியர்களின் அவதூறும்

பதேபூர் சிக்ரி - மொகலாய சாம்ராஜ்ஜியத்தின் பிரபலமான மன்னரான அக்பர் ஆட்சியில், சிறிது காலத்திற்கு தலைநகரமாக விளங்கிய, ஆக்ரா அருகிலுள்ள சிறிய ஊர். ஐ.நா. மன்ற கல்வி - அறிவியல் பண்பாட்டுக் கழகத்தாலும் (யுனெஸ்கோ), இந்திய தொல் பொருள் ஆராய்ச்சித் துறையாலும் பராமரிக்கப்பட்டு வரும் தொன்மை வாய்ந்த சுற்றுலாத் தலம். கடந்த ஆண்டு டிசம்பர் இறுதியில், இங்குள்ள அரண்மனை வளாகத்தில் இந்திய அகழ்வாராய்ச்சித் துறையினர் புதைந்து போயிருந்த தொன்மை வாய்ந்த ஜைன சரசுவதி சிற்பம், ஜைன தீர்த்தங்கரர்களின் சிலைகள் மற்றும் ஜைனகோயிலின் மிச்ச சொச்சங்களைக் கண்டறிந்தனர். இச்சிற்பங்கள் 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அரிய படைப்புகள் என்று உலகிற்கு அறிவித்தனர்.

இந்த அரிய கண்டுபிடிப்பு பற்றிய செய்தி வெளியானதும், அதைத் தமது முசுலீம் எதிர்ப்பு நோக்கங்களுக்குக் கேடாகப் பயன்படுத்த இந்துவெறி கும்பல் இறங்கிவிட்டது. அயோத்தியில் இராமன் கோயிலை இடித்து பாபர் மசூதி கட்டப்பட்டதாக வரலாற்றைத் திரித்து இந்து வெறியூட்டியதைப் போலவே, ''மொகலாயப் பேரரசர் அக்பர் ஆட்சிக் காலத்தில் பதேபூர் சிக்ரி தலைநகராக உருவாக்கப்பட்டபோது, அங்கிருந்த ஜைன — இந்து கோயில்கள் இடிக்கப்பட்டன. முசுலீம் அல்லாத பிற மதத்தினர் துன்புறுத்தப்பட்டு ஒடுக்கப்பட்டனர்; இதை அகழ்வாராய்ச்சி கண்டுபிடிப்புகள் நிரூபித்துக் காட்டுகின்றன'' என்று கீழ்த்தரமான பிரச்சாரத்தில் இந்து வெறி கும்பல் ஈடுபட்டு வருகிறது. இதற்கு சில எடுபிடி வரலாற்று ஆசிரியர்களையும் துணைக்கு சேர்த்துக் கொண்டுள்ளது.

அக்கால முசுலீம் மன்னர்களை இந்துக்களையும் பிற மதத்தினரையும் ஒடுக்கிய கொடுங்கோலர்களாக சித்தரித்து, அதற்கு

படிப்பகம்

www.padippakam.com





பதேபூர் சிக்ரிஅரண்மனை வளாகத்தில் நடந்த அகழ்வாராய்ச்சியின் பொழுது கண்டறியப்பட்ட ஜைன மதச் சிற்பங்கள்.

இன்றைய முசுலீம்களைப் பழிவாங்கவேண்டும் என்று இந்து வெறியூட்டும் நோக்கத்திலேயே இந்த கீழ்த்தரமான பிரச்சாரத்தை அவர்கள் கட்டவிழ்த்து விட்டுள்ளனர். மொகலாய பேரரசர்களிலேயே மத நல்லிணக்கத்துடன் ஆட்சி செய்த அக்பரின் புகழுக்குக் களங்கம் கற்பிக்கும் வகையிலேயே இந்து வெறியர்கள் வரலாற்றைத் திரித்து அவதூறு பிரச்சாரத்தில் இறங்கியுள்ளனர். புகழ் பெற்ற மொகலாயப் பேரரசரான அக்பரையும் இழிவுபடுத்தி இருட்டடிப்பு செய்து விடத் துடிக்கின்றனர்.

"11-ஆம் நூற்றாண்டில் கஜினி முகம்மது, கோரி முகம்மது ஆகியோரின் படையெடுப்புகளின் போது, பதேபூர் சிக்ரியில் இருந்த ஜைனக் கோயில்கள் தாக்கப்பட்டு சிதிலமடைந்து புதையுண்டு போயிருக்கலாம். அக்காலத்தில் கோயில்களில் தங்க நகைகளும் விலையுயர்ந்த ஆபரணங்களும் நிலவறையில் வைத்து பாதுகாக்கப்பட்ட நிலையில், அவற்றைக் கொள்ளையிடும் நோக்கத்தில் படையெடுப்பாளர்கள் கோயில்களைத் தாக்கிச் சூறையாடினார்களே தவிர, அங்கே மதவெறிக்கு அடிப்படையே இல்லை. அக்பர் பதேபூர் சிக்ரியில் ஜைனகோயில்களை இடித்து அரண்மனைகட்டினார் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை" என்று புகழ் பெற்ற பல வரலாற்று ஆசிரியர்களும் தொல்பொருள் ஆராய்ச்சி அறிஞர்களும் அறுதியிட்டுள்ளனர்.

இருப்பினும் இளம் தலைமுறையினரின் சிந்தனையை நஞ்சாக்கும் கீழ்த்தரமான முயற்சியில் இந்து ராச்சிய நோக்கத்திற்கேற்ப இந்துமதவெறிக் கும்பல் வரலாற்றைத் திரித்துப் புரட்டி வருகிறது. இதை அம்பலப்படுத்தி முறியடிப்பதோடு, அகழ்வாராய்ச்சி குழியில் தள்ளி இம்மதவெறிக் கும்பலைப் புதைப்பதுதான் இதற்குத் தீர்வாக அமையும்.

## புதிய நட்சத்திரப் போர் திட்டம்: அமெரிக்காவின் மேலாதிக்க அச்சுறுத்தல்

பிற நாடுகளின் தாக்குதலிலிருந்து அமெரிக்காவைப் பாதுகாப்பது என்ற பெயரில் தேசிய ஏவுகணைப் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் புதிய நட்சத்திரப் போருக்கான முயற்சியில் அமெரிக்க மேல்நிலை வல்லரசு இறங்கியுள்ளது. இதன் விளைவாக உலகில் முன்னிலும் தீவிரமாக ஆயுதப் போட்டிக்கும் குவிப்புக்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஜூலை 7-ஆம் நாளன்று அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தின் வான்டென்பர்க் தளத்திலிருந்து கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை செலுத்தப்பட்டது. இந்த ஏவுகணையை நடுவானில் தாக்கி அழிக்கும் எதிர் ஏவுகணை மார்ஷல் தீவிலுள்ள க்வாஜலென் தளத்திலிருந்து ஏவப்பட்டது. பூமியிலிருந்து ஏறத்தாழ 225 கி.மீ. உயரத்தில் இத்தாக்குதல் நடக்கும் என ஏற்பாடாகி, கணினி கோளாறினால் அது வெற்றிகரமாக நடந்தேறவில்லை. இது அமெரிக்கா நடத்திய மூன்றாவது சோதனையாகும். ஏற்கனவே நடந்த இரு சோதனைகளில் ஒன்று வெற்றிகரமாகவும் மற்றொன்று தோல்வியிலும் முடிந்துள்ளன. 2005-ஆம் ஆண்டுக்குள் இத்திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வரத் திட்டமிட்டுள்ள அமெரிக்கா, இன்னும் பல சோதனைகளை நடத்த முடிவு செய்துள்ளது.

கடந்த 15 ஆண்டுகளாக இத்திட்டம் சோதனை முயற்சியில் இருந்து, கடந்த மூன்று ஆண்டுகளில் 6000 கோடி டாலருக்கு மேல் செலவிடப்பட்டு, இப்போது சோதனைகள் நடத்தப்படுகின்றன. அடுத்த ஈராண்டுகளில் இத்திட்டம் வெற்றிகரமாக நிறைவேறி, அமெரிக்காவில் 100-க்கும் மேலான இடங்களில் இந்த எதிர்த்தாக்குதல் ஏவுகணைகள் நிறுவப்படும் என்று உயர்மட்ட இராணுவ அதிகாரிகள் கூறுகின்றனர். "கண்டம் விட்டு கண்டம் தாவும் ஏவுகணைத் தாக்குதல் உலகில் பெரும் அச்சுறுத்தலாக வளர்ந்து விட்டது. ஏற்கனவே ரசியா, சீனாவிடம் இத்தகைய ஏவுகணைகள் உள்ளன. குறுந்தொலைவு ஏவுகணைகளைப் பெற்றுள்ள ஈரான், ஈராக், வடகொரியா ஆகிய நாடுகள் ஏவுகணை ஆற்றலில் வளர்ச்சியடைந்து வருகின்றன. இவை சில 'பொறுக்கி' நாடுகளுக்கும், ஏவுகணைத் தொழில்நுட்பத்தை ஏற்றுமதி செய்கின்றன. இவற்றால் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள நிலையில் அமெரிக்காவைப் பாதுகாக்கவே இத்திட்டம்" என்று நியாய வாதங்களை அடுக்குகிறது அமெரிக்க வல்லரசு.

ஆனால், உலக நாடுகளை அச்சுறுத்தி, தனது மேலாதிக்கத்தை நிலைநாட்டும் நோக்கத்தோடுதான் அமெரிக்கா இத்திட்டத்தைச்

அமெரிக்க அதிபர் வெள்ளை மாளிகை அருகே, அமெரிக்காவின் புதிய நட்சத்திரப் போர்த் திட்டத்தை எதிர்த்து நடந்த ஆர்ப்பாட்டம்.





படிப்பகம்

www.padippakam.com



செயல்படுத்துகிறது. ஏகாதிபத்திய உலகின் பொருளாதார நெருக்கடிகள் முற்றியுள்ள நிலையில், உலகை மறுபங்கீடு செய்து ஆதிக்கம் செலுத்துவதில் ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கிடையே போட்டியும் முரண்பாடுகளும் மேலும் கூர்மையடைந்து வருகின்றன. குறிப்பாக, அமெரிக்க வல்லரசுக்கும் ஜெர்மானிய வல்லரசின் தலைமையிலுள்ள ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்குமிடையே பாதுகாப்பு மற்றும் வர்த்தக விவகாரங்களில் முரண்பாடுகள் கடுமையாக நிலவுகின்றன. எனவேதான் ஏவுகணைத் தாக்குதல் திட்டத்தின் மூலம் மீண்டும் நட்சத்திரப் போருக்கான ஏற்பாடுகளில் இறங்கி உலகை அச்சுறுத்தக் கிளம்பியுள்ளது, அமெரிக்க வல்லரசு.

சோவியத் ஒன்றிய வீழ்ச்சிக்குப் பிறகு, "பனிப்போர் முடிவுக்கு வந்துவிட்டது; உலகில் அமைதிக்கும் சமாதானத்துக்குமான சகாப்தம் தொடங்கிவிட்டது" என்று முதலாளித்துவ மூதறிஞர்கள் கதைத்தார்கள். ஆனால், உலகில் ஏகாதிபத்தியங்கள் உள்ளவரை அவற்றுக்கிடையே முரண்பாடும் மோதலும் ஆயுதக் குவிப்பும் மேலாதிக்கப் போரும் ஓய்ந்து விடாது என்பதையே அமெரிக்காவின் இப்புதிய நட்சத்திரப் போர் திட்டம் நிரூபித்துக் காட்டுகிறது. ஏவுகணைத் தடுப்பு ஒப்பந்தம், ஆயுதக் கட்டுப்பாடு, அணு ஆயுதப் பரவல் தடுப்பு என அடுத்தடுத்து ஒப்பந்தங்களை உருவாக்கி சைவப்புலியாக மாறிவிட்டதாக நாடகமாடிய அமெரிக்கா, தானே உருவாக்கிய ஒப்பந்தங்களை மீறி வெளிப்படையாகவே நட்சத்திரப் போருக்கான தயாரிப்புகளில் இறங்கிவிட்டது. அமெரிக்க வல்லரசின் மேலாதிக்க வெறிக்கும் அச்சுறுத்தலுக்கும் எதிராக உலகெங்குமுள்ள ஒடுக்கப்பட்ட நாடுகளின் மக்கள் ஒன்றிணைந்து போராடுவதே இன்றைய தேவையாக உள்ளது.



## அந்நிய நிதி நிறுவனங்களின் பகற்கொள்ளைக்கு பாதச்சேவை

மொரீசியஸ் - இந்தியப் பரப்பளவில் நூறில் ஒரு பங்குகூட இல்லாத சிறிய தீவு; பெருமளவில் இந்திய வம்சாவளியினர் வாழும் ஏழை நாடு. ஆனால் அச்சிறிய நாடுதான் இந்தியாவில் முதலீடு செய்துள்ள அந்நிய நிதி நிறுவனங்களின் (FII) முதலீட்டில் முதலிடம் வகிக்கிறது என்றால் அதை நம்ப முடியுமா? இருப்பினும் அதுதான் உண்மை! 1992-இல் புதிய பொருளாதாரக் கொள்கை நடைமுறைக்கு வந்ததிலிருந்து இன்றுவரை ரூ. 53,000 கோடிக்கு மேல் மொரீசியஸ் நாட்டு நிதி நிறுவனங்கள்தான் இந்தியப் பங்குச் சந்தையில் முதலீடு செய்துள்ளன.

மொரீசியசில் இந்திய வம்சா வளியினர் வாழும் காரணத்தால், இந்தியா - மொரீசியஸ் நாடுகளிடையே இரட்டிப்பு வரிமுறை தடுப்பு ஒப்பந்தம் உள்ளது. அதாவது ஏற்றுமதி - இறக்குமதி, வணிக - வர்த்தகங்களில் ஒரு நாட்டில் வரி செலுத்தினால் போதுமானது; மற்ற நாட்டில் வரி செலுத்தத் தேவையில்லை. இது ஒருபுறமிருக்க, மொரீசியஸ் நாட்டில் அந்நிய நிதி மூலதன முதலீட்டிற்கு எந்த வரியும் கிடையாது; எவ்வித கட்டுப்பாடும் கிடையாது.

இவற்றைச் சாதகமாக்கிக் கொண்டு ஏகாதிபத்திய நிதி நிறுவனங்கள், மொரீசியஸ் தீவில் தமக்கு கிளை நிறுவனம் உள்ளதாக பெயரளவில் ஒரு முகவரியைக் காட்டி இந்தியாவில் கோடி கோடியாய் முதலீடு செய்வதும், இரு நாடுகளுக்குமிடையிலான ஒப்பந்தத்தைக் காட்டி தமது மூலதன வருவாய்க்கு இந்தியாவில் எந்த வரியும் செலுத்தாமல் ஏய்ப்பதும் கடந்த எட்டாண்டுகளாகக் கேள்வி முறையின்றித் தொடர்கிறது. ஒரு கோடி, இரண்டு கோடி அல்ல; இத்தகைய வரி ஏய்ப்பு மோசடி மூலம் ஆண்டுக்கு ரூ. 8000 கோடிக்கு மேல் ஏகாதிபத்திய நிதி நிறுவனங்கள் கொள்ளையடித்துச் சென்றுள்ளன.

கடந்த மார்ச் மாத இறுதியில் வருமான வரித் துறையினர், வேறொரு வரி ஏய்ப்பு விசாரணையின் போது இந்த மோசடியைக் கண்டறிந்தனர். அதைத் தொடர்ந்து 136 மொரீசியஸ் நிதி நிறுவனங்களில் 24-ன் மீது எச்சரிக்கை நோட்டீசு விடுத்து, தமது நிறுவனத்தின் உரிமையாளர் மொரீசியஸ் நாட்டுக் குடிமகன்தான் என்று நிரூபிக்குமாறு ஆதாரத்தைக் கோரினர். இதைக் கண்டு எரிச்சலடைந்த ஏகாதிபத்திய நிதி நிறுவனங்கள் அடுத்த சில நாட்களிலேயே தமது முதலீட்டை குறைத்தும் முடக்கியும் நெருக்கடி கொடுத்தன. இதனால் கடந்த ஏப்ரல் மாதத்தில் மும்பை பங்குச் சந்தையில் விலைக் குறியீட்டு புள்ளிகள் திடீரென சரிந்து விழுந்தன.

இதைக் கண்டு, நிதியமைச்சர் யஷ்வந்த் சின்ஹா பீதியடைந்து பதறிப் போனார். தமது ஏகாதிபத்திய எஜமானர்களை இந்த நெருக்கடியிலிருந்து காப்பாற்ற, கடந்த ஏப்ரல் மாதத்தில் மைய அரசின் நேர்முக வரி வாரியத்தின் மூலம் ஒரு அவசர உத்தரவு பிறப்பித்தார். இந்தியாவில் முதலீடு செய்யும் அந்நிய நிதி நிறுவனம், மொரீசியஸ் நாட்டிலும் செயல்படுகிறது என்பதற்கான சான்றிதழை மொரீசியஸ் நாட்டில் பெற்றிருந்தால் போதும்; வேறெந்த ஆதாரமும் தேவையில்லை என்று அறிவித்தார். இதன்மூலம் ஏகாதிபத்திய நிதி நிறுவனங்கள் மொரீசியஸ் நாட்டில் தமது கிளை செயல்படுவதாக ஒரு பெயர்ப் பலகையை வைத்துக் கொண்டு, அந்நாட்டு அரசிடம் சான்றிதழ் பெற்று, இந்தியப் பங்குச் சந்தைகளில் முதலீடு செய்து, கோடி கோடியாய் வரி ஏய்ப்பு செய்து கொள்ளையடித்து செல்ல சட்டபூர்வ அனுமதியை அளித்துள்ளார். சுருக்கமாக சொன்னால், வரி வருவாய் மூலம் கிடைக்கும் கோடிக் கணக்கா[ன] பொதுச் சொத்து எவ்வித ஒளிவு மறைவுமின்றி சூறையாடப்ப[டு]கின்றது. ஏகாதிபத்திய நிதி நிறுவனங்கள் இந்தியப் பங்குச் சந்[தை]களில் அடிக்கும் கொள்ளை போதாதென்று, வரி வருவாயு[ம்] அவற்றுக்கு வாரியிறைக்கப்படுகிறது.

இதே நேரத்தில், மத்திய தொலைத் தொடர்புத் துறை அமை[ச்ச]ரான ராம்விலாஸ் பஸ்வான், தனது துறை ஊழியர்களுக்கு தொல[ை]பேசியை இலவசமாக நிறுவிக் கொள்ளும் கவர்ச்சித் திட்டத்[தை] அறிவித்தார். உடனே 'தேசிய' பத்திரிகைகள், "ஏற்கனவே நாட்டி[ன்] நிதிநிலை பலவீனமாக உள்ள சூழலில், மானியங்கள் - சலு[கை]களைக் குறைக்க வேண்டிய தருணத்தில் இத்திட்டத்தைச் செய

படிப்பகம்

www.padippakam.com

படுத்துவது வீண் விரயம்; நாட்டின் பொருளாதாரத்துக்கு பேரிழப்பு. இத்திட்டத்தைப் பார்த்து பிற அரசுத் துறையினரும் சலுகை கேட்க ஆரம்பித்து விடுவார்கள்'' என்று பெருங்கூச்சல் போட்டு ஆர்ப்பரித்தன. பஸ்வான், தொலைத் தொடர்புத் துறையை தனியார்மயமாக்கும் நடவடிக்கைக்கு எதிர்ப்பு வராதிருக்க, இத்தகைய கவர்ச்சித் திட்டத்தின் மூலம் ஊழியர்களுக்கு இலஞ்சம் கொடுத்திருக்கிறார். இதனால் ஏற்படும் மொத்த வருவாய் இழப்பு ரூ. 68 கோடிதான். ஆனால் ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களுக்கு நிதியமைச்சர் அளித்துள்ள சலுகை மூலம் ஏற்படும் இழப்பு ஆண்டுக்கு ரூ. 8000 கோடி. இதை ஒப்பிடும்போது பஸ்வானின் கவர்ச்சித் திட்டத்தால் ஏற்படும் இழப்பு அற்பமானது. ஆனால் தேசிய' பத்திரிகைகளும் முதலாளித்துவ அறிஞர்களும் நிதியமைச்சரின் தாராள சலுகையால் ஏற்படும் பேரிழப்பைப் பற்றி வாயே திறக்கவில்லை.

நுங்கைத் தின்றவனை ஓடவிட்டு, அதை நோண்டித் தின்றவனைப் பிடித்த கதையாக, அந்நிய நிதி நிறுவனங்களின் பகற்கொள்ளை விவகாரத்தை விட்டுவிட்டு, அமெரிக்காவின் ஓபன் கெய்மர் எனும் நிதி நிறுவனத்தின் முதலீட்டு மேலாளராக உள்ள - நிதியமைச்சரின் மருமகளான புனிதாகுமார் சின்ஹா இம்மோசடியில் ஆதாயமடைந்ததை மையப்படுத்தி போலி கம்யூனிஸ்டுகள் கூப்பாடு போட்டுக் கொண்டிருக்கின்றனர். ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களை எதிர்க்கவும் கூடாது; பா.ஜ.க. அரசை ஆதரிக்கவும் கூடாது என்று பாம்பும் சாகாமல் தடியும் நோகாமல் 'புரட்சி' செய்து கொண்டிருக்கின்றனர்.

# போலீசு நிலையம் முற்றுகை: அரசு ஊழியர்கள் போராட்டம்

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே மருது பாண்டியர் நகரில் அரசு ஊழியர் குடியிருப்புகள் அதிகார வர்க்க வரிசைக் கிரமத்தில் பங்களாக்கள் தனியாகவும், அடுக்குமாடிக் குடியிருப்புகள் ஏ, பி, சி, டி, இ - என வகைப்படுத்தப்பட்டும் அமைந்துள்ளன. உயர் அதிகாரிகளின் குடியிருப்புகள் நல்ல முறையில் பராமரிக்கப்படும் அதேவேளையில், ஊழியர் குடியிருப்புகளோ எவ்விதப் பராமரிப்புமின்றி இற்றுவிழும் அபாய நிலையில் உள்ளன. இந்நிலையில் கீழ்நிலை அரசு ஊழியர் குடியிருப்புகளில் கடந்த ஜூன் மாத மத்தியிலிருந்து தொடர்ந்து 15 நாட்களுக்கும் மேலாக தண்ணீர் வழங்கப்படவில்லை. இதனால் இயற்கைக் கடன்களைக் கழிக்கக்கூட பெண்கள் - குழந்தைகள் உட்பட அவர்கள் கருவேலக் காட்டுப் பகுதிகளுக்கு ஓட வேண்டியதாயிற்று.

இந்த அவலத்தைத் தொடர்ந்து சகித்துக் கொள்ள முடியாமல், இக்குடியிருப்புகளில் வசிப்போர் குடும்பத்துடன் திரண்டு கடந்த ஜூன் மாத இறுதியில் மாவட்ட ஆட்சியர் தியாகராஜனைச் சந்தித்து முறையிட்டு உடனடியாகத் தீர்வு காணக் கோரினர். அதற்கு மாவட்ட ஆட்சியரோ, ''வசதி இல்லையென்றால் வீட்டைக் காலி செய்யுங்கள்; சென்னைக்குச் சென்று வீட்டு வசதி வாரியத் தலைமை அதிகாரியிடம் முறையிடுங்கள்'' என்று எரிச்சலாக 'பொறுப்பான' பதிலளித்தார்.

இதனால் ஆத்திரமடைந்த அரசு ஊழியர் குடும்பத்தினர், குடியிருப்போர் நலச் சங்கத்தின் சார்பில் மாவட்ட ஆட்சியரையும், வீட்டு வசதி வாரிய அதிகாரிகளையும் கண்டித்து சிவகங்கை நகர் முழுவதும் அச்சிடப்பட்ட சுவரொட்டிகளை ஜூலை முதல் நாளன்று ஒட்டினர்.

இதையறிந்த மாவட்ட ஆட்சியர், தனது நெருங்கிய நண்பரும் மாவட்ட போலீசு கண்காணிப்பாளருமான முருகேசனிடம் புலம்பியதும், போலீசுத் துறை மின்னல் வேகத்தில் செயல்பட்டது. நகரக் காவல் ஆய்வாளரான இரத்தினவேலு, இக்கண்டன சுவரொட்டியை அச்சிட்ட சூர்யா அச்சக உரிமையாளர் கணேஷ் குமாரை ஜூலை 2-ஆம் நாளன்று கைது செய்து கொட்டடியில் அடைத்து, மேலதிகாரிகளிடம் தனது எஜமான விசுவாசத்தைக் காட்டிக் கொண்டார்.

இக்கொடுஞ் செயலைக் கண்டு ஆவேசமடைந்த அரசு ஊழியர்கள் ஜூலை 2-ஆம் நாளன்று மாலை 3 மணியளவில் தமது குடும்பத்துடன் - ஏறத்தாழ 200 பேருக்கும் மேலாக அணிதிரண்டு, நகர போலீசு நிலையம் நோக்கி ஊர்வலமாகச் சென்றனர். போகும் வழியிலேயே சிவகங்கை வட்டக் காவல் நிலையத்தில் உயர் போலீசு அதிகாரிகள் முன்னிலையில் மாதாந்திர ஆய்வுக் கூட்டம் நடப்பதை அறிந்து, அப்போலீசு நிலையத்தை ஊர்வலத்தினர் முற்றுகையிட்டனர். பீதியடைந்து வெளியே வந்த ஆய்வாளர் இரத்தினவேலு, ''உங்களுக்கு என்ன வேண்டும்? போலீசு ஸ்டேஷனுக்கு எப்படி கூட்டமாக வரலாம்? இதை அனுமதிக்க முடியாது'' என்று படபடத்தார். அரசு ஊழியர்கள், ''தண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வுகாண வக்கற்ற மாவட்ட ஆட்சியரைக் கண்டித்து நாங்கள்தான் சுவரொட்டிகளை அச்சிடக் கொடுத்தோம். நாங்கள்தான் ஒட்டினோம். வேண்டுமானால் எங்களைக் கைது செய்து கொள்ளுங்கள். அச்சக உரிமையாளரை விடுதலை செய்யுங்கள்'' என்று உறுதியாக நின்று பதிலுரைத்தனர்.

தனது சூரத்தனம் மக்களிடம் அம்பலப்பட்டுப்போன ஆத்திரத்தில், ''நான் எவனையும் பொய்க் கேசு போட்டு உள்ள போடுவேன்; அதைக் கேட்க நீங்க யாரு? யாரைக் கேட்டு போஸ்டர் அச்சடிக்க கொடுத்தீங்க? உங்களுக்கு சட்டம் தெரியுமா? கூட்டத்தைக் காட்டினால் நாங்க பயந்துடுவோம்னு மிரட்டறீங்களா? உங்க அத்தனை பேரையும் புடிச்சி உள்ள தள்ளுவேன்!'' என்று இட்லர் பாணியில் வீரவசனம் பேசி கூச்சலிட்டார். அரசு ஊழியர்களோ இந்த சலசலப்பு - சவடால்களைக் கண்டு அஞ்சாமல், ''நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள்; எங்களது நியாயமான கோரிக்கை நிறைவேறாமல் நாங்கள் திரும்பிச் செல்ல மாட்டோம்'' என்று போலீசு நிலையும் முன்னிலையிலேயே மறியல் செய்து குடும்பத்தோடு அமர்ந்து விட்டனர்.

போர்ராட்ட உறுதியைக் கண்டு செய்வதறியாது திகைத்த மாவட்ட போலீசு கண்காணிப்பாளர் பெருமாள் வெளியே ஓடிவந்து சமாதானப்படுத்தி, முன்னணியாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அதன் முடிவுப்படி, அச்சக உரிமையாளர் அன்றே விடுதலை செய்யப்பட்டு, தண்ணீர் முறையாக வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. அரசு ஊழியர்களின் உறுதியான போராட்டத்தால் திமிர் பிடித்த மாவட்ட ஆட்சியர் மற்றும் வானளாவிய அதிகாரம் கொண்டவர்களாக ஆட்டம் போட்ட போலீசு கும்பலின் முகத்தில் கரிபூசப்பட்டது.

இந்த விவகாரத்தில் அரசு ஊழியர்களின் கோரிக்கைகளும் போராட்ட வடிவங்களும் முற்றிலும் நியாயமானதே, பாராட்டத் தகுந்ததே. எனினும், ''உங்களையும் புடிச்சி உள்ள தள்ளுவேன்'' என்று கொக்கரித்த ஆய்வாளர் இரத்தினவேலுவை குறைந்தபட்சம் மன்னிப்பு கூட கேட்கச் செய்யாமல் முற்றுகை போராட்டத்தை விலக்கிக் கொண்டது நியாயமானதல்ல. போலீசு வெறியர்களின் அதிகாரத் திமிரும் மக்களை மதிக்காத ஆணவமும் கொட்டமும் கேள்விமுறையின்றி தொடரவே இது உதவுவதாக அமையும்.

www.padippakam.com



# இந்தியாவின் நிலையும் விடுதலைப் புலிகள் - ஆதரவாளர்களின் தமிழினத் துரோகமும்

ஈழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் — எதிர்ப்பாளர்கள் ஆகிய இரண்டு தரப்புமே ஈழப் பிரச்சினையில் மைய அரசின் நிலையை ஆதரிக்கும் விநோதத்தை கடந்த இதழில் (16-31 ஜூலை 2000) பார்த்தோம்; ஈழ மக்களுக்கு எதிராகச் சிங்கள இனவெறி பாசிச அரசை, இந்திய அரசு ஆதரித்து வந்தபோதும் புலிகளும் அவர்களுடைய தமிழ்நாட்டுப் பினாமிகளும் அதை மூடி மறைக்கின்றனர்; விடுதலைப் புலிகள் தொடக்க காலந்தொட்டே தங்கள் சுயநலனுக்காக ஈழ மற்றும் இந்தியத் தமிழர்களின் நலன்களுக்குத் துரோகம் செய்து, இந்திய அரசு மற்றும் ஆட்சியாளர்களுக்குத் துதிபாடி வருகின்றனர் என்பதையும் பார்த்தோம். இனி, இங்குள்ள தமிழினவாதக் குழுக்கள் ஈழ விடுதலை ஆதரவு என்ற பெயரில், இந்தியத் தமிழர் நலன்களைக் காவு கொடுத்து, துரோகம் செய்து வருவதைப் பார்ப்போம்.

எந்தவொரு இயக்கமும் எதிரிகளையும் நண்பர்களையும் பற்றிச் சரியான மதிப்பீடு இல்லாமல் வெற்றி பெற்றுவிட முடியாது. அந்த வகையில் இந்திய அரசு ஈழ விடுதலைக்கு நட்பு சக்தியோ, நடுநிலை சக்தியோ கிடையாது. எதிரி சக்திதான். நட்பு சக்தியைத்தான் வென்றெடுக்கவோ, நடுநிலைப்படுத்தவோ முடியும்.

"இதெல்லாம் எங்களுக்குத் தெரியாதா? இருந்தாலும் எல்லாரையும் ஒரே சமயத்தில் எதிர்க்கக் கூடாது என்கிற அரசியல் தந்திரத்துக்காக, இந்தியாவுடன் நட்பு பாராட்டும் உத்தியை இப்போதைக்குக் கடைப்பிடிக்கிறோம்" என்று புலிகளின் ஆதரவாளர்கள் வாதம் புரியலாம்.

அரசியல் எப்போதுமே வெளிப்படையாக இருக்க வேண்டும். அதிலே இரகசிய உத்தி/பேரத்துக்கு இடம் கிடையாது. இலங்கை அரசு மட்டும்தான் ஈழ விடுதலைக்கு எதிரி, இந்தியா நமக்கு நட்பு சக்திதான் என்கிற புலிகளின், அவர்களுடைய ஆதரவாளர்களின் பிரச்சாரம், புலிகள் - இந்தியப் போருக்குப் பிறகு, ராஜீவ் கொலைக்குப் பிறகு தமிழ்நாட்டில் புலிகளுக்கு எதிரான ஒரு அலை வீசுவதற்குத்தான் உதவியிருக்கிறது. "சோ" போன்ற ஈழவிடுதலை எதிர்ப்பாளர்களின் பிரச்சாரம் இன்னொரு காரணம்தான்.

புலிகள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்களின் இந்த அரசியல் தந்திரம், ஈழ, இந்தியத் தமிழினங்களுக்குச் செய்யும் துரோகமாகவும் இருக்கிறது. தனி ஈழம் அமைந்தால் அது இந்திய நலன்களுக்குத் துணையாகத்தான் இருக்கும், எதிராகப் போகாது என்று புலிகளும் அவர்களின் ஆதரவாளர்களும் உறுதியளிக்கின்றனர்.

"தமிழீழம் பிரிந்தால் இந்தியாவின் தெற்குத் தலைவாசலில் ஓயாது முழங்கிக் கொண்டிருக்கும் குண்டுகளின் வேட்டோசை தணியும்."

"இசுரேலின் , விண்ணூர்திகளும், சீனாவின் போர்க் கப்பல்களும், பாகிஸ்தானின் பீரங்கிகளும், அமெரிக்காவின் 'கிரீன் பெரட்' பயிற்சிப் படைகளும் இலங்கையில் குவியும் கொடுமை முடிவுறும்."

"நீ வேறு; நான் வேறு என்று சிங்கள சிரீலங்காவும் தமிழீழமும் தனித்தனி நாடுகளாகப் பிரிந்தால் - இந்தியாவுடன் யார் நெருக்கமாக இருப்பது என்னும் போட்டி இவ்விரு நாடுகளிடையேயும் நிலவும்."

"வங்கக் கடலில் இந்திய மீனவர்களைச் சுட்டுப் பிணங்களை வீசும் சிங்களப் படையின் வெறித்தனத்திற்கு முற்றுப் புள்ளி வைக்கப்படும்."

"கச்சத் தீவை ஒட்டிய கடல்வளம் - மீன்வளம் ஆகிய வளங்கள் இந்திய மீனவர்க்கு வரும்" (நந்தன் வழி 16-20 ஜூன் 2000)

இவைதான் இந்திய அரசின் நலன்களா? அட முட்டாள்களா! அடிமைத்தலாட்டக்காரர்களா! - சிங்களப்படை வெறித்தனமாக சுட்டுப் பிணங்களாக வீசும் மீனவர்கள் தமிழர்கள்தாம். கச்சத் தீவையும் அதை ஒட்டிய கடல்வளம் - மீன் வளம் ஆகியவற்றைத் தாரை வார்த்தது தமிழர் நலன்களில் துளியும் அக்கறையில்லாததால்தான். தமிழர்களும் இந்தியர்கள்தான். இவர்களுடைய நலன்களும் காக்கப்பட வேண்டும் என்று இந்திய அரசு எண்ணுவதில்லை என்பதுதானே தமிழின விடுதலை இயக்கங்களின் நிலைப்பாடாக இருக்க வேண்டும்; புலிகளை இந்திய அரசு ஆதரிக்க வேண்டும் என்று கோருவதற்காக மட்டும் இந்திய மீனவர்கள்; இந்திய மீனவர் கைக்கு கச்சத் தீவை ஒட்டி கடல் வளங்கள் வருவது என்று பேசுவது தமிழினத் துரோகமல்லவா?

தமிழீழம் அமைந்தால் சிங்கள சிரீலங்காவோடு போட்டி போட்டுக் கொண்டு இந்தியா(அரசு)வுடன் நெருக்கமாக இருக்கும் என்கிறீர்களே, இது உண்மையென்றால், தமிழின மக்களும், இந்திய மக்களும் யாரை எதிர்த்துப் போராடுகிறார்களோ அவர்களுடன் தமிழீழம் நெருக்கமாக இருக்குமா? "தமிழின விடுதலையோ, இந்தியப் புரட்சியோ இப்போது நடக்கிறதா, அவை வரும்போது பார்த்துக் கொள்ளலாம்" என்பீர்களானால், அவற்றை இப்போதைக்கு ஒத்திப் போட்டிருக்கிறீர்களா? அதனால்தான் புலிகள் ஆதரவு மட்டுமே உங்களுடைய ஒரே வேலையாக இருக்கிறதா?

"சோசலிச ரசியாவும், சீனாவும் பிற்போக்கு நாடுகளுடன் நட்பு கொள்ளவில்லையா" என்று கேட்கலாம்.

சோவியத் ஒன்றியமோ, சீனாவோ சோசலிச நாடுகளாக இருந்தவரை உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் நலன்கள் என்ற கண்ணோட்டத்திலேயே பிற நாடுகளின் பிற்போக்கு அரசுகளுடன் உறவு வைத்துக் கொண்டிருந்தன. ஏகாதிபத்திய எதிர்ப்பில் இந்நாடுகள் உண்மையான அக்கறை கொண்டுள்ளதைப் பொறுத்தே நட்புறவு கொண்டிருந்தன. சோசலிச நாடுகள் முதலாளித்துவ நாடுகளாகச் சீரழிந்த பின்னரே பிற நாடுகளின் ஜனநாயக, புரட்சிகர விடுதலை இயக்கங்களை ஒடுக்கும் வகையில் உறவு கொள்கின்றன. இதைப் போலி கம்யூனிஸ்டுகள் தாம் நியாயப்படுத்தினர். கம்யூனிசப் புரட்சியாளர்கள் எதிர்த்தே வந்திருக்கின்றனர். சோசலிச நாடுகள் நட்பு பாராட்டிய பிற்போக்கு அரசுகளுடன் சமரசமாக நடந்து கொள்வது துரோகம்தான் என்பதுதானே புரட்சியாளர்களின் நிலைப்பாடு.

"அனைத்திந்தியப் புரட்சி" என்கிற அ சியல் திட்டம் வைத்திருப்பதாலேயே கம்யூ னிசப் புரட்சியாளர்கள், தமிழின விடு லைக்கு எதிரானவர்கள், துரோகிக என்றெல்லாம் பல்வேறு தமிழினக் குழு களும் ஏசுகின்றனர். கம்யூனிசப் புரட்சிய ளர்கள் இந்திய ஆளும் பார்ப்பன - பனிய தரகு அதிகார முதலாளிகள் - நிலப்பிரபு களின் அரசுடன் எவ்விதச் சமரசமும் செய் கொண்டதில்லை. ஆனால், இதோ, இந்தி நலன்களுக்கு எதிராகப் போக மாட்டோ துணை நிற்போம் என்று மீண்டும் மீண்டு



படிப்பகம்

www.padippakam.com

வாக்குறுதியளித்து இந்திய அரசின் தயவை நாடி, கூடிக் குலாவிடத் துடிக்கும் விடுதலைப் புலிகளை, உலகத் தமிழர்களை உய்விக்க வந்த வீராதி வீரர்கள் என்று இவர்கள் ஏற்றிப் போற்றுகின்றனர்.

தமிழீழம் உருவானால், இந்தியாவும் பிளவுபட்டு விடும் என்று ஈழ எதிர்ப்பாளர்கள் பிரிவினை - பீதிப் பிரச்சாரம் செய்கிறார்கள். அதற்கு, இந்தியா பிளவுபடுவது இந்நாட்டின் பல்வேறு இனங்கள் அடக்கி ஒடுக்கப்படுகின்றனவா? சமத்துவ்மாக - ஜனநாயக முறைப்படி நடத்தப்படுகின்றனவா? என்பதைப் பொறுத்திருக்கிறது என்று பதிலடி கொடுத்திட புலி ஆதரவாளர்களுக்குத் துப்பில்லை. இதற்கு மாறாக, இந்தியா பிளவுபட வேண்டிய அவசியம் இல்லை, இந்தியத் தேசிய இனங்கள் ஜனநாயக உரிமை பெற்றிருக்கின்றன; காஷ்மீர் போர்கூட வெளியில் இருந்து தூண்டி விடுவதுதான் என்று துரோகத்தனமாகப் பேசுகிறார்கள்.

விடுதலைப் புலிகளையும், தனி ஈழத்தையும் ஆதரிக்கும் இந்தியத் தமிழினவாதக் குழுக்கள் மட்டும் சுமார் நூறு அளவுக்கு தமிழ்நாட்டில் உள்ளன. இவர்கள் அனைவரும் இந்தியத் தமிழ்நாட்டின் விடுதலையைத் தமது இலட்சியமாக அறிவித்துள்ளனர். பார்ப்பனிய - பனியா ஆதிக்கம் வகிக்கும் தில்லி ஏகாதிபத்திய வல்லரசுதான் தமது எதிரி என்றும் தீர்மானித்திருக்கின்றனர். ஆனால், இவற்றில் அநேகமாக எந்த அமைப்பும் தில்லி ஏகாதிபத்திய வல்லரசை எதிர்த்த போராட்டத்தை முதன்மைப் பணியாகக் கொள்ளவில்லை. ஈழப் போர் துவங்கிய பிறகே உருவாக்கப்பட்ட இந்த அமைப்புகள் புலிகள் ஆதரவையே முதன்மைப் பணியாகக் கொண்டிருக்கின்றன.

தனி ஈழம் அமைந்தால் இந்தியாவிலும் பிரிவினைக் கோரிக்கை வெடிக்கும் என்று எதிரிகள் வாதிடுவதால், அதை மறுக்கும் வகையில் மேற்கண்ட தமிழினவாதிகளும் புலிகளும் என்ன கூறுகிறார்கள்? "இலங்கையில் அரசு ஈழத் தமிழினத்தை ஒடுக்குவதைப் போல, இந்திய அரசு தேசிய இனங்களை ஒடுக்குவதில்லை. இங்கே எல்லா தேசிய இனங்களும் ஜனநாயக, சமத்துவ உரிமை பெற்றிருக்கிறார்கள்" என்று தானே சொல்லுகிறார்கள்!

தமிழீழம் அமைவது தமிழ்நாட்டைப் பாதிக்கும்; அதன் விளைவாகத் தமிழ்நாடு பிரிந்துபோகும் என்று இந்தியா அஞ்சுகிறது, "இந்த அச்சம் அடிப்படையற்றது. ஈழம், தமிழ்நாடு ஆகியவற்றின் புறநிலைக் கூறுகள் மாறுபட்டவை. இலங்கையில் ஒடுக்கு முறையின் காரணமாக பிரிவினைக்குப் போராடும்படி ஈழத்தமிழர்கள் நிர்பந்திக்கப்பட்டார்கள். அவர்கள் மீது அரசாங்கம் குண்டுமாரிப் பொழிந்தது, கொலைகள் செய்தது. தமிழ்நாட்டு விவகாரம் அப்படி இல்லை. அதற்கென்று ஒரு மாநில அரசாங்கம் இருக்கிறது. அரசியல் கட்சிகள் இருக்கின்றன. கலைஞர் இருக்கிறார். மாநிலம் செழித்தோங்குகிறது. இந்தியாவில் இருந்து தமிழ்நாடு ஏன் பிரிய வேண்டும்? அப்படிச் செய்வதற்கு அவசியமேதுமில்லை" என்கிறார் புலிகளின் அதிகாரபூர்வ அறிவுரையாளர் ஆண்டன் பாலசிங்கம்.

இது உண்மையா? இந்திய அரசு இங்குள்ள தேசிய இனங்களை ஒடுக்குவதில்லையா? ஜனநாயக - சமத்துவ அடிப்படையில்தான் தேசிய இனங்களை நடத்துகிறதா? இது உண்மை என்றால், இந்தியாவில் தனக்கு விடுதலை வேண்டும், தன்னுரிமைக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று இதே புலிகளின் ஆதரவு தமிழினவாதக் குழுக்கள் கோருகின்றனரே அது ஏன்? அல்லது தமிழகத்துக்குத் தன்னுரிமை கோருவதற்காக தமிழினக் குழுக்கள் கூறும் காரணங்கள் பொய்யா?

சிங்களப் பேரினவாத பாசிஸ்டுகள் அளவுக்கு இந்திய அரசு இந்திய தேசிய இனங்களை ஒடுக்குவதில்லையா? இங்கே அந்த அளவு - போரிட்டுக் கொள்ளும் அளவு - முரண்பாடு முற்றவில்லை என்று கூறித் தமிழினக் குழுக்கள் சமாளிக்கலாம். போரிட்டுக்

> **"புலிகளைப் பார்த்து இனி மேல் நீங்கள் சைவப் புலிகளாக மாறிவிடுங்கள்; அது தான் உங்கள் நலனுக்கு ஏற்ற செயல் என்று உபதேசிப்பதைப் போல, இந்திய அரசு வட்டார வல்லாதிக்கக் கனவுகளில் மிதக்காமல், தமிழ் ஈழத்தை நட்பு நாடாக ஆக்கிக் கொள் வதே இந்தியாவின் புவிசார் அரசியலுக்கு ஏற்ற செயல்" என்கிறது, மணியரசன் குழு.**

கொள்ளும் அளவு இங்கே முரண்பாடு முற்றவில்லை என்றால் தன்னுரிமைக்கு முன்னுரிமை எதற்கு? காசுமீர், வடகிழக்கிந்தியாவில் இனப் போராட்டம் போராக வெடித்திருக்கிறதே, தமிழ்நாட்டில் அவ்வாறில்லையே, அது ஏன்? தன்னுரிமைக்கு முன்னுரிமை என்று சொல்லிக் கொண்டு புலி ஆதரவுக்கு முன்னுரிமை தருவதாலேயா? இல்லை, புலி ஆதரவு என்ற பெயரால் இந்தியத் தமிழர்களுக்கு இங்குள்ள தமிழினக் குழுக்கள் துரோகம் செய்கின்றனவா?

இந்தச் சிக்கலில் மாட்டிக் காண்ட மணியரசன், சுப. வீரபாண்டியன், தியாகு ஆகியோர் தலைமையிலான குழுக்கள் மொத்தத்தில் உளறிக் கொட்டிக் கிளறி மூடிவிட முயலுகின்றன. பின்வருமாறு மணியரசன் குழு தனது பத்திரிக்கையில் எழுதியுள்ளது. இதுதான் ஏறக்குறைய மற்ற பிற குழுக்களின் நிலையாகும்.

"பொதுவாகவே இந்திய அரசு, அடிப்படையில் தமிழர்களுக்கு எதிரான அரசு என்பதை வரலாற்று நிகழ்ச்சிப் போக்குகளை பார்த்தாலே தெரியும். தில்லி அரசு தமிழர்களுக்கு எதிராகவே திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிறது. இதில் எந்தக் கட்சி என்று வேறுபாடெல்லாம் இல்லை."

"எந்தக் கட்சி, எந்தக் கூட்டணி தில்லி ஆட்சியில் இருந்தாலும் இந்திய வல்லாதிக்க அரசிற்கு சில புவிசார் அரசியல் தேவைகள் உண்டு. இன்றைய நிலையில் அதில் அடிப்படை மாறுதல் ஏதும் வருவதற்கில்லை."

"சிங்கள அரசு எவ்வளவுதான் இந்திய அரசோடு உலக அரங்கில் ஒத்துப் போகாமல் இருந்தாலும், தமது தமிழர் விரோத - புவிசார் அரசியல் நலன் கருதி, இந்திய அரசு சிங்கள அரசுக்கு ஆதரவாகவே நடந்து வந்திருக்கிறது."

"தமது ஆதிக்க நோக்கத்தை மறைத்துக் கொள்வதற்காக தமிழீழம் பிறந்தால் தமிழ்நாடும் பிரிந்துவிடும் என்று பூச்சாண்டி காட்டுகிறது, தில்லி அரசு."

"இந்த நிலையில், தில்லி அரசும், தமிழக அரசும் தமிழீழ விடுதலைக்கு எதிரானவையே என்பது தெளிவு. "விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தை மீட்டு விட்டாலும் தமிழீழத்தை அங்கீகரிக்க மாட்டேன் என்று பிரதமர் வாஜ்பாய் சீறுவது சிங்களர்களுக்கு ஆதரவான - ஒட்டுமொத்த தமிழ் இனத்திற்கு எதிரான குரல்" என்றெல்லாம் இந்திய அரசின் நிலைகுறித்து மணியரச்ன் குழு எழுதுகிறது.

மணியரசன் குழு கூறும் இந்திய அரசின் புவிசார் நலன்கள், ஆதிக்க நோக்கம், ஒட்டுமொத்தத் தமிழின எதிர்ப்பு ஆகிய குணாம்சங்களுக்கு அடிப்படை என்ன? அதன் பார்ப்பன - பனியா ஆளும் வர்க்க/சாதி/இன அடிப்படைதான் காரணம் என்றால், இந்தக் குணங்களை இந்திய அரசு மாற்றிக் கொள்ளுமா? மாற்றிக் கொள்ளாது என்றால் ஈழ விடுதலையை இந்திய அரசையும் எதிர்த்துத் தானே சாதிக்க முடியும்?

ஆனால், இந்திய அரசு பற்றி இப்படி ஒருகணிப்பைத் தரும் அதே மணியரசன் குழுதான், "வட்டார வல்லாதிக்கக் கனவுகளில் மிதக்காமல் புதிதாக உருவாகும் சூழ்நிலையைப் புரிந்து கொண்டு, அதைத் தனக்குச் சாதகமாக மாற்றிக் கொள்வது எப்படி என்று சிந்திப்பதே புதிய உலக தந்திர உத்தி. தமிழ் ஈழத்தைத் தனக்கு நட்பு நாடாக ஆக்கிக் கொள்வதே இந்தியாவின் புவிசார் அரசியலுக்கு ஏற்ற செயல்" என்று இந்திய அரசுக்குப் போதிக்கிறது.

தில்லி அரசு பற்றி மணியரசன் குழுவின் முதல் மதிப்பீட்டிற்கும் இந்தக் கோரிக்கைக்கும் சம்பந்தமிருக்கிறதா, சொல்லுங்கள். புலிகளைப் பார்த்து இனிமேல் நீங்கள் சைவப் புலிகள் ஆகிவிடுங்கள், மான்களை வேட்டையாடாதீர்கள், அதுதான் உங்கள் நலனுக்கு ஏற்ற செயல் என்று உபதேசிப்பதற்கும் இதற்கும் என்ன வேறுபாடு? வட்டார வல்

www.padippakam.com

லாதிக்கக் கனவுகளில் மிதக்காத, ஆதிக்க நோக்கமற்றதாக தில்லி அரசை மாற்ற முடியுமா? இதுவே ஒரு வெறும் கனவில்லையா? இது நனவாகும் என்றால், தமிழினவாதிகளே, உங்கள் தன்னுரிமை கோரிக்கையைக் கூட இதே வழியில் ஈட்டி விடலாமே!

வட்டாரவல்லாதிக்கக் கனவுகளில் மிதக்காத, ஆதிக்க நோக்கமற்ற இந்தியாவின் புவிசார் அரசியல் இன்றைய நிலையில் இருக்க முடியுமா? அப்படி என்றால், இந்தியாவின் புவிசார் அரசியல் என்று எதைக் குறிப்பிடுகிறார்கள்?

"ஈழம் அமைவது எந்த வகையில் இந்தியாவின் புவிசார் அரசியலுக்கு எதிராகப் போகும்? இதை யாரும் விளக்குவதில்லை" என்று மணியரசன் குழு குறைபட்டுக் கொள்கிறது. வட்டாரவல்லாதிக்கக் கனவும், ஆதிக்க நோக்கமும் இல்லாமல் ஈழத்தை நட்பு நாடாக்கிக் கொள்ள வேண்டும் என்று நிபந்தனை போடுகிறார்களே, அதிலேயே விளக்கமில்லையா? வட்டாரவல்லாதிக்கக் கனவுக்கும், ஆதிக்க நோக்கத்துக்கும் ஈழம் அமைவது எதிராகப் போகும் என்று இந்திய அரசு நம்புகிறது. அப்படிப் போகாது என்று விளக்குவதன் மூலம் மணியரசன் குழு உட்பட புலி ஆதரவாளர்களும், புலிகளுமே இந்தியாவின் புவிசார் அரசியலுக்குத் துணை நிற்பதாக வாக்களிக்கின்றனர். ஆனால், இந்திய அரசுதான் இதையெல்லாம் நம்பி ஏற்கும் நிலையில் இல்லை.

இலங்கை சிங்களப் பேரின வெறியர்களின் பாசிசத்திற்கு, இந்து மதவெறி பாசிசம் எந்த வகையிலும் குறைந்ததில்லை என்பதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன. போராடும் புரட்சிகர இயக்கத்தையும், தேசிய இனத்தையும் அரசு பயங்கரவாதத்தை ஏவி "போலீசு - இராணுவத்துடன் மோதலில் சாவு" என்கிற பெயரில் படுகொலை செய்வதில்லையா? சிறுபான்மையினரை நரவேட்டையாடுவதில்லையா? இந்தியாவின் பல மாநிலங்களிலும் இராணுவ, துணை இராணுவ ஆட்சி நடக்கவில்லையா? இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். இப்படிப்பட்ட அரசு பயங்கரவாத நாடு இன்னொரு நாட்டின் இன ஒடுக்குமுறைக்கெதிராக விடுதலையையும், பாசிசத்திற்கு எதிராக ஜனநாயகத்துக்கான போராட்டத்தையும் ஆதரிக்குமா? அந்த அளவுக்கு இந்தியா - இலங்கை அரசுகள் முரண்பட்டு நிற்கின்றனவா?

விடுதலைப் புலிகளின் இந்தியப் பிரதிநிதி பழ.நெடுமாறன், அடிமுட்டாள்தனமாகவோ, அப்பட்டமான புளுகாகவோ பின்வருமாறு பிதற்றுகிறார்:

இந்தியாவும் நார்வேயும் மேற்கொள்ளும் சமரச முயற்சிக்கு துணை நிற்பதாக அமெரிக்காவும் அறிவித்துவிட்டது. அமெரிக்க வெளியுறவுத்துறைச் செயலாளர் தாமஸ் பிக்கரிங் கொழும்பு சென்று சந்திரிகாவை நேரடியாக சந்தித்து கருத்தைத் தெரிவித்துவிட்டுப் போய் விட்டார். இதன் விளைவாக முதல் தடவையாக இலங்கை அரசு தனிமைப்படுத்தப்பட்டு இருக்கிறது. எந்த நாடும் இலங்கைக்கு வெளிப்படையாக உதவி புரிய தயாராயில்லை.

பாகிஸ்தான், இசுரேல் போன்றவைகூட ஆயுத விற்பனை என்கிற முறையில்தான் ஆயுதங்கள் கொடுக்கின்றனவே தவிர, உதவி என்கிற முறையில் கொடுக்கவிலலை. அவர்களும் ஒருநிலைக்கு மேல் ஆயுதங்கள் கொடுக்க முடியாது.

"இலங்கைக்கு இந்தியா இராணுவ ரீதியான உதவி அளிக்காவிட்டால் சீனா, பாகிஸ்தான், அமெரிக்கா போன்ற நாடுகளின் இராணுவம் இலங்கையில் வந்து இறங்கிவிடும். அது இந்தியாவுக்கு ஆபத்தானது' என இங்குள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைவர்களும், ஒருசில பத்திரிகைகளும் தொடர்ந்து பேசியும் எழுதியும் வருகிறார்கள். இவர்களின் இந்த பேச்சுக்கள் வெறும் அர்த்தமற்றவை என்பது இப்போது நிரூபணமாகி விட்டது. உலகின் எந்த நாட்டு இராணுவமும் இலங்கை அரசாங்கத்துக்கு உதவி செய்யத் தயராக இல்லை. அதே நேரத்தில் போர்க்களத்தில் மட்டுமல்ல ராஜதந்திர களத்திலும் புலிகள் வெற்றிகளை ஈட்டி வருகிறார்கள்." (வின் நாயகன், 16-30 ஜூன் 2000)

> "உலகின் எந்த நாட்டு இராணுவமும் இலங்கை அரசாங்கத்துக்கு உதவி செய்யத் தயாராக இல்லை. அதே நேரத்தில் போர்க்களத்தில் மட்டுமல்ல, அரசு தந்திரக் களத்திலும் புலிகள் வெற்றிகளை ஈட்டி வருகிறார்கள்" என்று புலிகளின் இந்தியப் பிரதிநிதியான நெடுமாறன் அடிமுட்டாள் தனமாகவும் அப்பட்டமாகவும் புளுகுகிறார்.

பழ. நெடுமாறனின் இந்த பிதற்றலுக்கு நேர்மாறாக வேறு சில புலி ஆதரவாளர்களே "இசுரேல், பாகிஸ்தான், சீனா, அமெரிக்கத் தலையீடு வரும், இந்த நாடுகள் இலங்கை அரசை ஆதரிப்பதால், அதற்கு எதிராக விடுதலைப் புலிகளை இந்தியா ஆதரிக்க வேண்டும்" என்று கோருகிறார்கள். எதற்கெடுத்தாலும் அமெரிக்க - சி.ஐ.ஏ. பூச்சாண்டி காட்டி அரசியல் நடத்துவது இந்திராவின் இறுதிக்கால ஆட்சியிலேயே மாறிவிட்டது. குறிப்பாக சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு இசுரேல், சீனாவுடன் இந்திய அரசின் உறவு மாறிவிட்டது.

அரபு, இஸ்லாமிய நாடுகளுக்கு எதிரானது என்ற காரணத்துக்காக, உள்நாட்டில் இசுலாமிய ஓட்டுவங்கியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக 1992 வரை இசுரேலை அங்கீகரிக்க மறுத்து, தூதரக உறவு கூட வைத்துக் கொள்ளாதிருந்தது காங்கிரசு அரசு. ஆனால், அதன்பின் உலகமயமாக்கல் கொள்கைக்கு ஏற்ப இசுரேலுடன் நெருங்கிய உறவை காங்கிரசு ஏற்படுத்திக் கொண்டு விட்டது. தற்போதைய ஆளுங்கட்சியான பாரதீய ஜனதா - ஆர்.எஸ்.எஸ். கும்பலோ எப்போதுமே அமெரிக்க ஏகாதிபத்திய அடிவருடி. இசுலாமிய அரபுகளின் எதிரி என்பதாலேயே இசுரேல் ஆதரவுக் கொள்கையை நீண்டகாலமாகக் கடைப்பிடித்து வருகிறது. இப்போது இசுரேலுடன் இராணுவக் கூட்டு உட்பட பல ஒப்பந்தங்கள் போட்டுள்ளது. இதையெல்லாம் மறந்துவிட்டு ஏதோ இசுரேல் இந்தியாவின் பகைநாடு, அது இலங்கை - ஈழப் பிரச்சினையில் தலையிடுவதை இந்தியா விரும்பாது என்பதைப் போல முட்டாள்தனமாக புலிகளும் அவர்களின் ஆதரவாளர்களும் பிதற்றுகின்றனர்.

சோசலிச சீனத்துக்குத்தான் இந்தியா எதிரானதாக இருந்ததே தவிர, அங்கே முதலாளித்துவம் நிலைநாட்டப்பட்ட பிறகு, பாகிஸ்தானுடனான சீன உறவு விடயத்தில் மட்டுமே முரண்படுகிறது.

சர்வதேச நிதி நிறுவனம், உலக வங்கி, உலக வர்த்தக நிறுவனம் மூலமாகவும் நேரடியாகவும் அமெரிக்க ஆணையை, அதன் மேலாதிக்கத்தை ஏற்று அடிமைத்தனமாக இந்திய அரசு நடக்கிறது என்பதை முட்டாள்களும், பித்தலாட்டக்காரர்களும் மட்டுமே மறுக்க முடியும்.

மேலும் குறிப்பாகச் சொல்வதானால், இந்திய அரசு மற்றும் அமெரிக்க நலன்கள் அணுகுண்டு சோதனை தவிர எந்த வகையில் முரணபட்டதாக இருக்கின்றன? இவ்விரு நாடுகளும் இலங்கை - ஈழப் பிரச்சினையில் ஒனறுகூடி முடிவெடுக்கின்றன; அதில் அமெரிக்காவின் கட்டளைகளை இந்தியா விசுவாசமாக ஏற்கிறது. மேலும், இசுரேலுடனும் அமெரிக்காவுடனும் இராணுவப் பயிற்சி பெறுவது, தொழில்நுட்ப கூட்டுக்களை பெருக்கிக் கொள்வது, ஆயுதங்களை இறக்குமதி செய்யும் ஒப்பந்தமிடுவது, அமெரிக்க உளவுத் துறையை அனுமதிப்பது, காசுமீர் விவகாரத்தில் கூட அமெரிக்கத் தலையீட்டை ஏற்பது என்கிற உறவுதானே இருக்கிறது.

எதையாவது சொல்லி இந்திய அரசின் ஆதரவைப் பெறுவது என்ற நோக்கில், இன்றைய உலக நாடுகளிடையே நிலவும் உறவுகளைக் கூடக் குருட்டுத்தனமாகப் பார்க்கிறார்கள், புலிகளும் அவர்களுடைய ஆதரவாளர்களும். இலங்கை - ஈழப் போர் நெருக்கடி மேலும் முற்றினால், இந்திய இராணுவத்தோடு அமெரிக்கா, இசுரேல், பாகிஸ்தான் உட்பட பன்னாட்டுப் படைகளும் அனுப்பப்படலாம் என்கிற புறநிலையை இவர்கள் பார்க்க மறுக்கின்றனர். அப்படித்தானே உலகின் பல உள்நாட்டுப் போர்க்களங்களிலும் இந்த நாடுகளின் படைகள் தோளோடு தோள் நின்று போரிடு


படிப்பகம்

www.padippakam.com

கின்றன? ஈழம் மட்டும் விதிவிலக்காக அமையுமா?

ஈழ விடுதலைப் புலிகளை இந்திய அரசு ஏன் ஆதரிக்க வேண்டும் என்பதற்கு ஏராளமான ஆதாரங்களை அள்ளி வீசி சுப.வீரபாண்டியன், சின்னக் குத்தூசி போன்றவர்கள் ஆய்வுக் கட்டுரைகள் எழுதுகின்றனர். வரலாற்றில் இருந்து சான்றுகள் பலவும் காட்டுகின்றனர். பல்வேறு கோணங்களில் இருந்தும் தர்க்க வாதங்களை அடுக்குகின்றனர். ஆனால், ஒரு விடயத்துக்குள் மட்டும் போக மறுக்கின்றனர். இலங்கை - ஈழ விவகாரத்தில் இந்திய ஆளும் வர்க்கங்கள், சாதி/இனங்களின் அடிப்படை நலன்கள் என்ன? இந்திய அரசின் நலன்கள் இலங்கை அரசுடன் அணுக்கமாக இருக்கின்றனவா? ஈழ விடுதலையை ஆதரித்து இலங்கை அரசுடன் பகை முரண்பாட்டை உருவாக்கிக் கொள்ளும் வகையில் இருக்கின்றனவா?

தனி ஈழம் அமைந்தால் அது இந்திய நலன்களுக்கு அரணாக அமையும் என்ற வாக்குறுதியை மட்டும் நம்பி விடுவதற்கு இந்திய ஆட்சியாளர்கள் என்ன முட்டாள்களா?

தென்கிழக்காசிய ஏசியான், ஐரோப்பிய குழுமம் போன்று, தெற்கு ஆசிய நாடுகளின் பொருளாதாரக் கூட்டமைப்பை (SAARC) உருவாக்கவே இந்தியா விரும்புகிறது. அதில் இலங்கைக்கு முக்கிய இடம் வைத்திருக்கிறது. இந்தியத் தரகு அதிகார முதலாளிகள் வெளிநாடுகளில் மூலதனமிட்டுள்ள வகையில், இலங்கை முக்கியப் பொருளாதாரமாக உள்ளது. ஆயுத விற்பனை உட்பட வியாபார உறவிலும் முக்கிய இடத்தை வகிக்கிறது. இந்துமாக் கடலில் கொழும்பு, திரிகோணமலை ஆகிய போர்த்தந்திர முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகங்கள், கடல் வழித் தடங்கள் இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் உள்ளன. தெற்கு ஆசியக் கூட்டமைப்பில், பாகிஸ்தானை எதிர்கொள்ள அதற்கு அடுத்த பெரிய நாடான இலங்கையுடனான நட்புறவு இந்தியாவுக்கு அவசியமாக இருக்கிறது. ஐரோப்பியக் குழும நாடுகளிடையே உள்ளதைப் போல இந்தியா - இலங்கை இடையே உள்ள வரி, கடவுச்சீட்டுக் கட்டுப்பாடுகளை அகற்றி நெருங்கி வரத் திட்டமிட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தம்கூடக் கொள்கை அளவில் ஏற்கப்பட்டுவிட்டது.

இப்படி, இலங்கை அரசின் பக்கம் இந்தியா நிற்பதற்கான பல காரணங்களும் இருக்கின்றன; ஈழ விடுதலையை ஆதரிப்பதற்கு ஒரு காரணமும் இல்லை. இலங்கை மீது மேலாதிக்கம் வகிப்பதற்குப் பகடைக்காயாகப் பயன்படுத்துவதற்கு வேண்டுமானால், ஈழப் பிரச்சினையை இந்திய அரசு ஆதரிக்கலாம். இதை நம்பி இந்திய அரசிடம் ஆதரவு கோருவதும், பெறுவதும் பச்சைத் துரோகமில்லையா?

● ஆர்.கே.

7-ம் பக்கத் தொடர்ச்சி

வயித்துக் கூலி, நாளைக்கும் குறையாமல் கிடைக்குமா?" என்பதுதான்.

முகம்மது இஸ்மாயில், குஜராத் மாநிலத் தலைநகர் அகமதாபாத்தில் இருந்து வேலை தேடி பிவாண்டி நகருக்கு வந்தவர். கடந்த ஆறு மாதங்களில், அகமதாபாத்தில் வசிக்கும் தனது குடும்பத்துக்கு இஸ்மாயிலால் ஒரு சல்லிக் காசு கூட அனுப்ப முடியவில்லை. "ராத்திர கண்ணயரும் போதும் கூட, அகமதாபாத்தில் எனது குழந்தைகள் பட்டினியால் சுருண்டு கிடப்பார்கள் என்ற நினைவு திரும்ப திரும்ப வந்து, என்னைத் தூங்க விடுவதில்லை" என்று இஸ்மாயிலால் வேதனைதான்பட முடிகிறது.

முகம்மது இஸ்மாயில் இந்தக் கஷ்டங்களைச் சந்தித்துக் கொண்டு, வாழ்க்கையோடு போராடிக் கொண்டிருக்கிறார். ஆனால், இஸ்மாயிலின் சக தொழிலாளர்களில் சிலரோ, எத்தனை நாள்தான் இப்படி செத்துச் செத்துப் பிழைப்பது என்ற வேதனையில் தற்கொலை செய்து கொண்டு மாண்டு போய் விட்டனர்.

மகாராஷ்டிராவின் பிவாண்டி, தமிழகத்தின் ஈரோடு - பள்ளிப்பாளையம் போல விசைத்தறித் தொழிலுக்குப் பெயர் பெற்ற நகரம். கிட்டதட்ட 7 இலட்சம் விசைத்தறிகள் இயங்கிவந்த பிவாண்டியில், இன்று பாதிக்கும் மேற்பட்ட தறிக்கூடங்கள் மூடிக் கிடக்கின்றன. ஒரு இலட்சம் விசைத்தறிகள் இரும்பின் எடைக்கு விற்கப்பட்டுவிட்டன. பீகார், உத்திரபிரதேசம், ஆந்திராவில் இருந்து பிவாண்டிக்கு வேலை தேடி வந்து, விசைத்தறித் தொழிலாளர்களாக வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்த ஐந்து இலட்சம் தொழிலாளர்களுள் பாதிப்பேர், விசைத்தறி தொழில் நசிந்து வேலை கிடைக்காததால், மீண்டும் தங்களின் கிராமத்திற்கே திரும்பிப் போய்விட்டனர். முகம்மது இஸ்மாயிலைப் போல, ஏதோவொரு நம்பிக்கையில் இன்னும் பிவாண்டியிலேயே தங்கியிருக்கும் இலட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு அடுத்த வேளை உணவுக்குக்கூட உத்தரவாதம் கிடையாது.

முன்பு தொழிலாளர்கள் வேலைக்குப் போய்க் கொண்டும், திரும்பிக் கொண்டும் இருந்த பிவாண்டியின் தெருக்களில், இப்பொழுது போலீசு "ஜீப்"கள்தான் சுற்றிச் சுற்றி வருகின்றன. ஏனென்றால், பிவாண்டியில் இப்பொழுது குற்றங்கள் பெருகிவிட்டதாம்! விசைத்தறி தொழிலாளர்களை நம்பி நடந்து வந்த மளிகைக் கடைகள், தேநீர்க் கடைகள், சிறு உணவு விடுதிகள், முடிதிருத்தும் நிலையங்கள், தொலைபேசி "பூத்"கள் - இப்படி எல்லா வியாபாரங்களும் பிவாண்டியில் படுத்துவிட்டன. "பிவாண்டி வெறிச்சோடிப் போன, பேய்கள் மட்டுமே நடமாடக் கூடிய நகரமாகிவிட்டது" என்கிறார் அந்நகரைச் சேர்ந்த ஒரு வழக்குரைஞர்.

பிவாண்டியின் விசைத்தறி தொழில் நசிந்து போனதற்கான காரணம், விசாரணைக் கமிஷன் போட்டுக் கண்டுபிடிக்க வேண்டிய அளவிற்குச் சிக்கலானதோ, புதிரானதோ, மர்மமானதோ அல்ல. தைவான், சீனா, தென்கொரியாவில் இருந்து துணிகள் இறக்குமதி செய்யப்படுவதும், கட்டுப்படியாகாத நூலின் விலையும்தான் இந்த நசிவிற்கான முக்கியமான காரணம் என்கிறார்கள் விசைத்தறி முதலாளிகள்.

இறக்குமதி செய்யப்படும் துணி, மீட்டர் ஒன்றுக்கு ஆறு ரூபாய்க்குச் சந்தையில் விற்கப்படுகிறது. ஆனால், பிவாண்டியில் ஒரு மீட்டர் துணியை நெய்வதற்குத் தேவைப்படும் நூலுக்கு ஆகும் செலவே ஐந்து ரூபாயைத் தொட்டு விடுகிறது. நூலின் விலையைக் கட்டுப்படுத்தாமல் கையை விரித்த அரசு, மறுபுறம் உலக வங்கியின் கட்டளைப்படி தறி ஒன்றுக்கான மின் கட்டணத்தை ரூ. 175/-லிருந்து ரூ. 300/- ஆக உயர்த்தியதாலும் உற்பத்திச் செலவு அதிகமாகி, ஏற்றுமதிக்கும் வழியின்றி, இறக்குமதியாகும் துணிகளோடும் போட்டியிட முடியாமல் பிவாண்டி விசைத்தறி தொழில் நசிந்து போனது.

மைய அரசு நூல் ஏற்றுமதியைத் தடையின்றி அனுமதித்து வருவதுதான் நூல் விலை உயர்வுக்குக் காரணம். இந்த நூல் விலை உயர்வு தமிழகத்தின் கைத்தறி - விசைத்தறி தொழிலுக்கும், திருப்பூர் ஆயத்த ஆடை ஏற்றுமதித் தொழிலுக்கும் கூட எமனாக மாறி நிற்கிறது.

ஏற்றுமதியை மையப்படுத்தி மைய அரசு செயற்படுத்தி வரும் புதிய ஜவுளிக் கொள்கையால், பெரும்பான்மையான சிறு நூற்பாலை அதிபர்கள், விசைத்தறி — ஆயத்த ஆடை தயாரிப்பில் ஈடுபட்டுள்ள முதலாளிகள்/கைத்தறி நெசவாளர்கள் பலனடைந்ததாகத் தெரியவில்லை. மாறாக, பெரிய நூற்பாலைகளையும், துணியாலைகளையும் நடத்தி வரும் தரகு முதலாளித்துவ நிறுவனங்கள்தான் கொழுத்த இலாபமடைந்துள்ளன.

சிறுதொழில் அதிபர்களும், நடுத்தர வர்க்கத்தினரும், "தனியார்மயம் - தாராளமயம் தொழிலாளர்களைப் பாதிக்கலாம்; தனியார்மயம் - தாராளமயம் என்பது எவ்விதக் கட்டுப்பாடுமின்றி, எல்லாவிதமான தொழில் அதிபர்களும் சுதந்திரமாகப் போட்டியிட்டு, தங்கள் தொழிலைப் (சொத்துக்களை) பெருக்கிக் கொள்ளுவதற்கான வாய்ப்புத் தரும் தொழிற் கொள்கை" என்று கருதுகின்றனர்.

ஆனால், தனியார்மயம் - தாராளமயம் என்பது தொழிலாளர்களின் வாழ்க்கையை மட்டுமல்ல, சிறுவீத உடைமையாளர்களின் சொத்துக்களையும் சூறையாடக் கூடியதாகும். பிவாண்டியில் விசைத்தறி தொழில் நசிந்து போனதும், நீலகிரி தேயிலை விவசாயிகளின் போராட்டமும் இதைத்தான் நிரூபித்துக் காட்டுகின்றன.

● ரஹீம்

www.padippakam.com

# பால் தாக்கரே: மஃபியா தலைவனிடம் மிரளும் அரசுகள்

மும்பய் நகரில் பதட்டத்தையும், நாடெங்கும் பரபரப்பையும் ஏற்படுத்தியிருந்த பால் தாக்கரே கைது விவகாரம் எதிர்பாராத திருப்பத்துடன் முடிந்துவிட்டது. "பால் தாக்கரே, மும்பய்க் கலவரத்தின் பொழுது, தனது "சாம்னா" பத்திரிகையின் மூலம் முசுலீம்களுக்கு எதிராக இந்துக்களைத் தூண்டிவிட்டார்" என்ற குற்றச்சாட்டின் கீழ் அவரைக் கைது செய்து, வழக்கு தொடர்ந்து, தண்டிக்கப் போவதைப் போல மகாராஷ்டிர மாநிலத்தை ஆளும் காங்கிரசு - சரத் பவார் கூட்டணி காட்டிக் கொண்டது. "மும்பய்ப் பெருநகர நீதிமன்றம் பால் தாக்கரேயைப் பிணையில் வெளியே அனுப்பிவிட்டு, வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும்" என இரு தரப்பும் — மாநில அரசும், தாக்கரேயும் எதிர்பார்த்த பொழுது, நீதிமன்றமோ வழக்கை தள்ளுபடி செய்துவிட்டு, பால் தாக்கரேயை விடுதலை செய்துவிட்டது. ஒரு விதத்தில் மூக்கறுபட்டுப் போன காங்கிரசு - சரத் பவார் கூட்டணி, இத்தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்து வழக்கைத் தொடரப்போவதாக அறிவித்துள்ளது.

காங்கிரசு - சரத் பவார் கூட்டணி மட்டுமல்ல, ஆளும் வர்க்கத்தின் ஒரு பிரிவும், முதலாளித்துவ அரசியல் விமர்சகர்கள், பிரபலமான வழக்கறிஞர்கள், இடது, வலது போலி கம்யூனிஸ்டுகள், இந்து மதவெறியர்களை எதிர்க்கும் தனிநபர்கள் உள்ளிட்ட பலரும், "பால் தாக்கரே சட்டத்திற்கு மேலானவர் கிடையாது", "வழக்கைத் தள்ளுபடி செய்தது தவறு", "நீதிமன்றத்தில் வழக்கு நடத்தி சட்டப்படியே பால் தாக்கரேயைத் தண்டித்துவிட முடியும்" என எழுதியும் பேசியும் வருகின்றனர்.

எங்கேயோ இருக்கும் பால் தாக்கரேயை விடுங்கள். உள்ளூரில் சாராயம், கஞ்சா விற்கும் ரௌடி கூட, "இந்த அரசாங்கம், போலீசு, சட்டம் எல்லாம் என் பாக்கெட்டுல" எனப் பேசிக் கொண்டு திரிகறான். அப்படி சட்டத்திற்கு மேலானவனாக நடந்து வரும் ரௌடி மீது திடீரென்று சட்டம் பாய்ந்து நீதியை நிலைநாட்டி விடுவதைப் போல, தாக்கரே விசயத்திலும் நடந்துவிடுமா, முடியுமா என்பதுதான் நம்முன் உள்ள கேள்வி.

இந்தியாவில் எத்தனையோ ஓட்டுக் கட்சிகள் இருப்பதைப் போல, சிவசேனாவும் ஓர் ஓட்டுக் கட்சி; அதனின் தலைவர் பால் தாக்கரே என்று வேறுபாடின்றி சிவசேனாவையும், தாக்கரேயையும் மதிப்பிட்டு விட முடியாது. முசுலீம் எதிர்ப்பு இந்து மதவெறி, பாகிஸ்தான் எதிர்ப்பு இந்திய 'தேசிய' வெறி, தாழ்த்தப்பட்டோர் எதிர்ப்பு மராத்தா மேல்சாதி வெறி இவைதான் சிவசேனாவின் கொள்கைகள். இந்த வெறித்தனங்கள் ஊட்டப்பட்ட கிரிமினல் கும்பல்களைக் கொண்டுதான் மும்பயிலும், மகாராஷ்டிரா மாநிலத்தின் பிற நகரங்களிலும் சிவசேனா அமைப்பு கட்டப்பட்டுள்ளது. இத்தகைய அமைப்பின் நிரந்தரமான, ஆயுட்காலத் தலைவன்தான் பால் தாக்கரே. "கட்சிக்குள் ஜனநாயகத்திற்கான குரல்கள் எழுவதை என்னால் சகித்துக் கொள்ள முடியாது", "இந்தியாவிற்குத் தேவை சர்வாதிகாரம்தான்", "மும்பயில் இருக்கும் கிரிமினல்கள் எல்லாம் என் பள்ளியில் படித்தவர்கள்தான்" என வெளிப்படையாகவே பேசி வரும் பாசிஸ்ட் பால் தாக்கரே.

கடந்த நாற்பதாண்டுகளில் சிவசேனா நடத்திய மதவெறி - சாதி வெறிக் கலவரங்கள், கொலைகள், பாலியல் வன்முறைகள்; தமிழர்கள், மலையாளிகள் மீது நடத்திய இனவெறித் தாக்குதல்கள்; தொழிலாளர்கள் மீது ஏவிவிடப்பட்ட வன்முறைகள் ஆகிய அனைத்து கிரிமினல் நடவடிக்கைகளையும் தனது பேச்சாலும் எழுத்தாலும் தூண்டிவிட்டு, பின்னிருந்து இயக்கியவர் பால் தாக்கரேதான். இந்த கிரிமினல் குற்றங்களுக்காக பால் தாக்கரே மீது இந்தியத் தண்டனைச் சட்டம் கண்டிப்புடன் பாய்ந்திருக்குமானால், தாக்கரே பலமுறை தூக்கில் தொங்கவிடப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால், தாக்கரேயோ, எந்தவொரு சட்டமும் தன்னை நெருங்கிவிட முடியாதபடி இந்து மதவெறி - தேசியவெறி அரசியலைக் கவசமாக அணிந்து கொண்டு இருக்கிறார். இந்து மதவெறியர்கள் ஆட்சியைப் பிடிப்பதற்கு முன்னமே இந்தக் கவசத்தை உடைத்துக் கொண்டு பாயாத சட்டம், இனியா பாய்ந்துவிடப் போகிறது? இல்லை, சிறுபான்மை மத மக்களுக்காகக் கண்ணீர் வடிக்கும் எந்தவொரு 'மதச்சார்பற்ற' கட்சிக்காவது, பால் தாக்கரேயைக் கைது செய்து உள்ளே தள்ளிவிடும் அரசியல் உறுதிதான் உண்டா? தற்பொழுது பால் தாக்கரே கைது செய்யப்பட்டது, தாக்கரே மீது வழக்குத் தொடர அளிக்கப்பட்ட அனுமதி - இவை சுய அரசியல் இலாபம் கருதி, காங்கிரசு - சரத்பவார் கூட்டணி நடத்திய நாடகம் தானே தவிர, அதில் எள்ளளவும் அரசியல் நேர்மை இருக்கவில்லை.

1993 சனவரியில் பம்பாய்க் கலவரம் நடந்தபொழுது, சிவசேனாவின் "சாம்னா" நாளிதழில் வெளியான இரு தலையங்கங்கள், முசுலீம்களுக்கு எதிராக இந்துக்களைத் தூண்டி விடுவதாக அமைந்திருந்தன என்பதனை அடிப்படையாகக் கொண்டு, மும்பய் போலீசு பால் தாக்கரே மீது 153(ஏ) என்ற தண்டனைச்சட்டத்தின்படி குற்றம் சுமத்தி, முதல் தகவல் அறிக்கை தயார் செய்து, அதை 7.7.93 அன்று பதிவு செய்தது. ஒரு மதம்/இனம்/சாதிப் பிரிவினருக்கு எதிராக இன்னொரு பிரிவினரைத் தூண்டிவிடுவதைக் குற்றமாகக் கருதும் இச்சட்டத்தின் கீழ் ஒருவரை விசாரிக்க அரசின் அனுமதியைப் பெற வேண்டும். இதன்படி மும்பய் போலீசும் பால் தாக்கரேயை விசாரிப்பதற்கான



www.padippakam.com

அனுமதி கேட்டு 24.4.'94 அன்று விண்ணப்பித்திருந்தது. இதற்கான அனுமதி ஆறு ஆண்டுகள் கழித்துதான் மகாராஷ்டிரா அரசால் வழங்கப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின்படி ஒருவர் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால், அவருக்கு மூன்று ஆண்டுகள் வரைதான் தண்டனை விதிக்க முடியும். "இப்படிபட்ட குற்ற வழக்குகளில் முதல் தகவல் அறிக்கை பதிவான மூன்று ஆண்டுகளுக்குள் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்து, வழக்கை விசாரித்து முடித்துவிட வேண்டும்; அதற்கு மேல் காலதாமதமானால் இந்த வழக்கே தள்ளுபடியாகிவிடும்" என்ற சட்ட நுணுக்கத்தைக் காட்டி, ஆறு ஆண்டுகள் காலதாமதமாகிவிட்ட பால் தாக்கரே மீதான வழக்கை தள்ளுபடி செய்து விட்டது, நீதிமன்றம்.

முசுலீம் மதத்தைச் சேர்ந்த ஓவியரான எம்.எஃப். ஹுசைன் இந்துக் கடவுளான சரசுவதியை அம்மணமாக வரைந்தார் என்றவுடனேயே, 153(ஏ) சட்டம் அவர் மீது ஒரு நொடி கூடத் தாமதிக்காமல் பாய்ந்தது. ஆனால், மும்பய்க் கலவரத்தின் பொழுது முசுலீம் பெண்களை அம்மணமாக்கி கற்பழித்து, உயிரோடு எரித்துக் கொன்ற இந்துமத வெறியர்களின் தலைவன் பால் தாக்கரே மீது பாய்வதற்கோ ஆறு ஆண்டுகள். ஏன் இந்தக் காலதாமதம்?

இடையில் ஐந்து ஆண்டுகள் பா.ஜ.க. - சிவசேனா கூட்டணி மகாராஷ்டிராவை ஆண்டது, நினைவில்லையா? எனப் பதிலடி கொடுக்கிறது, காங்கிரசு - சரத் பவார் கூட்டணி. உண்மைதான். ஆனால், பா.ஜ.க. - சிவசேனா கூட்டணி 1995-இல் ஆட்சியைப் பிடிப்பதற்கு முன்னதாக, காங்கிரசுதான் அதிகாரத்தில் இருந்தது. பால் தாக்கரே மீது வழக்கு தொடர போலீசு அனுமதி கேட்ட பொழுது சரத் பவார்தான் மகாராஷ்டிரா முதல்வராக இருந்தார். "ஸ்ரீ கிருஷ்ணா கமிசனின் விசாரணை முடியட்டும் எனக் காத்திருந்தேன்" என்று அனுமதி கொடுக்காததற்குச் சமாதானம் சொல்கிறார், பவார்.

சிவசேனா குண்டர்கள் கலவரத்தை நடத்திக் கொண்டிருந்தபொழுதே, "தாக்கரேயைக் கைது செய்ய வேண்டும்" எனப் பலரும் கோரிய பொழுது, "தாக்கரேயைக் கைது செய்தால் கலவரம் இன்னும் அதிகமாகும்" என அப்பொழுது அம்மாநில முதல்வராக இருந்த சுதாகர்ராவ் நாயக் பயமுறுத்தினார். அதன்பின் முதல்வரான பவார் தாக்கரேயைக் கைது செய்யாததற்கு, கமிசன் அறிக்கை வரட்டும் எனக் காத்திருந்ததாக மழுப்புகிறார். பாபர் மசூதி இடிக்கப்பட்டதை ராவ் அரசு கைகட்டிக் கொண்டு வேடிக்கை பார்த்ததைப் போலத்தான், மும்பய்க் கலவரத்தின் பொழுதும் மகாராஷ்டிரா மாநில காங்கிரசு அரசு நடந்து கொண்டது.

இப்படிபட்ட முதுகில் குத்தும் காங்கிரசு; அந்தப் பண்பாட்டில் ஊறி வளர்ந்து, இன்று தனிக்கட்சி நடத்தி வரும் பவ்ார்; பால் தாக்கரேயின் முன்னாள் சிஷ்யனும், இந்நாள் மகாராஷ்டிரா மாநில துணை முதல்வருமான சக்கன் புஜ்பால் - இந்தக் கூட்டணி பால் தாக்கரேயை, அவரது இந்து மதவெறி கிரிமினல் நடவடிக்கைகளுக்காகத் தண்டிக்க முயலும் என்பதற்கு அடிப்படையே கிடையாது.



தாக்கரே விடுதலை செய்யப்பட்டதைக் கொண்டாடும் இந்து மதவெறிக் கும்பல்.

பால் தாக்கரே மீதான வழக்கைப் பொருத்தவரை அவரைக் கைது செய்யாமலேயே, அந்த வழக்கு தொடர்பாக ஏற்கனவே உள்ள ஆதாரங்களை — சாம்னாவில் வெளிவந்த தலையங்கங்கள், மும்பய்க் கலவரத்தில் பால் தாக்கரேயின் பங்கு குறித்து கிருஷ்ணா கமிசனின் அறிக்கை ஆகியவற்றைப் பயன்படுத்திக் குற்றப் பத்திரிகையைத் தயாரித்து, அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து வழக்கு விசாரணையைத் தொடங்கியிருக்கலாம். ஆனால், காங்கிரசு - பவார் கூட்டணியோ, குற்றப் பத்திரிகையினைக் கூடத் தயாரிக்காமல், தாக்கரேயைக் கைது செய்து பரபரப்பு ஊட்டுவதிலேயே குறியாக இருந்தது. நீதிமன்றம் இவ்வழக்கைத் தள்ளுபடி செய்ததற்கு காலதாமதத்தோடு, குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யாததையும் காரணமாகக் காட்டியுள்ளது.

உண்மையில், காங்கிரசு - பவார் கூட்டணியின் நோக்கம் பால் தாக்கரேயின் மீது வழக்கு நடத்தித் தண்டிக்க வேண்டும் என்பதல்ல. மாறாக, சிவசேனா, காங்கிரசு - பவார் கூட்டணியில் இருந்து எட்டு எம்.எல்.ஏ.க்களை விலைக்கு வாங்கி, ஆட்சியைக் கவிழ்க்கச் சதித் திட்டம் தீட்டியிருந்தது. இதனை முறியடிப்பதற்காகதான் ஆறு ஆண்டுகளாகத் தூசி படிந்து கிடந்த இந்த வழக்கைப் பயன்படுத்திக் கொண்டது. ஒருபுறம், வழக்கை காட்டி பால் தாக்கரேயுடன் பேரம் நடத்தி, ஆட்சிக் கவிழ்ப்பு திட்டத்தைக் கைவிடச் செய்வது; மறுபுறம், இந்தக் கண்துடைப்பு கைது நடவடிக்கையைச் சாதனையாகக் காட்டி சிறுபான்மையினரின் ஓட்டைப் பெறுவதுதான் அவர்களின் நோக்கம்.

காங்கிரசு - சரத்பவார் கூட்டணி இந்த மோசடி நோக்கத்தை மூடிமறைத்துக் கொண்டு, நீதிமன்றத் தீர்ப்பின் மீது எகிறிப் பாய்கிறது. பால் தாக்கரேயைச் சட்டப்படித் தண்டித்துவிட முடியும் என வாதிடுவோரும், "கால தாமதத்தைத் தள்ளுபடி செய்ய சட்டத்தில் இடமுண்டு; அச்சட்டப் பிரிவை நீதிபதி கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. தாக்கரேயைப் பிணையில் விடலாமா, கூடாதா என்பதுதான் நீதிபதி முன்னிருந்த வழக்கு. எனவே, வழக்கைத் தள்ளுபடி செய்த தீர்ப்பு தவறானது" எனக் கூறுகின்றனர்.

இவர்கள் கூறுகிறபடி, வழக்கைத் தள்ளுபடி செய்த நீதிமன்றம் சரியான தீர்ப்பைச் சொல்லியதாக வைத்துக் கொள்வோம்; அல்லது, அரசு தொடுக்கவுள்ள மேல்முறையீட்டில் கீழ் நீதிமன்றத்தின் தவறான தீர்ப்பு தள்ளுபடி செய்யப்பட்டு, வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதாக வைத்துக் கொள்வோம். பிறகு என்ன நடக்கும்?

ஜெயலலிதாவைப் போல சட்ட நுணுக்கங்களைக் காட்டி வழக்கை முடக்க தாக்கரே முயலுவார்; அதையும் மீறி விசாரணை நடந்து வழக்கு வெற்றி பெற்றால், தாக்கரேக்கு மூன்று ஆண்டு சிறைத் தண்டனை கிடைக்கும். நீதிக்குத் தலைவணங்கி தாக்கரே சிறைக்குப் போக மாட்டார். தீர்ப்பை எதிர்த்து உயர்நீதி மன்றத்துக்கும், பிறகு உச்சநீதி மன்றத்துக்கும் போவார். ஊழல் வழக்கில் சிக்கிக் கொண்ட நெடுஞ்


படிப்பகம்

www.padippakam.com

செறியன், ''இறுதியானதீர்ப்பு வருவதற்குள் நான் மன்டையைப் போட்டு விடுவேன்'' என்றார்.' தாக்கரே வழக்கிலும் அதேபோல் நடக்கலாம்.

அதேசமயம் தாக்கரேவுக்கு எதிராக வலுவான ஆதாரங்கள் இருந்தாலும் கூட, மேல்முறையீட்டில் வழக்கு வெற்றிதான் பெறும் என்று உறுதியாகச் சொல்ல முடியாது. மும்பய் நகர சபையின் ஆணையராக (கமிசனர்) இருந்த ஜே.பி. டிசௌசா என்பவர், மும்பய்க் கலவரத்தின் பொழுது சாம்னாவில் வெளிவந்த ஒன்பது தலையங்கங்களைக் குறிப்பிட்டு, தாக்கரே மீது 153(ஏ) பிரிவின் கீழ் வழக்குப் போட அரசாங்கத்தை உத்திரவிடச் செய்ய வேண்டும் என மும்பய் உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்திருந்தார். ''சாம்னா கட்டுரைகள் 153(ஏ) குற்றப்பிரிவுச் சட்டத்தின் கீழ் வராது; இந்தக் கட்டுரைகள் காரணமாக, பாதிப்புக்கு ஆளானதாகக் கூறப்படும் இரு சமூகத்தினருமுமே நடந்தவைகளை மறந்து விட்டு ஒருவரோடு ஒருவர் மீண்டும் சுமுகமாக, சௌஜன்யமாக வாழத் தலைப்பட்டு விட்டார்கள். பழைய விசயங்களை இனி கிளறுவதால் பயனில்லை'' என்று கூறி, வழக்கைத் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தது மும்பய் உயர்நீதி மன்றம். இதே கதி அரசின் மேல் முறையீட்டுக்கும் நேரலாம்.

முதலாளித்துவ சட்டங்கள் பணத்திற்கும், அதிகாரத்திற்கும் விலைபோகக் கூடியது மட்டுமல்ல; எப்படி வேண்டுமானாலும் வளைந்து கொடுக்கக் கூடியது; வியாக்கியானம் செய்யக் கூடியது. அதனால்தான் தாக்கரே மீதான வழக்கை தள்ளுபடி செய்த மும்பய்ப் பெரு நகர நீதிமன்றத் தீர்ப்பை மாநில அரசும், இந்து மதவெறியை எதிர்க்கும் வழக்கறிஞர்களும் தவறு என்றும், ராம் ஜெத்மலானி போன்றவர்கள் சரி என்றும் முட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இது ஒருபுறமிருக்க, சட்டம், நீதிமன்றம் போன்ற இந்த முதலாளித்துவப் புனிதங்களை இந்து மதவெறியர்கள் கால் தூசுக்குச் சமமாகக் கூட மதிப்பதில்லை என்பதே உண்மை. இவர்கள் நீதிமன்றத் தீர்ப்புகளை மதிப்பவர்களாக இருந்தால், பாபர் மசூதியை இடித்துத் தள்ளியிருக்க மாட்டார்கள்; நீதிமன்றங்களை மதிப்பவர்களாக இருந்தால், உ.பி. அலகாபாத் உயர்நீதி மன்றத்தில் நடந்துவரும் பாபர் மசூதி வழக்கில், குற்றப்பத்திரிகையைக் கூட வாங்கிக் கொள்ளாமல் இழுத்தடிக்க மாட்டார்கள். தங்கள் மீதான வழக்குகளைச் சட்டப்படியே சந்திப்பவர்களாக இருந்தால், பாபர் மசூதி வழக்குடன் தொடர்புடைய உ.பி. மாநில அரசு ஊழியர் சுபாஷ் பான் சாத்தை மர்மமான முறையில் கொலை செய்திருக்க மாட்டார்கள்.

நாடாளுமன்ற சனநாயகத்தின் நான்கு தூண்களில் ஒன்றான நாடாளுமன்றம் இப்பொழுது இந்து மதவெறியர்களின் பிடியில் உள்ளது. இடது, வலது போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட 'மதச்சார்பற்ற' கட்சிகளோ இந்துமத வெறியர்களை எதிர்க்கும் திராணியற்று, இவர்களிடம் அரசியல் ரீதியில் அடிபணிந்து கிடக்கிறார்கள். அதிகார வர்க்கமும், 'தேசிய'ப் பத்திரிகைகளும் காவியமயமாக்கப்பட்டிருப்பதைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. இந்த நிலையில் சனநாயகத்தின் நான்காவது தூணான நீதிபதியின் கையில் உள்ள சுத்தியில் இந்து மத வெறியர்களின் தலையில் தட்டி உட்கார வைத்துவிடும் என்று நம்புவது சிறுபிள்ளைத்தனமானது; மேலும், சட்டபூர்வமாகத் திணிக்கப்படும் பாசிசத்தை அங்கீகரிக்கும் இந்திய நீதிமன்றங்களின் - ''இந்து'' என்பது ஒரு மதம் அல்ல; வாழ்க்கைமுறை என்ற உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு; ''தடா'' சட்டத்திற்கு நீதிமன்றம் அங்கீகாரம் வழங்கியது போன்றவை - மூலமே, இந்துமதவெறி பாசிசத்தை வீழ்த்திவிட முடியும் என மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்வது மோசடித்தனமானது.

அமைப்பு ரீதியாகத் திரட்டப்பட்ட கிரிமினல் - குண்டர் படையைக் கொண்ட சிவ சேனா, ஆர்.எஸ்.எஸ். உள்ளிட்ட இந்துமத வெறி அமைப்புகளையும், அதன் தலைவர்களையும், புரட்சிகரமான, மதச்சார்பற்ற, ஆயுதம் ஏந்திய மக்கள் படையின் மூலமே முற்றிலுமாக வீழ்த்த முடியும்; இந்துமத வெறி கிரிமினல் நடவடிக்கைகளுக்காக அவர்களைத் தண்டிக்கவும் முடியும்.

• செல்வம்

## பாபர் மசூதி விசாரணையை இழுத்தடிக்க நடந்த கொலை

சுபாஷ் பான் சாத் - உத்திரப் பிரதேச மாநில உள்துறை அமைச்சகத்தைச் சேர்ந்த அதிகாரி. அம்மாநிலத்தில் நடந்த மதக் கலவர வழக்குகளைக் கவனிக்கும் பொறுப்பு வகித்து வந்த இவரிடம், பாபர் மசூதி இடிக்கப்பட்டதை விசாரித்து வரும் லிபரான் கமிசனுக்குத் தேவைப்படும் ஆவணங்கள் - கோப்புகளைத் தயாரித்துக் கொடுக்கும் பொறுப்பும் கொடுக்கப்பட்டிருந்தது. சாத் கடந்த ஏப்ரல் 30-ஆம் தேதியன்று அலுவலக வேலை தொடர்பாக தில்லிக்குச் சென்றபொழுது, மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டார்.

சாத் மருத்துவமனையில் இறப்பதற்கு முன்பாக, தனது சக ஊழியர்களிடமும், உறவினர்களிடமும், ''ரயில், தில்லி திலகர் பாலத்தின் மீது சென்று கொண்டிருந்த பொழுது, நான் இறங்குவதற்குத் தயாராக கதவோரம் வந்து நின்றேன். அப்பொழுது யாரோ என்னைத் திட்டமிட்டே பிடித்துக் கீழே தள்ளிவிட்டார்கள். லிபரான் கமிசனிடம் கொடுப்பதற்காகக் கொண்டு சென்ற கோப்புகளைத் திருடுவது தான், அவர்களின் நோக்கமாக இருந்திருக்க வேண்டும்'' என்று கூறியிருக்கிறார். மேலும், சாத் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தொழுது, உ.பி. மாநில உள்துறை அமைச்சகச் சிறப்புச் செயலாளர் கே.பி. அகர்வாலும், என்.என். வர்மா என்ற மற்றொரு உயர் அதிகாரியும் அந்தக் கோப்புகளைப் பற்றித் தன்னிடம் விசாரித்ததாக, சாத்தின் தந்தை பிர்பான் சாத்தும் கூறியிருக்கிறார்.


சுபாஷ் பான் சாத்

அந்த இரண்டு கோப்புகளும் பாபர் மசூதி இடிப்பில் சில காங்கிரசு தலைவர்களுக்கும், மைய அமைச்சர்களாக இருக்கும் சில பா.ஜ.க. தலைவர்களுக்கும் இருந்த தொடர்பைப் பற்றிய ஆவணங்கள் அடங்கியது எனக் கூறப்படுகிறது. ஆனால், தில்லி போலீசார், சாத் பயணத்தின்போது எடுத்துச் சென்ற பொருட்களைத் திருப்பிக் கொடுத்த பொழுது, அந்த இரண்டு கோப்புகளும் காணப்படவில்லை.

மைய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் தில்லி போலீசு, சாத்தின் மர்ம மரணத்தை விபத்து என முடிவு செய்து வழக்கை மூடிவிட்டது. ஆனால், சாத்தின் தந்தை இவ்வழக்கை மறு விசாரணை செய்யக் கோரி அளித்த மனுவை தில்லி உயர்நீதி மன்றம் ஏற்றுக் கொண்டுள்ளது.

லிபரான் கமிசனிடம் கொடுக்கப்பட வேண்டிய கோப்புகள் 'காணாமல்' போனதில் யாருக்காவது ஆதாயம் உண்டெனில், அது இந்து மதவெறியர்களைத் தவிர வேறு யாராகவும் இருக்கப் போவதில்லை. மேலும், லிபரான் கமிசனில் உ.பி. மாநில அரசு சார்பாக ஆஜராகும் வக்கீல் அசோக் சிறிவத்சவா, ''சாத் இறந்து போனதால், இந்த வழக்கு தொடர்பான எல்லா ஆவணங்களும், கோப்புகளும் எளிதில் மறைந்து போகும்'' என்கிறார். இதை வைத்துப் பார்க்கும் பொழுது, சாத்தின் கொலையும், கோப்புகள் திருடு போனதும் இந்து மதவெறியர்களின் கைவரிசையாகத்தான் இருக்கும் என்று கூறிவிட முடியும்!


படிப்பகம்

www.padippakam.com




# வாசகர் கடிதம்

✱ 1997 நவம்பரில் நடந்த கோவை கலவரத்தைப் பற்றி முசுலீம்களால் நடத்தப்படும் முசுலீம் பத்திரிகைகள் கூட முழுமையான செய்திகளைத் தரவில்லை; ஆனால் ''புதிய ஜனநாயகம்'' மட்டுமே துணிந்து உண்மைச் செய்திகளைத் தந்து, பாதிக்கப்பட்ட முசுலிம்களுக்கு ஆறுதலையும் புதிய நம்பிக்கையையும் தந்தது. அது முதல் நான் பு.ஜ.வின் தீவிர வாசகனாகி விட்டேன். ஜூலை 16-31 இதழின் பின் அட்டை கட்டுரையில் கபில்தேவ் - அசாருதீன் மீதான குற்றச்சாட்டு பற்றிய செய்தியில் மறைந்துள்ள ஒருதலைப் பட்சமான கண்ணோட்டத்தைப் பற்றி பு.ஜ. மட்டுமே உணர்ந்து எழுதியுள்ளது. முசுலிம்களும் முசுலிம் பத்திரிகைகளும் தங்களை தேச பக்தர்களாக காட்டிக் கொள்ள அசாருக்கு மட்டும் கண்டனம் தெரிவித்தபோதிலும் கூட, பு.ஜ. மட்டுமே மதச்சார்பின்மையுடன் பிரச்சினையைப் பார்த்து ஒருதலைப் பட்சமான இந்துவெறி பார்வையை அம்பலப்படுத்திக் காட்டியது. வெல்லட்டும் பு.ஜ.வின் புரட்சிப் பணி!

**- அம்ஜத் அலி,**
**கோவை.**

✱ காசுமீர் சுயாட்சி கோரிக்கை நிராகரிப்பானது மத ரீதியில் கூறுபோட செய்யப்படும் சதியே என்பதை தலையங்கம் தெளிவுபடுத்தியது. இலங்கையில் சிங்கள இனவெறி அரசு, தமிழ் பேசும் முசுலிம்களை எவ்வாறு பகடைக் காயாகப் பயன்படுத்த முயற்சிக்கிறதோ அதுபோலவே, காசுமீரிலும் இந்திய பாசிச அரசு, ஜம்முவிலுள்ள பண்டிட் (இந்து)களையும் லடாக்கிலுள்ள பவுத்தர்களையும் பயன்படுத்தி மதரீதியாகக் கூறு போடத் துடிக்கிறது என்ற உண்மை தெளிவாகியது. காசுமீர் சுயாட்சி தீர்மானத்தை எதிர்க்கும் தி.மு.க., ம.தி.மு.க., பா.ம.க., அகாலிதளம் ஆகிய சுயாட்சி சூரப்புலிகளின் துரோகத்தை திரைகிழித்துக் காட்டியது சிறப்பு.

**- செம்மலர் மா. நடராசன்,**
**அறந்தாங்கி.**

✱ கருப்பின விவசாயிகள் கற்றுத் தரும் பாடம்: கேளுங்கள் - தரமாட்டார்கள்; தட்டுங்கள் - திறக்கப்படாது; உடைத்தெறியுங்கள்! உள்ளே புகுங்கள்; அள்ளி வாருங்கள்; பகிர்ந்தளியுங்கள்! பிறகு பாருங்கள். நாடு முன்னேறுகிறதா. இல்லையா என்று!

**- தர்மராஜ்,**
**திருச்சி.**

✱ ஒரு சிறு விவசாயி காலையில் எழுந்தவுடன் தன்வயலுக்கு தண்ணீர் பாய்ச்சப் போவானா? அல்லது உழவர் சந்தைக்கு வருவானா? உழவர் சந்தைக்கு முறையாக வராவிட்டால் அவனது சந்தை டோக்கனை ரத்து செய்து விடுகிறார்கள். இதனால் விவசாயிகள் திண்டாடுகிறார்கள். இடைத்தரகர்களிடமிருந்து விவசாயிகளைக் காப்பாற்றவே உழவர் சந்தை என்று வசனம் பேசும் கருணாநிதி, விவசாயிகள் உழவர் சந்தைக்கே வரமுடியாதபடி செய்து வியாபாரிகள் சந்தையாக்கி விட்டார். இந்த மோசடியை பு.ஜ. மிக தெளிவாகப் படம் பிடித்துக் காட்டியது.

**- உமர் அலி,**
**திருச்சி.**

✱ உயிரைப் பணயம் வைத்து நாட்டையும் மக்களையும் காக்க இந்திய இராணுவம் பாடுபடுவதாகக் கூறி, ஆண்டுதோறும் நமது வரிப்பணத்திலிருந்து பல்லாயிரம் கோடிகளை வாரியிறைத்து, தேசபக்த நாடகமாடும் ஆட்சியாளர்கள், இந்திய இராணுவத்தை அமெரிக்காவுக்கு அடியாள் வேலை செய்யும் கூலிப் படையாக்கியுள்ளதை சியரா லியோன் கட்டுரை எடுப்பாக அம்பலப்படுத்திக்காட்டியது. ஆளும் வர்க்க தேசபக்த பசப்பல்களை உண்மை நிலவரங்களிலிருந்து திரைகிழித்துக் காட்டியது சிறப்பு.

**- வாசகர் வட்டம்,**
**சென்னை.**

---

புதுவையில் புதிய ஜனநாயகம் வாசகர் வட்டம் சார்பாக, ''புதிய பொருளாதாரக் கொள்கை - ஒரு கண்ணோட்டம்'', ''மாணவர்களும் அரசியலும்'' எனும் இரு தலைப்புகளில் கல்லூரி மாணவர்களும் இளைஞர்களும் பங்கேற்ற கருத்தரங்கம் சிறப்பாக நடைபெற்றது. ஜூலை 9-ந் தேதியன்று நடைபெற்ற இக்கருத்தரங்கிற்கு கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர் திருநாவுக்கரசு தலைமை தாங்கினார். கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர் கௌதமன், காரைக்கால் விவசாயக் கல்லூரி மாணவர் சரவணன், புதுவை பாரதிதாசன் கலைக் கல்லூரி மாணவி உமாமகேஸ்வரி, விவசாயக் கல்லூரி மாணவர் செந்தில் குமார், புதுவை மத்தியப் பல்கலைக் கழக மாணவி மீனாட்சி, வில்லியனூர் சங்கர வித்யாலயா மாணவர் மணிகண்டன் ஆகியோர் உரையாற்றினர். இறுதியாக, தஞ்சை மக்கள் கலை இலக்கியக் கழகத் தோழர் சாமிநாதன், தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் என்ற பெயரில் நாடு மீண்டும் காலனியாக்கப்படுவதையும், ஓட்டுக் கட்சிகளின் துரோகத்தையும் அம்பலப்படுத்தி, மாணவர்கள் சமுதாய அக்கறையுடன் முன்வர வேண்டிய அவசியத்தையும், புரட்சிகர அரசியல் தலைமையின்கீழ் அணிதிரண்டு போராட வேண்டிய கடமையையும் விளக்கிப் பேசினார். மாணவர்களின் அரசியல் - சமுதாய உணர்வை மேலும் செழுமைப்படுத்தும் வகையிலே அமைந்த இக்கருத்தரங்கம், இளைய தலைமுறையினரிடம் புதிய நம்பிக்கையை விதைத்துள்ளது.

**- வாசகர் வட்டம், புதுவை.**

## ரேசன் அட்டை வழங்கக் கோரி ஆர்ப்பாட்டம்

தர்மபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டத்தில் அனைத்து உழைக்கும் மக்களுக்கும் ரேசன் அட்டைகளை வழங்கக் கோரியும் அனைத்து பொருட்களையும் ரேசனில் முறையாக வழங்கக் கோரியும், உலக வங்கி உத்தரவுப்படி ரேசன் மானிய வெட்டு - ரேசன் பொருட்களின் விலை உயர்வை எதிர்த்தும் இப்பகுதியில் இயங்கிவரும் விவசாயிகள் விடுதலை முன்னணி, ஜூலை 27-ந் தேதியன்று ஆர்ப்பாட்டம் நடத்தியது. பென்னாகரம் வட்டாட்சியர் அலுவலகம் முன் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில், உலக வங்கி உத்தரவுப்படி ரேசன் கடைகளை மூடிவிட அரசு எத்தனிப்பதையும், மக்கள் விரோத ஆட்சியாளர்களால் நாடு மீண்டும் காலனியாக்கப்பட்டு வருவதையும், இவற்றுக்கெதிராக அனைத்து உழைக்கும் மக்களும் அணிதிரண்டு போராட வேண்டிய அவசியத்தையும் விளக்கி முன்னணித் தோழர்கள் சிறப்புரையாற்றினர். கைக்குழந்தைகளுடன் பெருந்திரளாகப் பெண்கள் பங்கேற்ற இந்த ஆர்ப்பாட்டம், பகுதிவாழ் உழைக்கும் மக்களிடம் உற்சாகமான ஆதரவைப் பெற்றதோடு, வட்டாட்சியர் அலுவலக ஊழியர்களிடமும் வரவேற்பைப் பெற்றது.

**- விவசாயிகள் விடுதலை முன்னணி, பென்னாகரம்.**

Published and Owned by R. SHANMUGARAJ, 25, Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, IInd Floor, 63, Arcot Rd., Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM
(TAMIL FORTNIGHTLY)

REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPER
FOR INDIA UNDER NO. 42648/85

Regd. No. TN/Chief.PMG- 544 / 2000

# இதுதான் இன்றைய இந்தியா



குழந்தைத் திருமணமே சமூக விரோதமானது, சட்ட விரோதமானது எனத் தடை செய்யப் பட்டிருக்கும் இந்த நவீன காலத்தில் தான், நான்கு வயது சிறுமிக்கும் நாய்க்கும் திருமணம் நடக்கிறது. மணமகள் அஞ்சு, மேற்கு வங்க மாநிலத்திலுள்ள மோகன்பூர் கிராமத்தைச் சேர்ந்த சிறுமி; மணமகன், புல்லட் என்ற பெயரில் அவள் வீட்டில் வளர்க்கப்படும் நாய். சிறுவர்கள் அப்பா - அம்மா விளையாட்டு விளையாடுவதைப் போல விளையாட்டாக நடந்த திருமணம் அல்ல இது. அழைப்பிதழ்கள் அச்சடிக்கப்பட்டு, உறவினர்களும் நண்பர்களும் அழைக்கப்பட்டு, இந்துமதச் சம்பிரதாயங்களின்படி நடந்த திருமணம் இது.

சிறுமி அஞ்சு அடிக்கடி நோய்வாய்ப் பட்டிருக்கிறாள். இதற்குத் தோசங்களும், கெட்ட ஆவிகளும், கிரகங்களும்தான் காரணம் எனக் கண்டுபிடித்த சோதிடர்கள், இந்த மூடத்தனமான திருமணத்தை நடத்தச் சொல்லி அஞ்சுவின் தந்தைக்குச் சொன்ன பரிகாரத்தின்படி நடந்த திருமணம் இது.

இந்தத் திருமணம் பற்றிய செய்தி பத்திரிகைகளில் வெளியான பிறகு, "இப்படிப்பட்ட மூடத்தனத்திலா இந்தியா வாழ்கிறது? இதற்கு ஒரு சிறுமி பலியாவதா?" எனக் கண்டனக் குரல்கள் எழும்பவே, அஞ்சுவின் தந்தையின் மீது சட்டம் பாய்ந்தது. இதை வைத்துக் கொண்டு இந்திய அரசு மூடநம்பிக்கைகளுக்கு எதிராகப் பாரபட்சமின்றி நடவடிக்கை எடுத்து வருவதாகக் கூறிவிட முடியுமா?



இதோ, மத்தியப் பிரதேச மாநில ஆளுநர் சீனிவாஸ் திவாரி முன்னிலையில் நடைபெறும் யாகம்தான் இந்தப் படம். கடந்த நான்கு ஆண்டுகளுக்குள் ம.பி.யைச் சேர்ந்த 12 சட்டமன்ற உறுப்பினர்கள் அடுத்தடுத்து இறந்து போய் விட்டனர். இதற்கு, "அம்மாநிலத்தின் புதிய சட்டமன்றக் கட்டிடம் வாஸ்து சாஸ்திரப்படிக் கட்டப்படவில்லை; அக்கட்டிடத்தில் புகுந்திருக்கும் துர்ஆவிகள்தான் சட்டமன்ற உறுப்பினர்களின் அகால மரணத்திற்குக் காரணம்" எனக் கண்டுபிடித்து, அந்தத் துர்ஆவிகளை விரட்டியடிக்க, அம்மாநில அரசு மக்களின் வரிப்பணத்தை வாரியிறைத்து இந்த யாகத்தை நடத்தியிருக்கிறது.

இதற்கும், அஞ்சுவின் தந்தை நடத்திய பரிகாரத்திற்கும் இடையே என்ன வேறுபாடு இருக்கிறது? அஞ்சுவின் தந்தையின் மீது பாய்ந்த சட்டம், இந்த முட்டாள்தனத்திற்கு எதிராக ஏன் பாயவில்லை? அஞ்சுவின் தந்தை சாதாரண குடிமகன், இவர்கள் அதிகாரத்தின் உச்சாணிக் கொம்பில் இருப்பவர்கள் என்பது மட்டும்தான் காரணமா? இதைவிட முக்கியமாக, துர்ஆவிகள் விரட்ட வேள்வி வளர்க்கும் பார்ப்பன மூடத்தனம், நமது நாட்டின் பண்பாடாகவே போதிக்கப்படுகிறது. அதனால்தான், சிறுமியை நாய்க்குத் திருமணம் செய்து வைக்கும் சகிக்க முடியாத மூடத்தனத்தை எதிர்ப்பவர்கள்கூட, துர்ஆவிகளை விரட்ட யாகம் வளர்க்கும் இந்தப் பண் பாட்டு மூடத்தனத்தைக் கையெடுத்துக் கும்பிடுகிறார்கள். தீ மிதிப்பது போன்ற காட்டுமிராண்டித்தனங்களும், கைம்பெண்களைப் பார்த்தால் போற காரியம் உருப்படாது போன்ற மூடத்தனங்களும் மதப் பண்பாடு என்ற பெயரில் புனிதப்படுத்தப்படுகின்றன.

அனைத்து மதங்களுமே, மதப் பண்பாடு, மத நம்பிக்கை என்ற போர்வையில்தான், மூடத்தனங்களையும், பிற்போக்குத்தனங்களையும் மக்கள் மத்தியில் திணித்து, ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. பகுத்தறிவுக்கும், அறிவியல் வளர்ச்சிக்கும், சமூக முன்னேற்றத்திற்கும் தடையாக நிற்கும் மதம் என்னும் நுகத்தடியை இன்னும் நாம் எத்தனை நாள் சுமந்து கொண்டு திரிவது?

படிப்பகம்